# மனிதர்

உமர் (ரலி) அவர்கள் உயர்ந்தவர்கள் மட்டுமல்ல, உயரமானவர்களும் கூட. மக்கள் மத்தியில் அவர்கள் நின்றால், மற்றவர்களை விட உயரமானவர்களாய்த் தெரிவார்கள். மக்கள் மத்தியில் அவர்கள் உட்கார்ந்திருந்தால், எழுந்து நிற்பவர்போல் தோன்றுவார்கள். எவ்வளவு பெரிய எதிர்ப்பிற்கிடையிலும் நிமிர்ந்திருப்பது அவர்களின் நிலை. எவ்வளவு பெரிய கூட்டத்திலும் உயர்ந்திருந்தது அவர்களின் தலை. அந்தத் தலையின் முன் பகுதி சற்று வழுக்கையாக இருந்தது. அறிவாளிகளுக்குப் பெரும்பாலும் தலை அப்படித்தான் இருக்கும் என்பர். அதற்கு ஆதாரமாய் அவர்களை விட்டு வேறு ஆள் தேட வேண்டிய அவசியமில்லை. அவர்களின் தலை மட்டும் நிமிர்ந்ததல்ல, தலைமயிரும் அப்படித்தான். அதனால் அவர்களின் தலைமயிர் பறப்பதுபோல் இருந்தது. அவர்கள் அணிந்திருந்த தொப்பி, அதை அடக்குவதுபோல் அமைந்தது. சில சமயங்களில் அவர்கள் தலைப் பாகை கட்டிக் கொண்டிருப்பார்கள்.

அவர்களின் உடல் நிறம் சிவப்புமல்ல, கருப்புமல்ல. சிவப்பும் கருப்பும் கலந்து கோதுமை நிறம் கொண்டது அவர்களின் உடல் என்று கொள்ளலாம். அவர்களின் கன்னங்கள் ஒட்டிப் போயும் இருக்கவில்லை. அதிக சதைப்பிடிப்புடனும் இருக்கவில்லை. கன்னங்களையும், தாடையையும் அடர்ந்த தாடி அணி செய்தது. அந்த தாடிக்கு அவர்கள் மருதாணிச் சாயம் இட்டிருந்தார்கள். வீரத்திற்கு அடையாளம் மீசை என்பர். அது உமர் (ரலி) அவர்களுக்குச் சற்று நீண்டதாய்த்தான் இருந்தது, ஆனால் சிலருக்கு மீசைக்கு ஏற்றாற் போல் உள்ளத்தில் உரமோ, உடலில் பலமோ இராது. ஆனால் உமர் (ரலி) அவர்கள்



அப்படி அல்ல. அதற்கு ஆதாரம் அண்ணல் நபி (ஸல்) அவர்கள், உமர் (ரலி) அவர்களுக்கு அளித்த இந்த அறிவுரை: ''உமரே! உம்மிடம் அதிக வலுவிருப்பினும், வலுவற்றவர்களைத் துன்புறுத்தாதீர்! ஹஜ்ருல் அஸ்வத் கல் பக்கம் நீர் செல்லும்போது, அங்கு எவரும் இல்லாமல் இருக்கக் காணின் (அதனைத் தொட்டு) முத்தமிடும்! இல்லையேல் தக்பீர் கூறி விட்டுக் கடந்து சென்று விடும்!''

உமர் (ரலி) அவர்களுக்கு அற்புத நயநா அமைந்திருந்தது. அதனால் அவர்களின் அதரம் விட்டு உதிர்ந்த சொற்கள் அத்தனையும் கவின் மிகுந்தவையாயும், கருத்துச் செறிந்தவையாவும் இருந்தன. அவர்கள் இடைக்கிடையே செய்த சொற்பொழிவுகள், இன்றும்கூட நாநயத்திற்கு ஒரு நல்ல உதாரணமாய் இருந்து கொண்டிருக்கின்றன. அவர்கள் கலீபாவாகக் கடமையை ஏற்றதும் செய்த சொற்பொழிவின் பகுதி இது: ''எல்லாம் வல்ல அல்லாஹ்வே! நான் கடுமையானவன். என்னை மென்மையாக்கு! இப்பொழுது அரபிகள் கட்டுப்படாத ஒட்டகை போன்றுள்ளனர். அவர்களுடைய மூக்கணாங்கயிறு என் கையில் கொடுக்கப்பட்டிருக்கிறது. பார்த்துக்கொள் அவர்களைப் பாதையில் வைத்திருக்க!'' அவர்கள் இன் னொரு சமயம் செய்த சொற்பொழிவின் துளி இது: ''நான் பணத்தைத் தூய்மையானதாய் வைத்திருக்க மூன்று வழிகளைக் கண்டிருக்கிறேன். முதலாவது, பணம் சட்டபூர்வமான வழியில் பெறப்பட வேண்டும். இரண்டாவது அது சட்டபூர்வமான காரியங்களுக்குச் செலவிடப்பட வேண்டும். மூன்றாவது, அதைச் சட்ட விரோதமான காரியங்களுக்குச் செலவிடாமல் இருக்க வேண்டும்.''

காலித் இப்னு வலீத் (ரலி) அவர்கள் விலக்கப்பட்டபின், பாரசீகப் போர் முனைக்குப் போக மக்கள் தயக்கம் காட்டிய போது, அவர்கள் செய்த சொற்பொழிவு, மக்களின் உணர்ச்சியைப் பொங்கிப் புரளச் செய்தது. அச்சொற்பொழிவைக் கேட்டுவிட்டு மக்கள், ''பாரசீகத்தை என்ன, பாருலகத்தையே வெல்லத் தயார்!'' என்று வீறு கொண்டு விளம்பலானார்கள். தமாஸ்கஸ் செல்லும் போது, ஜாபியாவில் வைத்து அவர்கள் செய்த சொற்பொழிவின் பகுதிகள், மக்களின் வாய்களில் பலகாலம் இருந்து கொண்டே இருந்தன. பொதுவாக அவர்கள் முன் தயாரிப்பு இன்றியே தான் பேசுவார்கள். முக்கியமான சமயங்களில் மட்டும், முன் தயாரிப் புடன் செல்வார்கள். அண்ணல் நபி (ஸல்) அவர்கள் இறந்ததும், சகீபா பனீ அல் சாயிதாவில் திரண்டிருந்த அன்ஸார்களைச் சந்திக்கப்போன போது, அவர்கள் அங்கு

என்ன பேச வேண்டும் என்பதைத் தம் மனத் திற்குள் தயாரித்துக் கொண்டுதான் சென்றனர்.

அவர்களால் எந்த விஷயம் பற்றியும் பேச முடியும். ஆனால் தம்மால் திருமணச் சொற்பொழிவு மட்டும் செய்ய இயலாது என்றார்கள் அவர்கள். அதற்குக் காரணம் இரண்டு. ஒன்று, திருமணச் சொற்பொழிவுகளைச் செய்யும் போது அமர்ந்திருப்பது; இரண்டு, திருமணச் சொற்பொழிவுகளில் பேச வேண்டிய விஷயம் அதிகமாய் அமைந்திராதது. அரசியல் சொற்பொழிவு செய்த முதல் அரபி அவர்கள் தாம். அவர்களின் குரல், சொற்களுக்கு அழுத்தம் கொடுக்க வசதியாக வன்மையானதாய் அமைந்திருந்தது. அதனால் அவர்கள் கூறிய கருத்துக்கள் மக்களின் காதுகளிலும் பாய்ந்தன, மனத்திலும் பாய்ந்தன. அவர்கள் தரையில் நின்று பேசினால், மேடையில் நின்று பேசுவது போல் இருந்ததால், அவர்களின் குரல் மக்களின் காதில் விழும்போது, அவர்களின் முகம் மக்களின் கண்களுக்குத் தெரிந்து கொண்டிருந்தது.

உள்ளத்தில் ஊறும் கருத்து நாவில் ஒலி வடிவம் பெறுகிறது, கையில் வரி வடிவம் அடைகிறது. நாவன்மையும், எழுத்து வன்மையும் ஒரு சேர, ஒரு சிலருக்குத்தான் அமைந்திருக்கும். இரண்டும் இணைந்து அமைந்திருந்த ஒரு சிலரில் உமர் (ரலி) அவர்களும் ஒருவர். அவர்களின் அறிக்கைகள், கடிதங்கள், ஆணைகள் இன்றைய தரத்தில் வைத்து நிறுத்தாலும், அவை தாமிருக்கும் தட்டைத் தாழ்த்த வல்லவை. எந்த விஷயம் பற்றி எழுதினாலும், அதில் இடம் பெறும் கருத்திற்குக் கவின் மிகு வடிவம் கொடுக்க, அவர்களால் முடியும் அம்ரின் ஆஸ் அவர்களுக்கு எழுதிய இந்தக் கடிதம், அதற்கு ஆதாரம்: ''உம்மை பதில் அளிக்காமல் இருக்கச் செய்வது இது. உமக்குக் கீழ் ஊழியம் புரிபவர்கள் நல்லவர்களாய் இல்லை. அவர்கள் உம்மைத் தங்களுக்குக் கேடயமாய் ஆக்கிக் கொண்டுள்ளனர். இது ஒரு நோய் ஆகும். அதற்குச் சரியான பரிகாரம் என்னிடம் இருக்கிறது. நான் உமக்கு அடிக்கடி எழுதிக் கொண்டிருக்கிறேன். நீர் அரசுப் பணத்தை அனுப்பாமல் அலட்சியமாய் இருக்கிறீர், அத்துடன் நேரடியாகப் பதில் கூறாமலும் தவிர்ந்து கொள்கிறீர். அபூ அப்துல்லாஹ்! கவலைப் படாதீர்! பாக்கி உம்மிடமிருந்து பெறப்படும். அதனை நீர் அளித்தே ஆகவேண்டும். ஆறு, முத்தை அளித்து விடுவதைப் போல் நீரும் பாக்கியைத் தந்துவிட நேரும்.''



அண்ணல் நபி (ஸல்) அவர்களிடம் இல்லாத ஒரு திறன் அபூபக்ர் (ரலி) அவர்களிடமும் இருந்தது. உமர் (ரலி) அவர்களிடமும் இருந்தது. அதுதான் கவியாக்கும் திறன். உமர் (ரலி) அவர்கள் அரிதாகவே கவி எழுதினார்கள். அவர்களைச் சிறிய கவிஞர், பெரிய சுவைஞர் என்று கூறலாம். அவர்களின் நெஞ்சம் அரபிக்கவிதகளின் மஞ்சமாக அமைந்திருந்தது. அத்துடன் அவர்களை, கவிதையின் தரத்தைக் கணிக்கும் திறத்தில் எவரும் மிஞ்ச இயலாது. அவர்களை அதிகம் மதித்த கவிஞர்கள் இம்ரவுல் கைஸ், சுஹீர், நாபிகா ஆகியோர் ஆவர். இவர்களில் அவர்களை அதிகம் கவர்ந்தவர் சுஹீர் தாம். அறிவும் அழகும் அமைந்த கவிதைகளை அவர்கள் திரும்பத் திரும்பக் கூறிச் சுவைப்பார்கள். அவ்விதக் கவிதைகளைத் தமக்கு ஓய்வு கிடைக்கும் போதெல்லாம் கூறச்சொல்லிக் கேட்டுக் கொண்டிருப் பார்கள். அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் ஒருமுறை இரவு முழுதும் கவிதை கூறிக்கொண்டிருந்தனர். அலுப்பில்லாமல் அவற்றை அவர்கள் கேட்டுக் கொண்டிருந்தார்கள். ஒருசமயம் பயணம் செய்த போது, அவர்களுடன் சென்றவர்கள், ஒட்டகை ஓட்டியின் கவிதைகளைக் கூறும்படி ரபாஹ் என்பவரை வேண்டினர். அங்குக் கலீபா இருந்தது அவரைத் தயங்கவைத்தது. அதை அறிந்ததும் கலீபா தமக்கு ஆட்சேபணை இல்லை என அறிவித்தார்கள். இதன்பின் ரபாஹ் அவர் பாட்டிற்குப் பாட ஆரம்பித்து விட்டார். அவர் பாட்டிற்குத் தடை இரவு கழிந்த பிறகு தான் இடப்பட்டது. பொழுது புலரப் போவதை அறிந்த கலீபா, ''இது அல்லாஹ்வை நினைக்க வேண்டிய நேரம்'' என்று கூறி எழுந்தார்கள்.

இவ்விதம் கலீபா உயர்ந்த சுவை உணர்ச்சி உள்ளவர்களாய் இருந்ததால், அவர்கள் வசைக் கவிகளையும், கேலிக் கவிதைகளையும் அறவே விரும்பவில்லை. அவர்கள் ஆட்சிக்கு வந்ததும் அவ்விதக் கவிதைகளின் ஆட்சி அடங்கியது. எவரும் அவ்விதக் கவிதைகளை எழுதக் கூடாது என அவர்கள் தடை விதித்தார்கள். தம் தடையை மீறிய ஹுதைபா என்பவரை அவர்கள் சிறைக்குள்ளும் தள்ளினார்கள். அறியாமைக் காலத்தில் இவ்விதக் கவிதைகளைக் குறைஷிகள் அண்ணல் நபி (ஸல்) அவர்களையும், அவர்களின் தோழர்களையும் கேலி செய்து பாடினர்.

குறைஷிகளுக்குக் குறைஷிகளின் முறையிலேயே பதில் அளிக்க ஹஸ்ஸான் பின் தாபித் (ரலி) அவர்களும், அவ்விதக் கேலிக் கவிதைகளை எழுதினர். அவர்களிடம் அவ்விதக் கவிதைகளை

இனிமேல் எழுத வேண்டாம் என்றும், அவை பழைய பகை மையைப் பசுமைப்படுத்தும் என்றும் கலீபா கூறினர். அறியாமைக் காலக் கவிதைகளில் பாலுணர்ச்சிதான் மேலோங்கியிருக்கும். அவ்விதக் கவிதைகளும் எழுதப்படக்கூடாது எனக் கலீபா தடை விதித்தனர்.

கவிதைகளில் மட்டுமல்ல, மக்கள் ஒருவருக்கொருவர் புரிந்து கொள்ளும் உரையாடல்களிலும்கூடத் தரக்குறைவான சொற்களுக்கு இடம் தரக்கூடாது என்பது கலீபா அவர்களின் கருத்தாகும். நாகரிகமான நல்ல சொற்களையே உரையாடல்களில் உபயோகப் படுத்த வேண்டும் என அவர்கள் விரும்பினார்கள். ஒருவர், ''என் பெற்றோர் ஹராத்தில் (தவறான முறையில்) பிறந்தவர்கள் அல்லர்'' எனப் பெருமையாகக் கூறியதை அறிந்தபோது, கலீபா, ''அவர் அவ்வாறு கூறுவதைத் தவிர்த்து, தம் பெற்றோரை நல்ல சொற்களைக் கொண்டு புகழ்ந்து பெருமைப்படுத்தியிருக்கலாம்'' என்று சொன்னதுடன், அவர் அவ்வாறு கூறியதற்காகச் சில கசையடிகள் கொடுக்கும்படிக் கட்டளையிட்டார்கள்.

இத்தகைய உயர்வான உள்ளம் பெற்றிருந்த உமர் (ரலி) அவர்களின் உடை உயர்வானதாய் இருக்கவில்லை. உயர் உடை, உயர் உள்ளத்திற்கு அடையாளம் ஆகாதல்லவா? அவர்கள் மிகவும் எளிமையான உடையைத்தான் தம் உடலில் அணிந்தார்கள். அவர்கள் கூறினர், ''அல்லாஹ்வின் பணத்திலிருந்து (பைத்துல் மாலிலிருந்து) எதுவும் எனக்கும் என் குடும்பத்திற்கும் ஹலால் ஆகாது. கோடை காலத்திற்கு ஓர் உடை, குளிர்காலத்திற்கு ஓர் உடை, சராசரி குறைஷியின் வருமானத்திற்குச் சமமான சம்பளம் தவிர்த்து'' என்று. அதனால் தான் ஆதி மனிதர் பிறந்ததிலிருந்து அன்றுவரை அவ்வளவு பெரிய அரசிற்கு அதிபதியாய் இருந்த் ஒருவர், இவ்வளவு எளிய உடை அணிந்திருக்கமாட்டார் என்று கூறும் விதம், அவர்களின் உடை இருந்தது. அவர்களின் உடலில் கிடந்த சட்டையிலிருந்த ஒட்டுக்கள் மட்டும் எண்பதாகும். அந்தப் பீற்றல்கள் துணிகளைக் கொண்டும், தோல் துண்டுகளைக் கொண்டும் ஒட்டுப் போட்டுத் தைக்கப்பட்டிருந்தன.

ஒரு சமயம் அவர்கள் அணிந்திருந்த அங்கியில் இரண்டு தோள் பட்டைகளுக்கும் இடையில் நான்கு ஒட்டுக்கள் போடப்பட்டிருந்தன. அவர்களின் அரையாடையில் பன்னிரண்டு ஒட்டுக்களை ஒரு சமயமும், பதினேழு ஒட்டுக்களை இன்னொரு சமயமும் தாம் பார்த்ததாக ஜைத் பின் தாபித் (ரலி) அவர்கள் கூறினர். முப்பது ஒட்டுக்கள் போடப்பட்ட சட்டை ஒன்றும் அவர்களிடம் இருந்தது. பாராண்ட அப்பார்த்திபர் ஜெருசலத்தில் தங்கியிருந்த போது அவர்களின் அங்கி முதுகுப் புறத்தில் கிழிந்துவிட்டது. அதற்குத் தாமே ஒட்டுப் போட்டிருப்பர், அவகாசம் இல்லாததால் ஒருவரிடம் கொடுத்து ஒட்டுப் போட்டுக் கொணரும்படிக் கூறினர்.



அவ்வாறே அதற்கு ஒட்டுப்போடப்பட்டும், புது அங்கி ஒன்று தைக்கப்பட்டும் கொண்டு வரப்பட்டது. தைக்கப்பட்ட பழைய அங்கியைத் தைரியத்துடனும், தயாரிக்கப்பட்ட புதிய அங்கியைத் தயக்கத்துடனும் தோழர்கள் அவர்கள் முன் வைத்தனர் புதிய அங்கியைத் தடவிப் பார்த்துவிட்டு, ''இது மிகமிக மெல்லி துணியால் ஆக்கப்பட்டது'' எனக் கூறி அதனை அவர்கள் திருப்பிக் கொடுத்தனர். தம் பழைய அங்கியை எடுத்து அணிந்து கொண்டு, ''என் அங்கிதான் நன்றாக இருக்கிறது. அது நன்றாக வியர்வையை உறிஞ்சுகிறது'' என்று கூறினர். பொதுவாக அவர்கள், ''மிகச் சிறந்த ஆடை என்பது மிகவும் குறைந்த துன்பம் கொடுப்பது'' என்று கூறுவது வழக்கம்.

மெல்லிய துணியால் ஆன உடைகளை அவர்கள் வெறுத்தார்கள். முரட்டுத் துணியால் ஆன ஆடைகளையே அவர்கள் அதிகம் விரும்பினார்கள். மெல்லியத் துணியால் ஆன உடைகளை அணிந்திருப்பவர்களை அவர்கள் வெறுத்தார்கள், சில சமயங்களில் அடித்தார்கள். ''மெல்லிய துணி பெண்களிடமே இருக்கட்டும்'' என உரைத்தார்கள். முரட்டுத் துணி உடலை நன்கு மறைக்கும், நன்கு உழைக்கும் என்பது அவர்களின் கருத்தாகும். அதனால் அவர்கள் பொது நிதியி (பைத்துல்மாலி) லிருந்து பெற்ற ஆடைகளும் முரட்டுத் துணியால் ஆனவையாகவே இருந்தன.

அவர்கள் வழக்கமாகச் சட்டைதான் அணிவார்கள். ஆனால் அவர்களிடம் அதிகச் சட்டைகள் இருந்ததுமில்லை, இந்தக் குறையை அவர்கள் சட்டை செய்ததுமில்லை. ஒரு சமயம் அவர்கள் தம்மைக் காண வந்தவர்களை அதிகநேரம் காக்க வைக்க வேண்டியதாயிற்று. அதற்குக் காரணம் அவர்கள் தம்மிடம் இருந்த ஒரே சட்டையையும் துவைத்துப் போட்டிருந்ததாகும். ஒருநாள் அவர்கள் ஜும்ஆத் தொழுகைக்குச் சற்றுத் தாமதித்து வரவேண்டியதாயிற்று. அதற்கான காரணத்தை அவர்கள் பள்ளியுள் நுழைந்ததும், இவ்விதம் அறிவித்தார்கள்: ''நான் என் உடையைத் துவைத்துக் கொண்டிருந்தேன். அந்த

உடையைத் தவிர்த்து என்னிடம் வேறு உடைஇல்லை. அதனால்தான் உரிய நேரத்தில் பள்ளிக்கு வரமுடியாமல் போய் விட்டது.'' அவசியத்திற்காகக் கூட அவர்கள் அதிக உடைகள் வைத்துக் கொள்ள விரும்பவில்லை, ஆடம்பரங்கள் அனைத்தும் அவசியம் என்று தான் முதலில் ஆரம்பமாகின்றன என்பதை அவர்கள் நன்கு அறிவார்கள்.

பழைய துணிகளும் பயனுள்ளவைதாம் என்பது அவர்களின் கருத்தாகும். புதிய ஆடைகளைக் கண்டதும், சிலர் பழைய ஆடைகளைத் தூக்கி எறிந்து விடுவர். கலீபா அவர்களுக்கு இது அறவே பிடிக்காது, ஒரு சமயம் அவர்களை அப்துல்லாஹ் பின் உமைர் சந்தித்து தாம் ஹுனைன் போரில் கலந்து கொண்டதைக் கூறி உதவி கோரினார். அவருக்கு அவர்கள் அறுநூறு தீனார்களும், ஒரு போர்வையும் அன்பளிப்புச் செய்தனர். அக்கணமே அவர், பழைய போர்வையைத் தூக்கி எறிந்து விட்டுப் புதிய போர்வையைப் போட்டுக் கொண்டார். உடனே அவர்கள் அந்தப் பழைய போர்வையைக் கையில் எடுத்து உதறி அவரிடம் கொடுத்து விட்டு உரைத்தனர்: ''இதை வீட்டில் இருக்கும்போது உபயோகப்படுத்திக் கொள்ளும்! வெளியே போகும் போது புதியதைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.''

ஒட்டுக்கள் போட்ட உடையைத் தாம் அணிந்தாலும் சமுதாயம் ஒட்டுமொத்தமாக ஒட்டுப்போட்ட உடையை தான் அணிய வேண்டும் என்று அவர்கள் விரும்பவில்லை. ஒரு நாள் அவர்களைப் பார்க்க யமன் ஆளுநர் வந்தார். அவர் மிகவும் ஆடம்பரமான ஆடை அணிந்திருந்தார்; அழகாகத் தலைக்கு நெய்யிட்டு நீவியிருந்தார். அவர் இருந்த கோலம் கலீபா அவர்களைக் கோபம் கொள்ள வைத்தது. ஆடம்பர ஆடைகளை அகற்றிவிட்டு எளிய உடையில் இருக்கும்படி அவருக்கு அவர்கள் ஆலோசனை கூறினார்கள். அடுத்தமுறை அவர்களைக்காண அவர் வந்தார். அவர் தோற்றம் அவர்களை வெறுப்புக் கொள்ள வைத்தது. அவர் கந்தல் ஆடை அணிந்திருந்தார்; தலைக்கு நெய்யிட்டு நீவவில்லை. அவரைப் பார்த்து அவர்கள், ''கந்தல் ஆடைகளும் அணியக் கூடாது, ஆடம்பர ஆடைகளையும் உடுத்தக் கூடாது!'' என்று அறிவுரை பகர்ந்தார்கள்.

உடையில் இருந்த எளிமை உணவில் இராவிடில் அது ஊரை ஏய்ப்பதாகாதா? கலீபா அவர்களின் உடையிலிருந்த எளிமைக்குக் கொஞ்சமும் குறைந்திருக்கவில்லை அவர்களின் உணவிலிருந்த எளிமை. எளிய உடையை மனம் ஏற்றுக் கொள்வதைப்போல்,



பெரும்பாலும் எளிய உணவை நாவு ஏற்றுக் கொள்ளாது. மனம், நாவு, இரண்டும் அவர்களிடம் சிறிதும் இடக்குச் செய்யவில்லை. முரட்டுத் துணியை உடல் ஏற்றுக் கொண்டது. வரட்டு ரொட்டியை நாவு ஏற்றுக் கொண்டது.

சலிக்கப்படாத மாவில் நெய்தடவப்படாது தயாரிக்கப்பட்ட ரொட்டியையே அவர்கள் விரும்பிச் சாப்பிட்டார்கள். ''கேள்வி கணக்குக் கேட்கப்படும் என்னும் பயம் மட்டும் இல்லை என்றால், வறுத்த கறி சாப்பிடுவேன்'' என அவர்கள் உரைத்தார்கள். அவர்களின் ஒருநாள் உணவிற்கு இரண்டு திர்ஹங்கள் போதுமானவையாய் இருந்தன. கடின ரொட்டி, மறுமை நாள் கேள்வி கணக்கின் கடுமையைப் போக்கும் என்று அவர்கள் கருதினார்கள். தேனை நீரில் கலந்து கொடுக்கப்பட்டபோது, அதனை அருந்த மறுத்த அவர்கள் ''அதற்கான கேள்வி கணக்கு விசாரணையை என்னை விட்டும் விலக்குங்கள்!'' என மொழிந்தார்கள். முரட்டு ரொட்டியையாவது சுடச்சுடச் சாப்பிட்டார்களா? அல்ல. காய்ந்த ரொட்டியைத்தான் அவர்கள் சாப்பிட்டார்கள். அதனை மென்மைப்படுத்த சில சமயம் தண்ணீரிலோ, சைத்தூன் எண்ணெய்யிலோ தோய்த்துக் கொள்வதுண்டு.

ஒரு முறை யஸீத் இப்னு அபூசுப்யான் (ரலி) அவர்கள் ஒரு விருந்திற்கு அவர்களை அழைத்திருந்தனர். அவர்கள் முன் விசேஷ உணவு வகைகள் கொண்டுவந்து வைக்கப்பட்டிருந்ததைக் கண்டதும், கண்டத்தில் நின்ற உணவைக்கூட அவர்கள், விழுங்க விரும்பவில்லை. உண்பதை உடனே நிறுத்தி விட்டு ''உமரின் உயிர் எவன் கைவசம் உள்ளதோ அவன்மீது ஆணையாக, அல்லாஹ்வின் தூதர் அவர்களை நீங்கள் பின்பற்ற வில்லையானால் (அல்லாஹ்) உங்களை நேரான பாதை (சிராத்துல் முஸ்தகிம்) விட்டும் விலகச் செய்து விடுவான்'' என விளம்பினார்கள். ஒரே சமயத்தில் உணவு விரிப்பில் இருவகைக் குழம்புகள் இருப்பதை அவர்கள் அனுமதிப்பதில்லை. ஒரு சமயம் குழம்பு ஆறிவிட்டது என்பதற்காக, அவர்களின் மகள் அதில் கொஞ்சம் நெய் போட்டு விட்டார். இது அவர்களை அதிருப்திக் கொள்ளச் செய்தது. அரிதாகவே அவர்களின் உணவில் கறி, சைத்தூன் எண்ணெய், பால், காய்கறி, காடி ஆகியவை இடம் பெற்றிருக்கும். பல சமயங்களில் காய்ந்த கறிதான் இருக்கும். சில சமயங்களில் தான் புதிய கறி இருக்கும். அவர்களின் இவ்வெளிய உணவு பற்றித் தம் கருத்தை உக்பா இப்னு ஃபர்கத் கலீபா முன் வைத்தே வெளிப்படுத்தி விட்டார். அது கேட்டு அவர்கள், ''உமக்குக் கைசேதம் தான். நான்

உலகில் வைத்தே என் பாகத்திற்குரிய நிஃமத்தை அருந்தி அதன் பலனையும் அடைந்து கொள்வேனா என்ன?'' என்று அவரைப் பார்த்துக் கேட்டார்கள்.

இந்த எளிய உணவைக் கூட, கலீபா அவர்கள் வயிறார உண்டதில்லை. அவர்கள் ஏழு அல்லது ஒன்பது பிடிக்குமேல் உண்டது கிடையாது. ''மனிதனுக்குச் சில பிடிகளே போதும்'' என்னும் அண்ணல் நபி (ஸல்) அவர்களின் சொல், அவர்களின் நெஞ்சம் விட்டும் என்றும் நீங்கியதில்லை. ஒரு முறை அவர்கள் தம் புதல்வருக்கு, ''(ரொட்டியுடன்) ஒரு முறை கறியும், ஒருமுறை நெய்யும், ஒருமுறை பாலும், ஒரு முறை சிருக்காவும் (சேர்த்து) உண்! ஒருமுறை வெறும் ரொட்டியும் உண்! இது நடுத்தர உணவாகும்'' என அறிவுரை பகர்ந்தார்கள். அவர்களின் வீட்டில் மாதக் கணக்கில் மாவு இராது. அதனால் ஏழு அல்லது ஒன்பது பிடியும் இழுபறியாகிவிடும். இதற்குப் பரிகாரம், கலீபா அவர்களின் கைவசம் எப்பொழுதும் இருந்து கொண்டிருந்தது. அது தான் மாவு இல்லை என்றதும் நோன்பு வைத்து விடுவது. ஆண்டில் பெரும்பகுதி மாவு இராததால் கலீபா, ஆண்டில் பெரும்பகுதி நோன்பு இருந்தார்கள்.

இவ்விதம் ஆண்டில் பெரும் பகுதி நோன்பிருந்தும், நோன்பில்லாத நாட்களில் மிகவும் குறைவாகவே உணவு அருந்தியதும், மல்லர்களைப் புரட்டிய அவர்களின் உடல் வலிமையை வடித்து விடுகின்றன. அதனால் அவர்கள் பிற்காலத்தில் உடல் நலமும், பலமும் குறைந்த ஒருவராகவே இருந்தார்கள். அவர்களின் நலனில் அக்கறை கொண்ட நல்ல நண்பர்கள் சிலர் ஒருநாள் அவர்களிடம் வந்து, ''அமீருல் முஃமினீன் அவர்களே! தாங்கள் நோன்பு நோற்பதைக் குறைத்துக் கொண்டு வயிறார உண்ணும் வழக்கத்தை மேற்கொண்டால், இன்னும் ஊக்கமாக உழைக்க முடியும் அல்லவா?'' என்று கூறினர். ஆனால் அவர்கள் கூறியதைக் கலீபா அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. வயிறார உண்டு, தொந்தியும் தொப்பையுமாய் இருப்பவர்களை அவர்களுக்கு அறவே பிடிக்காது. அப்படி இருந்த ஒருவரைப் பார்த்து அவர்கள், ''நிராகரிப்பவருடைய வயிறு மாதிரி இருக்கிறதே உம் வயிறு'' என்று கூறினார்கள். கறிக் கடைப்பக்கம் அதிகமாய்க் காணப்படுபவர்களிடம் அவர்கள், ''கறி அடிக்கடிவாங்கி உண்ணாதீர்! சாராயம் சாப்பிடுவதுபோல் அது வழக்கமாகிவிடும்'' என்று சொல்வார்கள். ஒருநாள் அவர்கள் ஜாபிர் தம் கையில் கறித்துண்டு வைத்திருப்பதைக் கண்டார்கள். ''இது என்ன ஜாபிர்?''



என்று கேட்டார்கள். ''கறிமீது விருப்பமாயிருந்தது. அதனால் இதை வாங்கினேன்'' என்றார் ஜாபிர். ''இவ்வளவையுமா ஜாபிர் நீர் விருப்பப்பட்டு வாங்கினீர்? இந்த இறைவசனத்திற்கு நீர்பயப்படவில்லையா?' என்று கேட்டு விட்டுக் கலீபா, ''அச்சயம் (பாவம் செய்த) அவர்களுக்கு, விரோதமாக, அவர்களுடைய செவிகளும், அவர்களுடைய கண்களும், அவர்களுடைய (மாமிசம்) தொலிகளும், அவை அவை செய்தவற்றைப் பற்றி சாட்சியம் கூறும்'' என்னும் இறைவசனத்தை ஓதிக்காட்டினார்கள். தினமும் அவர்கள் கறிக்கடைகள் பக்கம் கையில் பிரம்புடன் செல்வார்கள். எவராவது தொடர்ந்து கறி வாங்குவதாகத் தெரிந்தால், அவரைப் பிரம்பால் மிரட்டி, ''உம் பக்கத்து வீட்டார், உறவினர் ஆகியோருக்காக உம் வயிற்றைக் காலியாக வைத்திருக்கக் கூடாதா?'' என்று கேட்பார்கள்.

'நாம் கூறுவதைத்தான் கலீபா அவர்கள் கேட்க மாட்டேன் என்கிறார்கள், அவர்களின் மகள் கூறுவதையாவது கேட்க மாட்டார்களா?' என நண்பர்கள் எண்ணினர். எனவே அவர்கள் ஹஃப்ஸா (ரலி) அவர்களைக் கலீபா அவர்களிடம் அனுப்பி வைத்தனர். ஹஃப்ஸா (ரலி) அவர்கள் கலீபா அவர்களிடம் வந்தார்கள். ''எந்தையே! தங்களுக்குப் பல நகரங்களிலிருந்தும் கொள்ளைப் பொருள்கள் வருவதால், தாங்கள் இந்த ஆடையினும் மிருதுவான அடையை அணிய வேண்டும், தாங்களும் தங்களுடன் இருப்பவர்களும் இந்த உணவினும் நல்ல உணவை சமைத்துக் கொள்ள வேண்டும்'' என வேண்டினார்கள். அதைக் கேட்டதும் ஆத்திரம் ஏற்பட்டாலும் அடக்கிக் கொண்டு கலீபா கூறினார்கள். ''கணவரின் நிலையை மனைவியைப் போல் அவ்வளவு நன்றாக மற்றவர்களால் அறிந்திருக்க இயலாது. அல்லாஹ்வின் தூதர் நிலையை மற்றவர் அறிந்திருப்பதினும் நன்றாக நீர் அறிந்திருக்கிறீர். எனவே நான் கேட்கும் கேள்விகளுக்கு அல்லாஹ்மீது ஆணையாக நீர் (பதில்) கூறும்! அல்லாஹ்வின் தூதர் அவர்களுக்கு நபிப்பட்டம் வந்து பல ஆண்டுகள் வரை, அவர்களும், அவர்களின் வீட்டாரும் பகலில் உண்டால், இரவில் பட்டினி கிடந்ததும் இரவில் உண்டால் பகலில் பட்டினி கிடந்ததும் உமக்குத் தெரியாதா? நான் ஆணையிட்டுக் கேட்கிறேன். கைபர் கோட்டையைப் பிடிக்கின்ற வரை, பல ஆண்டுகள் ஆனபோதும், அவர்கள் பேரீத்தம் பழம்கூட வயிறார உண்டதில்லை என்பது உமக்குத் தெரியாதா? இன்னும் ஆணையிட்டுக் கேட்கிறேன். ஒரு நாள் அவர்கள் முன்பாக தட்டு ஒன்றில் உணவு கொண்டுவந்து

வைக்கப்பட்டபோது, அது பொருத்தமில்லா உணவாய் இருந்ததால், அவர்களின் முகத்தில் கோபக்குறி தோன்றியதும், 'அதைத் தரையில் வையுங்கள்!' என்று அவர்கள் கூறியதும் நீர் அறியாததவையா? இன்னும் ஆணையிட்டுக் கேட்கிறேன். இரவில் இரட்டையாக மடிக்கப்பட்ட ஒரு கம்பளிமீது அவர்கள் உறங்கிவந்ததையும், ஓர் இரவு அது நான்காக மடிக்கப்பட்டதால் அது மிருதுவாக இருக்க, அதைப்பற்றி அவர்கள் அடுத்த நாள், 'இந்த மிருதுவானது என்னை இரவின் தொழுகையிலிருந்து விலக்கி வைத்தது. ஆகையால் கம்பளியை இரண்டு மடிப்பிற்கு மேல் அதிகப்படுத்தாமல், முன் போலவே செய்யுங்கள்!' என்று கூறியதையும் நீர் அறியமாட்டீரா? இன்னும் நான் ஆணையிட்டுக் கேட்கிறேன். ஒரு நாள் அவர்கள் தம் உடையைத் துவைத்து உலரவைத்தபோது அது உலர்வதற்குள் பிலால் தொழுகைக்கு 'பாங்கு' சொன்னதையும், அப்பொழுது அவர்களிடம் வேறு உடையில்லாததால் வெளியே செல்ல முடியாமல் போனதையும் நீர் அறியமாட்டீரா? (இன்னும் ஆணையிட்டுக் கேட்கிறேன்) பனீலபர் கோத்திரத்தைச் சேர்ந்த பெண் மணி ஒருவர் அவர்களுக்கு, அரையாடையும் போர்வையும் நெய்து, முதலில் நெய்து முடித்த போர்வையை அவர்களுக்கு அனுப்பி யதையும், அதை அவர்கள் முதுகில் போட்டு முன் புறமாக முடி போட்டுக் கொண்டு வெளியே போனதையும், அப்போது அவர் களிடம் அந்தப் போர்வையைத் தவிர்த்து வேறு போர்வை இல்லாத தையும் நீர் அறியமாட்டீரா?'' இவ்விதம் கலீபா அவர்கள் கேள்வி களை அடுக்கியதும், ஹஃப்ஸா (ரலி) அவர்களால் கூற இயன்ற தெல்லாம் இதுதான்: ''தந்தையே! தாங்கள் வினவிய இவை அனைத்தும் எனக்குத் தெரியும்.''

இதைக்கேட்டதும் கலீபா அவர்கள் அழுதார்கள். அவர்கள் அழுவதைப் பார்த்ததும் ஹஃப்ஸா (ரலி) அவர்களுக்கும் அழுகை வந்துவிட்டது. இருவரும் உணர்விழக்கும் அளவு அழுதார்கள். அந்த உருக்கமே இருவரின் உயிருக்கும் இறுதி உண்டு பண்ணி விடுமோ என அஞ்சத்தக்க அளவு அழுதார்கள். அழுகை ஓய்ந்து சற்று அமைதி ஏற்பட்டதும், கலீபா கூறினார்கள்: ''என் நலம் விரும்புவர்களிடம் (இதைச்) சொல்லும்! அல்லாஹ்வின் தூதர் அவர்கள், தம் உதாரணத் தின் மூலம் ஒரு முன்மாதிரியை உண்டு பண்ணியுள்ளனர். அந்த முன் மாதிரியை நான் பின்பற்ற விரும்பு கிறேன். நான், அல்லாஹ்வின் தூதர், அவர்களின் தோழர் அபூபக்ர், அந்த பாதையைத் தொடர்ந்த மூன்று பேர்கள் இருக்கிறோம்.



''ஒருவர் தம் இலட்சிய எல்லையை அடைந்துவிட்டார், அவர் களுடன் சேர்ந்து கொள்வதில் வெற்றி பெற்று விட்டார். மூன்றாமவர் தம் பயணத்தைத் தொடங்கியிருக்கிறார். அவர், அவர்களின் அடியைப் பின்பற்றினால் அவர்களுடன் சேர்ந்து கொள்வார். அவர் தடுமாறி னால், அவர்களின் வழியை விட்டு விலகினால், அவர் இலட்சிய எல்லையை அடையமாட்டார்''. மேலும் கலீபா கூறினார்கள்: ''அவர்கள் இருவரும் (அல்லாஹ்வின் தூதர், அபூபக்ர் (ரலி) ஒரே பாதையில் நடந்தனர். நானும் அதே பாதையில் தான் நடப்பேன். அவ்விருவரின் பாதையை விட்டும் வேறு பாதையில் நடந்தால், அவ்விருவருக்கும் கிடைத்த பாக்கியங்கள் எனக்குக் கிடைக்காமல் போய்விடும், அதனால் அல்லாஹ் மீது ஆணையாக, அவர்கள் வாழ்ந்தது போன்ற கடின வாழ்க்கைக்கே என்னை நிர்ப்பந்திப்பேன். அப்பொழுதுதான் அவர்களுக்குக் கொடுக்கப்படுவது போன்ற இன்பங்கள் எனக்கும் கொடுக்கப்படும்.''

இவ்விதக் கொள்கை கொண்டிருந்ததால் கலீபா அவர்கள், தாமும் உயரிய உணவு உண்ணவில்லை, தம் விருந்தினர்களுக்கும் உயரிய உணவு கொடுக்க இயலவில்லை. உயரிய உணவு அவர்கள் உண்ண முடியாததற்குக் காரணம் அவர்களின் மனம். உயரிய உணவு விருந்தினர்களுக்குக் கொடுக்க இயலாததற்குக் காரணம் பணம். அவர்கள் தமக்குக் கிடைக்கும் குறைந்த அளவு உதவிப் பணத்திலும் பெரும் அளவு பிறர்க்குக் கொடுத்துவிடுவார்கள். அதனால் அவர்கள் குறைந்த அளவு பணத்தைக் கொண்டே குடும்பம் நடத்த வேண்டி யிருந்தது. வீட்டில் தயாரிக்கப்படும் எளிய உணவை அருந்தும்போது, அவர்கள் சந்தோஷப்படுவார்கள். ஆனால் அவர்களின் விருந்தினர்கள் அதை அருந்தும் போது சங்கடப்படுவார்கள். ஒருமுறை அவர்களைக் காண இராக் நாட்டிலிருந்து சில விருந்தினர்கள் வந்திருந்தனர். அவர்களில் ஜரீர் இப்னு அப்துல்லாஹ்வும் இருந்தார். அவரால் கலீபா அவர்கள் அளித்த உணவை அருந்தவே இயலவில்லை.

ஒரு நாள் அவர்களின் வீட்டிற்கு உக்பா இப்னு ஃபர்க்கத் வந்தார். அவருக்கு அவர்கள் தாம் எந்த உணவை அருந்துவர்களோ அந்த உணவை அளித்தார்கள். அவரால் அதனை உண்ணவே இயல வில்லை. ''இங்கு நல்ல கோதுமை கிடைக்காதா?'' என்று அவர் கேட்டார். ''கிடைக்கும்'' என்று கலீபா பதில் கூறினார்கள். ''அதில் ஏன் ரொட்டி தயாரிக்கக் கூடாது'' என்று அவர் கேட்டார். ''அதே வித ரொட்டியை என் விரிந்த அரசிலுள்ள முஸ்லிம்கள் அனைவராலும்

அருந்த முடிகிறதா? அவ்விதமாயின் நான் எப்படி அந்த ரொட்டியை உண்ண முடியும் என் மக்கள் எல்லோருக்கும் அது கிடைக்காமல் இருக்கையில்?'' என்று பதில் சொல்லிவிட்டுப் பகர்ந்தார்கள், ''எல்லாப் பாவங்களையும் நான் இவ்வுலகிலேயே அனுபவித்து முடித்துவிட வேண்டும் என விரும்புகிறீர் போலும்'' என்று. தம்மிடம் இருக்கும் எளிய உணவைக் கொடுக்க அவர்கள் எப்பொழுதும் தயாராய் இருந் தார்கள். ஒருநாள் அபூ ஹுரைரா (ரலி) அவர்கள், அவர்களைச் சந்தித்து ஓர் ஆயத்தை ஓதுமாறு கூறினர். அவர்களை அவர்கள் தம் வீட்டிற்கு அழைத்துச் சென்று அந்த ஆயத்தை ஓதிக் காட்டினர். இப்படி அண்ணல் நபி (ஸல்) அவர்களின் தோழர்கள் கூறினார்கள் என்றால், அதன் பொருள் அவர்கள் பசியோடிருக் கிறார்கள், அதை வெளிப்படையாகக் கூற வெட்கப்படுகிறார்கள் என்பதாகும். அப்படி அவர்கள் கூறினால் அவர்களை வீட்டிற்கு அழைத்துச் சென்று, உணவு கொடுத்து அதன்பின் அந்த ஆயத்தை ஓதிக்காட்டுவது வழக்கம். அன்று இது உமர் (ரலி) அவர்களுக்கு அறவே நினைவு வரவில்லை.

உமர் (ரலி) அவர்களின் வீட்டிலிருந்து வந்த அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் அளவற்ற பசிக்கிறக்கத்தினால் குப்புற விழுந்து விட்டனர். அப்பொழுது பார்த்து அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அங்கு வந்தனர். தம் அருமைத் தோழரின் நிலை அறிந்து பதறி, ''அபூ ஹுரைராவே!'' என அன்புடன் அழைத்து, அவர்களின் கையைப் பிடித்துத் தூக்கி நிறுத்தி, அவர்களின் வயிறு முட்டும் அளவு அருந்தப் பால் அளித்தனர்.

பிறகு அபூஹுரைரா (ரலி) அவர்கள் உமர் (ரலி) அவர்களைக் கண்டு, இந்த விஷயம் பற்றிக் குறிப்பிட்டு, ''உம்மைவிட அதிக அருகதையுள்ளவரிடத்தில் அதனை அல்லாஹ் ஏற்படுத்தினான்'' என்று கூறிவிட்டு, ''அல்லாஹ் மீது ஆணையாக, அந்த ஆயத்தை உம்மிடம் ஓதக் கோரினேன். உம்மைவிட அதனை நான் நன்றாக ஓதக் கூடியவன்'' என்றனர். தாம் செய்த தவற்றை உணர்ந்து கொண்டு உமர் (ரலி) அவர்கள் உரைத்தனர்: ''அல்லாஹ்மீது ஆணையாக, எனக்குச் சிவந்த ஒட்டகைகளின் மந்தை இருப்பதை விட, உம்மை (என் வீட்டிற்கு) நுழையச் செய்து உணவளிப்பது எனக்கு அதிகப் பிரியமானது.''

கலீபா விருந்தினர்களுக்கு அளிக்கும் உணவுதான் எளிமையாக இருக்கும், உபசரிப்பு எளிமையாக இராது. தம் விருந்தினர்களுக்கு எழுந்து நின்று பணிவிடை செய்வதே அவர்களின் பழக்கமாகும். ''ஏன் இப்படிச் செய்கிறீர்கள்?'' என்று ஒரு சமயம் ஒருவர் கேட்டபோது, ''விருந்தினர்கள் வரும்போது, அவர்களுடன் அமரர்களும் வந்து நிற்பர்''. என அல்லாஹ்வின் தூதர் அவர்கள் சொல்லக் கேட்டிருக் கிறேன். அமரர்கள் நின்று கொண்டிருக்கும் போது நான் அமர்ந்திருக்க நாணுகிறேன்'' என்று அவர்கள் பதில் பகர்ந்தனர்.



உடையிலும், உணவிலும் எளிமை இருந்ததென்றால், அதன் அடித்தளம் உள்ளத்தின் எளிமையாகும். கலீபா அவர்கள் உள்ளத்தில் எளிமையுள்ளவர்களாய் இருந்ததால், அவர்கள் மிகவும் சாதாரண வேலைகளையும்கூட அசாதாரண அடக்கத்துடன் செய்தார்கள். ''நான் உங்களுக்கிடையில் ஒரு சாதாரண முஸ்லிமுக்கு மேல் இல்லை'' என்று அவர்கள் அடிக்கடி கூறுவார்கள். நாள் முழுதும் அவர்களின் கவனத்திற்கு எத்தனையோ கடமைகள் காத்திருக்கும். அந்நிலை யிலும் அவர்கள் இந்தக் கடமைகளைத் தட்டிக் கழித்ததில்லை.

காலை புலர்ந்ததும் அவர்கள், போர்க்களம் போயிருக்கும் வீரர்களின் வீடுகளுக்குச் சென்று கடைத் தெருவில் ஏதாவது சாமான் வாங்கிவர வேண்டுமா என்று கேட்பார்கள். அண்ணல் நபி (ஸல்) அவர்கள் மக்காவிலிருக்கும் போது இப்படி உதவியற்ற ஏழைப் பெண்களின் வீடுகளின் கதவைத் தட்டி முகம்மது கடைத் தெருக்குப் போகிறார் ஏதாவது சாமான் வாங்கி வரவேண்டுமானால் கூறுங்கள்'' என்று கேட்பர். அவர்கள் கூறும் சாமான்களை வாங்கித் தூக்க முடியாமல் தூக்கிக் கொண்டுவந்து கொடுப்பர்.

இதையே அண்ணல் நபி (ஸல்) அவர்களின் அன்புத் தோழரான உமர் (ரலி) அவர்களும் அப்படியே பின்பற்றினர். வீரர்களின் வீடுகளிலிருக்கும் பெண்கள், கலீபா அவர்களுடன் தம் பணிப் பெண் களை அனுப்புவர். அவர்கள் கேட்ட சாமான்களைக் கலீபா வாங்கிக் கொடுத்தனுப்புவார்கள். போர்க் களங்களிலிருந்து வரும் கடிதங் களையும் கலீபா தாமே எடுத்துச் சென்று, உரியவர்களிடம் ஒப்படைப் பார்கள். அத்துடன் ஒரு நாளைக் குறிப்பிட்டு, அந்நாளில் தூதுவர் போர்க் களம் போகிறார் என்றும், அவரிடம் கொடுத்தனுப்பக் கடிதங்களைத் தயாராய் வைத்திருங்கள் என்றும் கூறுவார்கள். கடிதம் எழுதக் காகிதம், மை, எழுதுகோல் ஆகியவற்றையும் அவர்களே கொடுப்பார்கள். கடிதம் எழுதத் தெரியாத பெண்களுக்குத் தாமே கதவுக்கு வெளியே உட்கார்ந்து கொண்டு எழுதிக் கொடுப்பார்கள்.

தோல் பைகளில் நீர் நிரப்பித் தம் தோள்மீது சுமந்து கொண்டு சென்று, ஆதரவற்ற விதவைகளுக்கு அளிப்பார்கள். அனாதைகளுக்குச் சேர வேண்டிய பொருள்களையும் தம் தோள் நோவைப் பாராமல் சுமந்து கொண்டு சென்று கொடுப்பார்கள்.

ஒரு நாள் அவர்களைக் காண அஹ்னப் பின் கைஸ், முக்கிய மனிதர்கள் சிலருடன் வந்தார். அப்பொழுது அவர்கள் அங்குமிங்கும் பரபரப்புடன் ஓடிக் கொண்டிருந்தார்கள். ''வாருங்கள்! இந்த வேலை யில் என்னுடன் சேர்ந்து கொள்ளுங்கள்! பொது நிதியைச் சேர்ந்த ஒட்டகை ஒன்று ஓடிப் போய்விட்டது'' என்று அவர்கள் தம்மைக் காண வந்தவர்களைப் பார்த்துக் கூறினார்கள். அவர்களில் ஒருவர், ''ஏன் இந்த ஒட்டகையைப் பிடிக்க ஓர் அடிமையை அனுப்பக் கூடாது?'' என்று கேட்டபோது, ''என்னை விடப் பெரிய அடிமை யார்?'' என்று அவர்கள் கேட்டார்கள்.

இன்னொரு நாள் அவர்கள் பொதுநிதியைச் சேர்ந்த ஒட்டகைகள் சிலவற்றிற்கு எண்ணெய் தேய்த்துக் கொண்டிருந்தார்கள். அதைப் பார்த்து ஒருவர், ''அமீருல் முஃமினீன் அவர்களே! அடிமை எவரை யாவது கொண்டு இந்த வேலையைச் செய்யக் கூடாதா!'' என்று கேட்டபோது, ''முஸ்லிம்களுக்குத் தலைவனாக இருப்பவனே, முஸ்லிம்களுக்கு ஊழியனாகவும் இருக்கிறான்'' என்று அவர்கள் பதில் கூறினார்கள். இவ்விதம் அவர்கள் கருதியதால் தான், அவர்கள் தமக்கு ஒய்வு கிடைக்கும் போதெல்லாம் சென்று பொது நிதியைச் சேர்ந்த ஒட்டகைகளை ஒவ்வொன்றாகப் பிடித்துப் பார்த்து, அவற்றிற்குப் பற்கள் எத்தனை, அவற்றின் அடையாளங்கள் எவை எனக் குறித்துக் கொண்டார்கள்.

மக்களுக்கு ஊழியராக அவர்கள் இருக்க விரும்பினார்கள், தமக்கு ஊழியர் இருக்க வேண்டுமென அவர்கள் விரும்பவில்லை. ஒரு சமயம் அவர்களை ஒரு கூட்டத்தார் வந்து சந்தித்துத் தம் கஷ்டங் களைக் கூறினர். அவர்களின் கஷ்டங்களுக்கான காரணத்தைப் புரிந்து கொண்டு கலீபா கூறினார்கள்: ''நீங்களே உங்களை அந்தக் கஷ்டங் களுக்கு ஆளாக்கிக் கொள்கிறீர்கள். அல்லாஹ்வின் பாதையில் செலவிட வேண்டிய பணத்தை, பெருமைக்காக ஊழியர்களை வைத்துச் செலவிடுகிறீர்கள்.''

மதீனாவிலிருந்து மக்காவுக்குப் பலமுறையும், மதீனாவிலிருந்து சிரியாவுக்குச் சில முறையும், அவர்கள் பயணம் செய்துள்ளனர். அந்தப்



பயணங்களில் அவர்கள் ஒருபோதும் ஒரு கூடாரத் துணியைத் தம்முடன் கொண்டு சென்றதில்லை. மரநிழலில் அவர்கள் இளைப் பாறிக் கொள்வார்கள். மரக்கிளைகள் மீதும், புதர்கள் மீதும் துணியை விரித்துப் போட்டுக் கொண்டு அதன்கீழ் படுத்துக் கொள்வார்கள். ஒரு பயணத்தின்போது அவர்கள் நகரை நெருங்கும் சமயம் தம் ஒட்டகை விட்டு, உபாதைக்காகக் கீழே இறங்கினர். அப்பொழுது அவர்களுடன் வந்திருந்தவர் அவர்களின் அடிமை அஸ்லம் மட்டுமே. கலீபா தவறுதலாகவோ, வேண்டும் என்றோ தம் ஒட்டகையை விட்டு விட்டு, அஸ்லமின் ஒட்டகை மீது ஏறிக் கொண்டனர். மாற்றப்பட்ட சுமைகளுடன் ஒட்டகைகள் இரண்டும் நகரை நோக்கி வேகமாக நடைபோட்டன. கலீபா அவர்களைக் கண்டு கைலாகு கொடுத்து அழைத்துச் செல்ல மக்கள் நகர எல்லைக்கு வந்து நகராமல் நின்று கொண்டிருந்தனர்.

ஓர் ஒட்டகையில் ஒட்டுக்கள் இல்லாத சட்டை போட்டவர், இன்னோர் ஒட்டகையில் ஒட்டுக்கள் நிறைந்த சட்டை போட்டவர், கலீபா அவர்களின் ஒட்டுச் சட்டையைப் பற்றி அறிந்திராதவர்கள் அவர்கள். எனவே ஒட்டுக்கள் இல்லாச் சட்டை அணிந்திருந்த அஸ்லமைக் கலீபா எனக் கருதிக் கொண்டு, மக்கள் அவர் பக்கம் செல்லலாயினர். மக்கள் புரியும் தவற்றைப் புரிந்து கொண்டு, அஸ்லம் கலீபா அவர்கள் பக்கம் தம் கையைக் காட்டினார். அகலக் கண்களைத் திறந்து பார்த்த மக்கள், அகல வாய்களைத் திறந்தார்கள். ஒட்டுக்கள் நிறைந்த சட்டை அணிந்து கொண்டு மெலிந்த ஒட்டகை மீது கலீபா அமர்ந்திருந்தார்கள். தம்மை மக்கள் வியப்புடன் பார்த்து விட்டுத் தமக்குள் ஏதோ பேசிக் கொள்வதைக் கவனித்த கலீபா அவர்கள் ''மக்கள் ஆடம்பரத்தின் அடையாளங்களைத் தேடுகின்றனர்.'' என்று கூறினர்.

அவர்களைப் பார்க்க பாரசீக அமைச்சரின் தூதுவன் ஒருவன் மதீனா வந்தான். அவன் மக்களைப் பார்த்து, ''உங்களின் அரசர் எங்கிருக்கிறார்?'' என்று கேட்டான். அந்நேரத்தில் கலீபா எவ் விடத்தில் இருப்பார்களோ, அவ்விடத்தை மக்கள் அவனுக்குக் காட்டினர். அப்பொழுது அவர்கள் காவல் கடமைகள் புரிந்ததால் ஏற்பட்ட களைப்பால் தம் சவுக்கைத் தலையின்கீழ் வைத்துக்கொண்டு படுத்திருந்தார்கள். வெய்யில் அவர்கள்மீது விழுந்து கொண்டிருந்தது. அவர்களின் நெற்றியிலிருந்து வடிந்த வியர்வையால் மண் தரை நனைந்திருந்தது. ஆடம்பர மிக்க பாரசீக அரசவையிலிருந்து வந்த

அவன், இதைகண்டு அதிசயித்தான். 'வையத்து அரசர்களெல்லாம் இவருக்கு அஞ்சுபவர்களாய் இருக்க, இவர் இவ்வியல்பை ஏற்றிருப்பது ஆச்சரியமே' என நெஞ்சால் எண்ணினான் நாவால் கூறினான் கலீபா அவர்களைப் பார்த்து: ''நீங்கள் நீதிபுரிவதனால்தான் நிர்பயமாக நித்திரை செய்கிறீர்கள். எங்கள் அரசர் அநியாயம் பண்ணு வதனால் எப்பொழுதும் திகில் பிடித்தவராய் இருக்கிறார். உங்களின் மார்க்கமே உண்மையான மார்க்கம் என சாட்சியம் பகர்கின்றேன். தூதுவனாக மட்டும் நான் இல்லாதிருந்தால், நிச்சயம் இஸ்லாத்தை ஏற்றிருப்பேன். அடுத்தமுறை வரும்போது அவசியம் நான் இஸ்லாத்தைத் தழுவுவேன்.''

இவ்விதம் எளிமையானவர்களாய் இருந்ததால் தான் கலீபா அவர்கள், பிறர் தமக்கு அறிவுரை கூறவேண்டும் என விரும் பினார்கள். ''மக்கள் எனக்கு நல்ல அறிவுரைகள் கூறாவிடில், அவர்கள் பிரயோசனமற்றவர்கள். அவற்றை நான் கவனிக்காவிடில் நான் பயனற்றவன்'' என்று அவர்கள் கூறுவது வழக்கம். அத்துடன் அவர்கள் தம் தவறுகளைப் பிறர் எடுத்துக் காட்டவேண்டும் என விரும்பினார்கள், அப்படி எடுத்துக் காட்டப்படும் தவறுகளை உடனுக்குடன் திருத்திக் கொண்டார்கள்.

ஒரு நாள் விபச்சாரம் புரிந்த பெண் ஒருத்தியைக் கல்லால் எறிந்து கொல்லுமாறு அவர்கள் கட்டளையிட்டார்கள். இது ஆங்கிருந்த முஆத்பின் ஜபல் (ரலி) அவர்களை அதிர்ச்சி கொள்ளச் செய்தது. அதற்குக் காரணம் கலீபா கொடுத்த தண்டனை அல்ல, தண்டனை கொடுக்கப்பட்ட பெண் இருந்த நிலை. அவர்கள், கலீபா அவர்களைப் பார்த்து, ''அமீருல் முஃமினீன் அவர்களே! அந்தப் பெண் கர்ப்ப வதியாக இருக்கிறாள். அவளைக் கொன்றால் அவள் வயிற்றிலிருக் கும் குழந்தையும் இறந்து விடும்'' என்று கூறினர். இதைக்கேட்டதும் கலீபா தீயை மிதித்துவிட்டவர் போல் திடுக்கிட் டார்கள். உடனே தம் கட்டளையைத் திரும்பப் பெற்றுக் கொண்டு உரைத்தார்கள். ''முஆத் இல்லாவிட்டால் உமர் அழிந்து போயிருப்பார்'' என்று.

இன்னொரு நாள் கலீபா, பெரும் தவறு புரிந்து விட்ட ஒரு பெண்ணை கல்லால் எறிந்து கொல்லும் படிக் கட்டளையிட்டார்கள். அதை அறிந்து அலறிப்போய் அலீ (ரலி) அவர்கள், ''பைத்தியக்காரர், அறிவுரப் பெறாதவர், தூங்குகிறவர் ஆகிய மூவரின் குற்றங்கள் சட்டத்திலிருந்து அப்பாற்பட்டவை'' என்று அல்லாஹ்வின் தூதர்



அவர்கள் கூறியதை நீங்கள் கேட்கவில்லையா?'' என வினவினர். ''ஆம் அதற்கு என்ன?'' என்று கலீபா அவர்கள் கேட்டபோது ''அந்தப் பெண் ஒரு பைத்தியக்காரி'' என்று அலீ (ரலி) அவர்கள் பதிலிறுத்தனர், உடனே தம் கட்டளையைத் திரும்பப் பெற்றுக் கொண்டு கலீபா கூறினார்கள், ''அலீ இல்லாவிட்டால் உமர் அழிந்திருப்பார்'' என்று. இதனால் தான் கலீபா சொன்னார்கள், ''எவர் என் குறைகளை என் முன் எடுத்துக் காட்டுகிறாரோ, அவரே என் நண்பர். எவர் என்முன் புகழுகிறாரோ, அவர் என் கழுத்தை அறுப்பவர் போன்றவர்'' என்று.

ஒருநாள் இரவு கலீபா அவர்கள் அப்துர்ரஹ்மான் இப்னு அவ்ஃபு (ரலி) அவர்களுடன் மதீனாவின் தெரு ஒன்றில் சென்று கொண்டி ருந்தனர். அப்பொழுது ஒரு வீட்டிலிருந்து வந்த ஒளியும், ஒலியும் அவர்களின் கவனத்தைக் கவர்ந்தன. அவர்கள் இருவரும் அவ் வீட்டை அடைந்து அதன் வாயிலில் நின்றனர். வாயில் கதவு மூடப் பட்டிருந்தது. ஆனால் அதனுள் இருந்தோரின் வாய்க் கதவுகள் மூடப் பட்டிருக்கவில்லை. ஆனந்த மேலீட்டால் ஏற்பட்ட ஆரவார ஒலி வீட்டின் உள்ளிருந்து வந்து கொண்டிருந்தது. அதைக் கேட்டு இருவரும் திகைத்தனர். ''அல்லாஹ்வின் தூதர் உறங்கும் மதீனாவில் இப்படி ஓர் உல்லாசமா? இது யார் வீடு என்று தெரியுமா?'' என்று கலீபா, அப்துர்ரஹ்மான் இப்னு அவ்ஃபு (ரலி) அவர்களிடம் கேட்டனர். ''தெரியாது'' என்று அப்துர்ரஹ்மான் இப்னு அவ்ஃபு (ரலி) அவர்கள் சொன்னபோது, ''எனக்குத் தெரியும்'' என்று கலீபா அவர்கள் கூறினர். ''இது ரபீஆ பின் உமையாவுக்குச் சொந்தமான வீடு. இதில் இப்பொழுது குடித்து விட்டுக் கும்மாளம் அடித்துக் கொண்டி ருக்கின்றனர்'' என்று கலீபா கூறியதும், அப்துர்ரஹ்மான் இப்னு அவ்ஃபு (ரலி) அவர்கள், ''இறைவன் தடை செய்த இன்னொன்றை நாம் செய்யவேண்டிய நிலையில் இருக்கிறோம். 'நடக்கும் தீமையைத் துப்பறியாதீர்கள்!' என இறைவன் கூறியிருக்கிறான் அல்லவா?'' என்று கலீபாவைப் பார்த்துக் கேட்டார்கள். அதைக் காதுற்றதும் கலீபா அவர் களின் நெற்றி சுருங்கியது. ''ஆம், நாம் தவறு செய்கிறோம்'' என்று கூறிவிட்டு அங்கிருந்தும் அகன்றார்கள்.

இன்னொரு நாள் இரவு கலீபா நகர் வலம் வந்து கொண்டிருந் தார்கள். அப்பொழுது ஒரு வீட்டிலிருந்து கும்மாள ஒலி கேட்டது. வாயில் கதவு தாளிடப்பட்டிருந்ததால் கலீபா அவர்கள் சுவர் ஏறி வீட்டிற்குள் இறங்கினார்கள். அங்கு ஓர் ஆடவன் பெண் ஒருத்தியுடன்

இருந்து கொண்டிருந்தான். அவர்கள் இருவரும் கணவன், மனைவி அல்ல என்பதை அறிந்து கொண்டு, ''அல்லாஹ் வின் பகைவனே! உன்னுடைய இத்தகைய பாவத்தை ஒருவருக்கும் தெரியாமல் அல்லாஹ் மறைத்து விடுவான் என எண்ணிக் கொண் டாயா?'' என்று கலீபா கேட்டார்கள். உடனே அவன், ''அமீருல் முஃமினீன் அவர்களே! அவசரப்படாதீர்கள்! நான் ஒரு பாவம்தான் செய்தேன். தாங்களோ மூன்று பாவங்கள் செய்திருக்கிறீர்கள். 'நீங்கள் குற்றங்களைத் தேடித் திரிய வேண்டாம்!' என அல்லாஹ் கூற வில்லையா? தாங்கள் (குற்றத்தைத்) தேடிக்கண்டு பிடித்தீர்கள். 'வீடுகளில், அவற்றின் வாயில் வழியாகவே பிரவேசியுங்கள்!' என அல்லாஹ் சொல்லவில்லையா? தாங்கள் வீட்டின் மேலேறி வந்தீர்கள். 'பிறருடைய வீடுகளில் அவர்களின் அனுமதியில்லாமலும், அவர்களுக்கு 'சலாம்' சொல்லாமலும் உள் நுழைய வேண்டாம்!' என அல்லாஹ்வின் தூதர் அவர்கள் அறிவிக்கவில்லையா? தாங்கள் அனுமதியில்லாமலும், 'சலாம்' சொல்லாமலும் உள்ளே நுழைந்தீர் கள்'' என்று கூறினான். அவன் சாட்டிய குற்றங்கள் அத்தனையையும் ஏற்றுக் கொண்டு கலீபா அங்கிருந்தும் நடந்தார்கள்.

ஒருமுறை அண்ணல் நபி (ஸல்) அவர்களின், சிறிய தந்தை அப்பாஸ் (ரலி) அவர்கள் கலிபா அவர்கள் மீது குற்றம் ஒன்று கூறினர். அண்ணலின் பள்ளிக்கு வெகு அருகில் அப்பாஸ் (ரலி) அவர்களின் வீடு இருந்தது. அதன் கூடல்வாய்த் தண்ணீர் பள்ளியில் விழுந்து தொழுபவர்களுக்கு சங்கடத்தை உண்டு பண்ணியது. அதனால் அதனைக் கலீபா அகற்றச் செய்தனர். வெளியே சென்றிருந்த அப்பாஸ் (ரலி) அவர்கள் வீடு வந்ததும், கூடல்வாய் அகற்றப்பட்டிருப்பதை அறிந்து ஆத்திரம் அடைந்தனர். உடனே அவர்கள் காஜி உபை பின் கஃபிடம் சென்று, இதுபற்றி வழக்குரைத்தார்கள். காஜி, கலீபாவை அழைத்தார்; கலீபா வந்தார்கள். அப்பொழுது காஜி ஏதோ வேலை செய்து கொண்டிருந்ததால், அவர் உடனே கலீபா அவர்களை உள்ளே அழைக்கவில்லை. வெகு நேரம் வரை கலீபா வெளியே நின்று கொண்டிருந்தார்கள். கலீபா நின்று கொண்டிருந்தது நீதி சாய்ந்து விடவில்லை என்பதற்கு சரியான ஆதாரமாகும். காஜி தம் வேலை களை முடித்துக் கொண்டு வந்தபின் விசாரணை ஆரம்பமாகியது. கலீபா ஏதோ கூற வாயெடுத்தார்கள். ''நீர் வாயைத் திறக்கக் கூடாது! வழக்கைக் கொணர்ந்தவரே முதலில் வழக்கைக் கூறவேண்டும். அதுவரை நீர் அமைதியாய் இரும்!'' என்றார் காஜி. அப்பாஸ் (ரலி)



அவர்கள் தம் வழக்கை இவ்விதம் எடுத்துரைத்தார்கள்: ''இக் கூடல்வாய் இன்று நேற்று வைக்கப்பட் டதல்ல. அல்லாஹ்வின் தூதர் காலத்திலிருந்து அது அங்குதான் இருந்து வந்தது. கலீபா அபூபக்ர் காலத்திலும் அது அங்குதான் இருந்தது. இப்பொழுது உமர் அதனை எடுத்து எறிந்துவிட்டார். அதனால் நான் இழப்பும் இதயத்தில் வருத்தமும் அடைந்திருக்கிறேன். எனக்கு நீதி தேவை.''

இதைக் கேட்டு, ''உங்களுக்கு நீதி வழங்கப்படும்'' என்று கூறி விட்டுக் காஜி, ''இப்பொழுது நீர் என்ன கூறப் போகிறீர்?'' என்று கலீபா அவர்களைப் பார்த்துக் கேட்டார்.

''அதனை எடுக்கச் செய்தவன் நான் தான்'' என்று கலீபா கூறினார்கள்.

''ஒருவர் வீட்டில் அவர் அனுமதியின்றி ஏன் இவ்விதம் செய்தீர்?'' என்று காஜி கேட்டபோது, ''தண்ணீர் விழுந்து மக்களின் துணிகளில் தெறிக்கிறது. (எனவே) நான் அதனை மக்களின் சௌகரி யத்திற்காகவே செய்தேன். ஆகாத காரியம் எதனையும் நான் செய்து விடவில்லை'' என்று கலீபா பதில் கூறினார்கள்.

இதன்பின் காஜி, அப்பாஸ் (ரலி) அவர்களைப் பார்த்து, ''நீங்கள் என்ன கூறுகிறீர்கள்?'' என்று கேட்டபோது, ''அல்லாஹ்வின் தூதர் தம் கைத்தடியைக் கொண்டு தரையில் அடையாள மிட்டனர். அந்த அடையாளப்படியே தான் நான் வீடு கட்டினேன். வீடு கட்டிய பிறகு அல்லாஹ்வின் தூதர், தம் தோள் மீது ஏறி நின்று கொண்டு அந்தக் கூடல் வாயை வைக்கும்படி (என்னிடம்) கூறினர். அதை நான் ஏற்கவில்லை. (அவர்கள்) அதிகம் வற்புறுத்தியதன் பேரில் அவர் களின் தோள் மீது ஏறி நின்று கொண்டு நான் (அதை) வைத்தேன். அதை அமீருல் முஃமினீன் (இப்பொழுது) எடுத்து விட்டார்'' என்று அப்பாஸ் (ரலி) அவர்கள் பதில் கூறினார்கள்.

''அதற்கு சாட்சி உண்டா?'' என்று காஜி கேட்டபோது, ''ஒன்று, இரண்டல்ல, பல சாட்சிகள் கொண்டு வருகிறேன்'' என்று கூறிவிட்டு வெளியே சென்று அப்பாஸ் (ரலி) அவர்கள் சிறிது நேரத்தில் மதீனத்து மனிதர்கள் சிலரை அழைத்துக் கொண்டு வந்தார்கள். அவர்கள் அனைவரும் அப்பாஸ் (ரலி) அவர்கள் உரைப்பது உண்மையே என்று சாட்சியம் கூறினர்.

இது நிகழும் பொழுது கலீபா தலைகுனிந்து உட்கார்ந்திருந் தார்கள். தாம் செய்தது தவறு என உணர்ந்ததும் எழுந்தார்கள், அப்பாஸ்

(ரலி) அவர்களிடம் வந்தார்கள். ''என்னை மன்னியுங்கள்! அல்லாஹ்வின் தூதர் அவர்களே அதனை வைத்தார்கள் என்பது எனக்குத் தெரியாது. அது தெரிந்திருந்தால் மறந்தும்கூட நான் இதைச் செய்திருக்க மாட்டேன். நீங்கள் என் தோள் மீது ஏறி நின்று கொண்டு அந்தக் கூடல் வாயை அது முன்பு இருந்த இடத்தில் வைத்து விடுங்கள்!'' என்று கூறினார்கள். காஜியும் அதை ஏற்றுக் கொண்டார். அப்பாஸ் (ரலி) அவர்கள், கலீபா அவர்களின் தோள் மீது ஏறி அதை வைத்து விட்டு இறங்கியதும், உயர்ந்தார்கள் தம்முடைய இவ்வுரையாலும், இச் செயலாலும், ''பண்பு (அதப்) இன்றி உம் தோள் மீது ஏறியதற்காக என்னை மன்னியும்!'' இவ்விதம் சொல்லி விட்டு அந்த வீட்டை அக்கணமே பள்ளிக்கு அன்பளிப்புச் செய்தார்கள்.

ஒரு நாள் கலீபா தெரு வழியே சென்று கொண்டிருந்தார்கள். அப்பொழுது ஓர் இடத்தில் மக்கள் கூட்டமாக நின்று கொண்டிருந்தனர். 'எதற்குக் கூட்டம்?' எனப் பார்க்க அவர்கள் அங்கு நின்றார்கள். கழுதை மீது அமர்ந்திருந்த மூதாட்டி ஒருவர் அவர்களைக் கண்டு கொண்டார். ''உமரே!'' என அவர்கள், அவர்களை அழைத்தார். ''ஒரு காலமிருந்தது. உம்மை நான் உக்காஸ் சந்தையில் வைத்துப் பார்த்திருக்கிறேன். (அப்பொழுது) நீர் தடியைக் கையில் பிடித்துக் கொண்டு, குழந்தைகளை அதட்டிப் பயமுறுத்திக் கொண்டு திரிந்தீர். அப்பொழுது நீர் சிறுவராய் இருந்தீர். அந்தச் சிறு வயதின் காரணமாக, உம்மை மக்கள் உமைர் என்று அழைத்துக் கொண்டிருந்தார்கள். அதற்குப் பிறகு நீர் அதிசீக்கிரமாய் வாலிபத்தை அடைந்து விட்டீர். அப்பொழுது மக்கள் உம்மை உமர் என அழைக்கலானார்கள். அதற்குப் பிறகு நீண்ட காலம் சென்று விட்டது. இப்பொழுது மக்கள் உம்மை அமீருல் முஃமினீன் என அழைக்கத் தொடங்கியிருக்கிறார்கள். சற்று சிந்தித்துப் பாரும்! எங்கிருந்து எங்குவரை அல்லாஹ் உம்மை உயர்த்தி விட்டான். பொது மக்களிடம் உம்முடைய இயற்கையான கடின சுபாவத்துடன் நடந்து கொள்ளாதீர்! பொது மக்கள் விஷயத்தில் அல்லாஹ்வுக்கு அஞ்சிக் கொள்ளும்! (இதை) நன்கு உள்ளத்தில் ஆழப்பதிய வைத்துக் கொள்ளும்! எவருக்கு அல்லாஹ்வுடைய தண்டனையைப் பற்றிப் பயம் இருக்குமோ, அவர் கியாமம் (உலகின் இறுதி நாள்) வெகு தூரத்தில் இருப்பதாகக் கருத மாட்டார். எவருக்கு இறப்புடைய கவலை இருக்குமோ, அவர் அலட்சியமாக வாழமாட்டார். நன்மை எங்கே நழுவி விடுமோ என அவர் எந்நேரமும் கவலைப்பட்டுக் கொண்டிருப்பார். எவர்



விசாரணையை நம்புகிறாரோ அவர் அதன்பின் வரும் வேதனையைப் பற்றி அச்சம் கொண்டிருப்பார்.''

கழுதை மீதிருந்து கொண்டு மூதாட்டி இவ்வாறு கூறியதைக் கேட்டுக் கொண்டே இருந்த கலீபா அவர்கள் கண்ணீர் உகுத்தவாறே உரைத்தார்கள், ''உமர் அப்படித்தான் நடந்து வருகிறார், எப்போதும் நடந்து வருவார்,'' என்று. அவர்கள் அவர் பேசுவதை நீண்ட நேரம் நின்று கேட்டுக் கொண்டிருந்ததைக் கண்ட மக்கள், ''அமீருல் முஃமினீன் அவர்களே! இந்தக் கிழ மாதுக்காகவா நீங்கள் இப்படி நின்று கொண்டிருக்கிறீர்கள்?'' என்று கேட்டபோது, கலீபா அவர்கள் கூறினர்: ''அல்லாஹ்வின்மீது ஆணையாகச் சொல்கிறேன். அவர் என்னைப் பொழுது புலர்வதில் இருந்து அது அடையும் வரை தடுத்து நிறுத்திக் கொண்டாலும், பர்லான தொழுகைகளுக்கு அல்லாமல் வேறு காரியங்களுக்காக நான் அவரை விட்டு அகல மாட்டேன். அவர் யார் என்று அறிவீர்களா? அவர் தாம் கவ்லா பின்து தஃலபா. அவருடைய சொல்லை ரப்புல் ஆலமீன் ஏழு வானங்களுக்கு மேலிருந்து செவியேற்கிறான். அவர் சொல்லை ரப்புல் ஆலமீனே செவியேற்கும்போது உமர் அதைக் கேட்காமல் இருக்க முடியுமா?''

ஒருநாள் கலீபா அவர்களின் வாயிலில் துறவி ஒருவர் நின்று கொண்டிருந்தார். அவரைப் பார்த்து அவர்கள் அவர்மீது கருணை கொண்டு அவரின் தேவையை நிறைவேற்றினார்கள். அடுத்த நாளும் அந்தத் துறவி அங்கு வந்து நின்று கொண்டிருந்தார். அவரைப் பார்த்து அவர்கள், ''உமரின் வாயில் வெறுமையானது. ஆனால் அல்லாஹ்வின் வாயில் நிறைவானதாய் இருக்கிறது. எனவே அதனைப் பற்றி நிற்பீராக!'' என்று கூறினார்கள். அவர் அங்கிருந்து நடக்கத் தொடங்கினார். அவரை அழைத்து, ''நீர் திருக்குர்ஆனைக் கற்றிருக்கிறீரா? அதனைத் தொடர்ந்து ஓதி வாரும்! அது நிச்சயமாக உம்மைச் செல்வராக்கிவிடும்!'' என அவருக்கு அறிவுரை பகர்ந்தார்கள்.

இதன்பின் அவர் கலீபா அவர்களின் வீட்டுப் பக்கம் வரவே இல்லை. அவர் நிலை என்ன என்று அறிய அவர்கள் மனத்தில் ஆவல் ஏற்பட்டது. அவர் தம் குடிசையில் இனிய குரலில் திருக்குர் ஆனை ஓதிக் கொண்டிருப்பதைக் கண்டு, கலீபா அவர்கள், அவர்கள் அருகில் சென்று அமர்ந்தார்கள். அவர் ஓதி முடித்ததும், ''உம் நிலை என்ன? இப்பொழுதெல்லாம் என்னிடம் வருவதில்லையே, ஏன்?'' என்று அவரிடம் கேட்டார்கள். அதற்கு அவர், ''அருள் நிறைந்த திருமறை

என்னைச் செல்வனாக்கி விட்டது. உமருடைய வாயிலில் எனக்கு என்ன வேலை? இறைவனுடைய திருமறையின் அறிவமுதம் அருந்தி அகமகிழ்ந்து கொண்டிருக்கும் எனக்கு எவரும் தேவையில்லையே'' என்று கூறினார். ''திருமறையில் நீர் என்ன பெற்றீர்? அது எப்படி உம்மைச் செல்வராக்கியது?'' என்று கலீபா கேட்டார்கள். ''உங்களுடைய உணவும், உங்களுக்கு வாக்களிக்கப்பட்டதும் வானில் இருக்கின்றன' என்னும் திருமறைவசனத்தைத் திரும்பத் திரும்ப ஓதினேன், அதன் மெய்யான பொருளை உணர்ந்தேன். என் உணவு உண்மையில் வானில் தான் இருக்கிறது. அதனை நானோ பூமியில் தேடி அலைகிறேன். எனக்கு வாக்களிப்பட்ட ஒன்று என் காலடியில் வந்து விழுகிறது. என் இறைவன் என் உணவுக்குப் பொறுப் பேற்றிருக்கும்போது நான் ஏன் அவநம்பிக்கை கொண்டு அல்லலுற வேண்டும் என்னும் மேலான நம்பிக்கை என் உள்ளத்தில் ஒளிரத் தொடங்கியது'' என்று அவர் கூறி முடித்தார். அவர் கூறியதைக் கேட்டுக் கலீபா கண்ணீர் உகுத்தார்கள். ''உண்மையை (நீர்) உரைத்தீர், உண்மையை (நீர்) உரைத்தீர்'' என்று கூறி உள்ளம் உருகினார்கள், இதன் பின் அடிக்கடி அவரைச் சந்தித்து, அவர் அருகில் அமர்ந்து அவர் கூறும் அறிவுரைகளைப் பருகினார்கள்.

மக்கள் தமக்குப் போதனை மட்டுமல்ல எச்சரிக்கையும் செய்ய வேண்டும் எனக் கலீபா விரும்பினார்கள். 'ஒரு சமயம் அவர்களின் உள்ளக் கிடக்கை, அவர்களின் உள்ளில் கிடக்காமல் இவ்விதம் வெளி வந்தது. ''(சகோதரர்களே!) ஓர் அநாதையின் உடைமைமீது, அதன் பாதுகாவலனுக்கு உள்ள அதிகாரத்திற்கு மேல், அதிகமாக எனக்குப் பொது நிதி (பைத்துல்மால்) மீது இல்லை. நான் வசதியுடன் இருந்தால் (பொது நிதியிலிருந்து) உதவிப் பணத்தை ஒப்புக் கொண்டிருக்க மாட்டேன். வசதியுள்ளவனாய் இல்லாததால் வாழ்க்கையின் சாதாரணத் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ள உதவித் தொகை பெறுகிறேன். சகோதரர்களே! நான் உங்களின் ஊழியன். நீங்கள் என் செயலைக் கட்டுப்படுத்த வேண்டும், (என்) செயல்களைப் பற்றிக் கேள்விகள் கேட்க வேண்டும். அவற்றில் ஒன்று, பொதுநிதி அநாவசியமாகச் சேர்க்கப்படவும் கூடாது. அநாவசியமாக வீணாக்கப்படவும் கூடாது. நான் மக்களின் நலத்திற்காகவும் வளத்திற்காகவும் பாடுபட வேண்டும்.''

ஒரு நாள் அவர்கள் மக்கள் சூழ அமர்ந்திருந்தனர். அப்பொழுது அங்கிருந்தவர்களில் மிகவும் சாதாரணமான ஒருவன் கத்தினான்,



''உமரே! அல்லாஹ்வுக்கு அஞ்சும்!'' என்று. திடும் என அவன் இப்படிக் கத்தியதும், எல்லோரின் பார்வையும் அவன் பக்கம் திரும்பியது. மீண்டும் அவன் கத்தினான் ''உமரே! அல்லாஹ்வுக்கு அஞ்சும்!'' என்று. இப்படி அவன் இருமுறை கத்தியதைக் கேட்டு, அடங்காச் சினம் கொண்ட சிலர் அவனை அடிக்கக் கிளம்பினார்கள். அவர்களைக் கலீபா அவர்களின் தடக்கை தடுத்தது. ''அவர் அவ்விதம் கூறட்டும்! எச்சரிக்கை செய்யும் இம்மாதிரி மக்கள் இருக்கும் வரை, ஆட்சி பீடத்தில் அமர்ந்திருப்பவர்களுக்கு அச்சமில்லை. இந்த எச்சரிக்கைகளைக் கேட்டு ஆட்சி செய்வோர் தம்மைத் திருத்திக் கொள்வர்'' என அவர்கள் அமைதியாகக் கூறினார்கள்.

இன்னொரு நாள் அவர்கள் பள்ளியின் மிம்பர் மீது ஏறி நின்று கொண்டு, ''நண்பர்களே! நான் உலக வாழ்க்கையின் மீது விருப்பம் கொண்டால் நீங்கள் என்னை என்ன செய்வீர்கள்?'' என்று கேட்டார்கள். அங்கிருந்தவர்களில் ஒருவர் விருட்டென்று எழுந்து தம் வாளை உருவினார். ''நாங்கள் உங்களின் தலையைக் கொய்வோம்.' அவர் இவ்விதம் கூறியதும், அவர் தன்மையைச் சோதித்துப் பார்க்கக் கலீபா, ''என்னைப் பற்றியுமா அப்படிச் சொல்கிறீர்?'' என்று கேட்டனர். ''ஆம் உங்களைப் பற்றியும்தான்'' என்றார் அவர் அழுத்தமாக. அதைக் கேட்டுக் கலீபா அகமகிழ்ந்து, ''அல்லாஹ்வுக்கே எல்லாப்புகழும்! நாட்டில் இவ்வித மனிதர்கள் இருக்கின்றனர். அவர்கள் நான் (நேர்வழிவிட்டு) விலகிச் சென்றால் என்னை எச்சரிப்பார்கள்'' என்று கூறினார்கள்.

ஒருவர் தம் வாளை உருவினார், இன்னொருவர் அவர்களின் அங்கியைப் பிடித்துக் கொண்டார்.

அன்பளிப்பாக ஒரு சமயம் மதீனாவுக்குத் துணி அதிகம் வந்தது. அதனைக் கலீபா மக்களுக்கு அப்பொழுதே பங்கிட்டுக் கொடுத்து விட்டனர். சில நாட்கள் சென்றன. அன்று கலீபா ஒரு நீண்ட அங்கியை அணிந்து கொண்டு தெரு வழியே சென்று கொண்டிருந்தனர். அந்த அங்கி சில நாட்களுக்கு முன் பங்கிடப்பட்ட துணியால் ஆனது என்பதைத் தெரிந்து கொண்ட ஒருவர் அதைப் பிடித்துக் கொண்டு, ''என் கேள்விகளுக்குச் சரியான பதில் சொல்லிவிட்டுத்தான் இங்கிருந்து நகர வேண்டும்'' என்று கடுமையாகக் கூறினார். கலீபா அவர்களுக்கு ஒன்றுமே புரியவில்லை. மடியில் கனமில்லாதவர்களாதலால் அவர் கேட்க விரும்புவதைக் கேட்கட்டும் என அமைதியாக

நின்று கொண்டிருந்தனர். கையும், மெய்யுமாய்ப் பிடித்து விட்டோம் என்னும் மகிழ்ச்சியுடன் அவர், ''அன்று பங்கிடப்பட்ட துணியைக் கொண்டு இவ்வளவு நீண்ட அங்கியைத் தைக்க முடியுமா?'' என்று கேட்டார். அதற்குக் கலீபா அளித்த இந்த பதில் கேட்டு அவர் அவசரப்பட்டுத் தாம் புரிந்த பிழை நினைந்து தலைகுனிந்தார்: ''என் பங்கிற்குக் கிடைத்த துணியுடன், என் மகனுக்குக் கிடைத்த துண்டையும் சேர்த்து ஆக்கப்பட்டது இந்த அங்கி,''

நியாயமான குற்றச்சாட்டுகளைக் கூறும் போது கலீபா அவர்கள் அவற்றிற்குப் பதிலும் பகர்ந்தார்கள், பரிகாரமும் பண்ணினார்கள். அநியாயக் குற்றச்சாட்டுகள் கூறப்படும் போது அவர்கள் சில சமயம் அமைதி இழந்து விடுவதும் உண்டு, அடுத்த கணமே அமைதியுற்று விடுவதும் உண்டு. ஒரு நாள் அவர்கள்மீது ஒருவர் அநியாயக் குற்றச்சாட்டு ஒன்றையும் கூறினார். அத்துடன், ''நீர் அநியாயம் செய்கிறீர் மார்க்கத்தை மறைக்கிறீர், நியாயத்தைக் கூறத் தயங்குகிறீர்'' என்று கத்தி, அவர்களின் மனத்தையும் கீறினார், தம்மிடம் இல்லாத தன்மைகளை, இருப்பதாக அவர் இயம்பியதும், கலீபா அவர்களுக்குக் கடுமையான கோபம் வந்து விட்டது. அவர்கள் அதிகக் கோப முற்றுவிட்டனர் என்பதை அறிந்ததும், அவர் ''அமீருல் முஃமினீன் அவர்களே! 'கோபத்தை ஒதுக்கித் தள்ளி நேர்மையோடு நடக்க வேண்டும்' என அல்லாஹ் கூறியது நினைவில்லையா?'' என்று கேட்டார். அக்கணமே அவர்களின் கோபம் மறைந்தது, அவர்களின் முகம் மலர்ந்து, ''ஆம். நீர் நல்ல நேரத்தில் நினைவுபடுத்தினீர்'' என அவர்களின் நாமொழிந்தது.

## இறையச்சம்

''சுவர்க்கவாதி'' என அண்ணல் நபி (ஸல்) அவர்களாலேயே குறிப்பிடப்பட்டவர்கள் உமர் (ரலி) அவர்கள். ஆயினும் அவர்களிடம் இறையச்சம் அதிகம் இருந்தது. அதனால் அவர்கள் ஐம்பெரும் கடமைகளையும் அணுவளவும் பிறழாமல் புரிபவர்களாய் இருந்தார்கள். 'அல்லாஹ் ஒருவன். அவன் தூதர் முகம்மது (ஸல்)' என்பதில் அவர்களுக்கு அசைக்கமுடியாத நம்பிக்கை இருந்தது. அதனைத் தலை அரிவதற்குத் தருணம் பார்த்துக் கொண்டிருந்த மக்க நகர்ப் பகைவரிடம் அணுவளவும் அச்சமில்லாமல் அறிவித்தவர்கள் அவர்கள். ''உமர் அவர்கள் இஸ்லாத்தைத் தழுவாமல் இருந்தவரை நாங்கள் கஃபாவின் அருகில் கூடத் தொழ இயலாதவர்களாய்



இருந்தோம்'' என்னும் அப்துல்லாஹ் பின் மஸ்வூத் (ரலி) அவர்களின் சொற்கள் இதற்குச் சான்று.

தொழுகையைக் கலீபா மிகவும் கண்டிப்புடன் நிறைவேற்றினார்கள். கூட்டுத் தொழுகையை அவர்கள் தவற விட்டதே கிடையாது. ''கூட்டுத் தொழுகை இரவு முழுதும் வணக்கம் புரிவதிலும் மேலானது'' என்று அவர்கள் கூறியிருக்கின்றனர். ஒரு முறை அவர்கள் கூட்டுத் தொழுகையில் கலந்து கொள்ள முடியாமல் போய் விட்டது. இது பெரும் பிழை அல்லவாயினும், இதற்குக் கழுவாய் தேடிக் கொள்ள அவர்கள் பல்லாயிரம் திர்ஹம் மதிப்புள்ள ஒரு தோட்டத்தை தானம் (சதகா) செய்தார்கள். இன்னொரு முறை இவ்விதப் பிழை செய்ய நேர்ந்து விட்டதற்காக அவர்கள், ஓர் அடிமைக்கு விடுதலை வழங்கினார்கள்.

பகலில் கடமைகள் மலைபோல் குவிந்திருந்ததால், அவர்கள் தம் அதிகப்படியான தொழுகையை இரவில்தான் வைத்துக் கொள்வார்கள். இஷாத் தொழுது விட்டு வீடு திரும்பியதும், உணவருந்தி விட்டு உறங்கிவிடுவது அவர்களின் வழக்கம் அன்று. அவர்கள் மீண்டும் தொழத் தொடங்கி, சுப்ஹு வரை தொழுது கொண்டே இருப்பார்கள். ஒரு நாள் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அபூபக்ர் (ரலி) அவர்களைப் பார்த்து, ''நீர் எப்பொழுது வித்ரு தொழுகிறீர்?'' என்று கேட்டனர். ''இரவின் முதல் பாகத்தில்'' என்று அபூபக்ர் (ரலி) அவர்கள் பதில் கூறினார்கள். அடுத்து உமர் (ரலி) அவர்களைப் பார்த்து, ''நீர் எப்பொழுது வித்ரு தொழுகிறீர்?'' என்று கேட்டனர். ''இரவின் இறுதி பாகத்தில்'' என்று உமர் (ரலி) அவர்கள் பதில் உரைத்தார்கள். அப்பொழுது அண்ணல் நபி (ஸல்) அவர்கள், ''அபூபக்ர் எளிதானதைத் தேர்ந்தெடுத்துக் கொண்டார். உமர் பளுவை (சிரமமானதைத் தேர்ந்து) எடுத்துக் கொண்டார்'' என்று கூறினர்.

இரவு முழுவதும் இவ்விதம் தொழுதுவிட்டு விடியத் தொடங்கியதும் உமர் (ரலி) அவர்கள், தம் குடும்பத்தவர்களை, ''உங்களின் குடும்பத்தார் மீது தொழுகையை விதியுங்கள்!'' என்னும் திருகுர்ஆன் உரையைக் கூறி எழுப்பிவிடுவார்கள். இதற்கு ஆதாரம் அப்துல்லாஹ் இப்னு உமர் (ரலி) அவர்களின் இந்த உரை: ''என் தந்தையார் இரவு முழுதும் விழித்திருந்து மிகவும் உள்ளச்சத்துடன் தொழுகையில் ஈடுபடுவார்கள். சுப்ஹு நேரம் நெருங்கியதும், வீட்டிலுள்ளவர்கள் அனைவரையும் எழுப்பிவிடுவார்கள்.'' தொழும் போது அழுவது

கலீபா அவர்களின் அகலா வழக்கமாகும். நள்ளிரவுத் தொழுகையின் போது அவர்கள் அழுது, அளவிறந்த துக்கத்தால் கீழே விழுந்து விடுவதும் உண்டு.

தொழுகையை உரிய நேரத்தில் தொழுது விடவேண்டும் என்பதில் அவர்களுக்கு அதிக அக்கறை இருந்தது. அவசர வேலை வந்து தொழுகை நேரம் பிந்திவிடாது என்று தெரிந்தால் மட்டுமே அவர்கள் வேலையைக் கவனிப்பார்கள். ஒரு நாள் தொழுகை நேரம் வந்து, மக்கள் தொழுகைக்காக வரிசையில் நிற்கவும் ஆரம்பித்து விட்டனர், இகாமத்தும் சொல்லப்பட்டு விட்டது. அப்பொழுது ஒருவர் அவசரமாக அவர்களிடம் வந்து ஏதோ கேட்க, அவருக்கு அவர்கள் பதில் கூறிக்கொண்டு ஒரு குறிப்பிட்ட நேரம் வரை நின்றார்கள். ஆனால் அவர்கள் எவ்வித நெருக்கடி நிலையிலும் தொழுகையைத் தள்ளிப் போட்டது கிடையாது. புனிதப் போருக்கான ஆயத்தங்கள் புரியப்படும் நேரத்தில் தொழும் போது, அவர்களின் மனத்தில் போர் ஆயத்தங்கள் பற்றிய சிந்தனையே நிரம்பியிருக்கும். அவர்கள் ஒரு முறை கூறினார்கள், ''நான் படைகளைத் தயார் செய்தேன் தொழும் போது'' என்று.

தொழுகைக்குத் தாமதித்து வருவது தகாதது என்பது அவர்களின் கருத்தாகும். ஒருநாள் அவர்கள் அண்ணலாரின் பள்ளியில் வெள்ளிக் கிழமை குத்பாப் பேருரை நிகழ்த்திக் கொண்டிருந்தனர். அப்பொழுது உதுமான் (ரலி) அவர்கள் சற்றுத் தாமதமாய் வந்து கொண்டிருப்பதைக் கண்டு, ''ஏன் தாமதம்?'' என்று கேட்டார்கள். கடை வீதிக்குச் சென்றிருந்ததாயும், பாங்கு ஒலி கேட்டதும் 'உளூ'ச் செய்து கொண்டு ஓடி வருவதாயும் உதுமான் (ரலி) அவர்கள் உரைத்தனர். ''அல்லாஹ் வின் தூதர் அவர்கள் குளிக்கும்படிக் கூறியிருக்கும்போது, ஏன் நீர் உளூவுடன் நின்று கொண்டீர்?' என்று அவர்கள் உதுமான் (ரலி) அவர்களைப் பார்த்து வினவினார்கள்.

கலீபா அதிகமாய் நோன்பு வைப்பவர்களாயும் இருந்தனர். இறுதிக் காலத்தில் நோன்பு வைக்கக் கூடாத ஐந்து நாட்கள் தவிர்த்து மற்ற அனைத்து நாட்களிலும் நோன்பு வைத்தனர். இறப்பதற்கு முன் இரண்டு மாதங்கள் தொடர்ந்து நோன்பு வைத்தனர்.

உலகில் உயிர் வாழ்ந்த ஒவ்வோர் ஆண்டும் அவர்கள் ஹஜ்ஜுச் கடமையைத் தவறாமல் நிறைவேற்றினார்கள். கலீபாவாக ஆன முதல் ஆண்டு மட்டும், அவர்கள் ஹஜ்ஜுச் செய்யச் செல்லவில்லை.



அவ்வாண்டு அவர்கள் அப்துர்ரஹ்மான் இப்னு அவ்ஃபு (ரலி) அவர்களை, அமீருல் ஹஜ்ஜாக்கி, மக்களை ஹஜ்ஜுச் செய்ய அனுப்பி வைத்தார்கள். அடுத்த ஆண்டிலிருந்து இறக்கும் வரை அவர்களே மக்களை ஹஜ்ஜுக்கு அழைத்துச் சென்றார்கள். கலீபாவாக இருந்த பத்தாண்டுகளில் பத்து ஹஜ்ஜும், மூன்று உம்ராவும் அவர்கள் செய்ததாகக் கூறப்படுகிறது. முதல் உம்ராவை ஹிஜ்ரி 17-ஆம் ஆண்டு ரஜபிலும், இரண்டாவது உம்ராவை ஹிஜ்ரி 21-ஆம் ஆண்டு ரஜபிலும், மூன்றாவது உம்ராவை ஹிஜ்ரி 22-ஆம் ஆண்டு ரஜபிலும் அவர்கள் செய்தார்கள்.

தம் ஆட்சியின் இறுதி ஆண்டில் ஹஜ்ஜுச் செய்யச் சென்றபோது தம் மனைவியரையும் தம்முடன் அழைத்துச் சென்றார்கள். கஃபாவை இடம் சுற்றும் போது அவர்கள் அழுவார்கள், தழு தழுத்த குரலில் இவ்வாறு இறைஞ்சுவார்கள்: ''இறைவனே! மறுமையில் பேறு பெற்றவர்களில் என்னையும் சேர்த்து நீ எழுதியிருப்பாயானால், அதில் என்னை உறுதிப்படுத்தி வைப்பாயாக! மறுமைப் பேறு அற்றவர்களில் என்னையும் சேர்த்து நீ எழுதியிருப்பாயானால் அதை விட்டு என்னை நீக்கிப் பாவ மன்னிப்புப் பெற்றவர்களில், மறுமையில் பேறு பெற்றவர் களில் என்னை நீ நிலைப்படுத்தி வைப்பாயாக! நீ விரும்பியதை அழிப்பவன், நீ விரும்பியதை நிலைப்படுத்துபவன் உன்னிடம் 'உம்முல் கிதாபு' இருக்கிறது.''

செல்வர்கள் அவசியம் ஹஜ்ஜுச் செய்ய வேண்டும் என்று அவர்கள் கருதினார்கள். ''எவர் செல்வராய் இருந்து ஹஜ்ஜுச் செய்யவில்லையோ அவரிடமிருந்து வரி வசூலிக்க விரும்பு கிறேன்'' என அவர்கள் ஆளுநர்களுக்கு எழுதிய கடிதங்களில் அறிவித்திருந் தனர். ''அத்தகையவர் இறந்தால் அவருக்கு நான் மரணத் தொழுகை தொழ வைக்கமாட்டேன்'' என்றும் அவர்கள் அச்சுறுத்தினர். ஆனால், ஹஜ்ஜுச் செய்ய மக்கா வருபவர்களை அதிக நாட்கள் மக்காவில் தங்க அவர்கள் அனுமதிப்பதில்லை. அதற்கு அவர்கள் கூறிய காரணம் ''மக்கள் அதிக நாட்கள் மக்காவில் தங்கியிருப்பார்களாயின் அவர்களின் மனத்திலிருந்து கஃபா பற்றிய மதிப்பு அகன்று விடும்'' என்பதாகும்.

மக்காவில் வைத்துச் செய்யப்படும் வணக்கங்களில் சிறந்தது தவாபு என்பதாகும். தவாபு என்பது தல்பியா ஓதிக் கொண்டு கஃபாவை இடப்புறமாகச் சுற்றுவதாகும். ஏழு முறை சுற்றினால் ஒரு

தவாபு ஆகும். முதல் மூன்று சுற்றுகளில் தோள்களை அசைத்து ஓடுவது போல் செய்வது 'ரமல்' என்பது. அது அவசியமல்லவாயினும் அதனையும் கலீபா அவர்கள் விடாது செய்து வந்தார்கள். ''நமக்கு ரமல் செய்வதால் எந்த நன்மையும் இல்லை. முஷ்ரிக்குகளுக்குக் காண்பிப்பதற்காகவே நாம் அதைச் செய்தோம். அவர்களை அல்லாஹ் ஒழித்து விட்டான்'' என்று கூறிவிட்டு, ''அது ஒரு காரியம். அதை அல்லாஹ்வின் தூதர் அவர்கள் செய்தார்கள். ஆதலால் நாம் அதை விட்டுவிட விரும்பவில்லை'' என்றார்கள் அவர்கள்.

கலீபா குர்ஆனை அதிகமாய் ஓதுவார்கள். அதை ஓதத் திறக்கும் போதெல்லாம், ''திட்டமாக இது அல்லாஹ்வுடைய திருவசனம் தான் என்னும் பொருள் கொண்ட ''இன்ன ஹாதால கலாமுல்லாஹ்'' என்னும் சொற்றொடரை உரைத்து முத்தமிட்டு விட்டுத்தான் ஓதத் தொடங்குவார்கள். திருக்குர்ஆனைத் தாம் ஓதும்போதும், பிறர் ஓதத் தாம் கேட்கும் போதும், இறையச்சத்தால் அவர்களின் மனம் நிரம்பும், அதனால் அவர்களின் உடல் நடுங்கும். அப்பொழுது அவர்களால் தமக்கு வரும் அழுகையை அடக்க இயலாது. ஒரு சமயம் அவர்கள் திருக்குர்ஆனில் வரும், ''ஒவ்வொரு மனிதனும் தான் செய்த அமல்களைப் பார்த்துக் கொள்வதற்காக, 'அஃமால் நாமா' என்னும் கிதாபு திறந்து வைக்கப்பட்டிருக்கிறது'' என்னும் பொருள் கொண்ட 'வ இதஸ்ஸுஹுபு நுஷிரத்' வசனத்தை ஒருவர் ஓதக் கேட்டதும், அது ஏற்படுத்திய அச்சத்தால் அப்படியே மூர்ச்சித்துக் கீழே விழுந்து விட்டார்கள். அதனால் அவர்களின் உடல் நலம் பல நாட்கள் பாதிக்கப் பட்டிருந்தது.

இன்னொரு சமயம் அவர்கள் தெருவழியே ஒட்டகையின் மீது போய்க் கொண்டிருந்தார்கள். அப்பொழுது திருக்குர்ஆனின் 'வத்தூரி' சூராவை எவரோ ஓதும் ஒலி அவர்களின் செவியில் விழுந்தது. ''நிச்சயமாக இறைவனின் சோதனை வந்தே தீரும். அதனைத் தடுத்து நிறுத்துபவர் யாரும் இல்லை' (52:7, 8) என்னும் பொருள் கொண்ட ''இன்ன அதாப ரப்பிக ல வாகிஃ'' என்னும் வசனத்தைக் கேட்டதும், ''கஃபாவின் அதிபதி மீது ஆணையாக, இது உண்மையே'' என்று கூறிவிட்டு, ஒட்டகையிலிருந்து கீழிறங்கி அருகிலிருந்த சுவரில் போய் மோதிக் கொண்டார்கள். அதனால் அவர்களுக்கு அதிகப் பலவீனம் ஏற்பட்டு விட்டது. எழுந்து நடக்கக்கூட இயலவில்லை. அதனால் அவர்கள் வீட்டிற்குத் தூக்கிச் செல்லப்பட்டார்கள். இதன் பின் ஒரு மாதம் வரை அவர்கள் உடல் நலம் குன்றியே இருந்து கொண்டி ருந்தார்கள்.



இறை மறை உரைகளை ஓதும் போது, அல்லாஹ்மீது அளவற்ற அச்சத்தால் அவர்கள் அழுவார்கள். அழுகை மிகுதியால் அவர்களுக்கு மூச்சுத் திணறலும் ஏற்படுவதுண்டு. பெரும்பாலும் அவர்கள் இளங்காலைத் தொழுகையில் 'கஹ்பு,' 'தாஹா' போன்ற பெரிய அத்தியாயங்களை அழுது கொண்டே தான் ஓதுவார்கள். அந்த அழுகை ஒலி தொழுது கொண்டிருக்கும் மக்களின் மூன்று வரிசை வரை கேட்கும். ஒருநாள் அவர்கள் இளங்காலைத் தொழுகையில் 'யூசுப்' அத்தியாயத்தை ஓதிக் கொண்டு வரும்போது, ''என் துக்கத் தையும், விசனத்தையும் அல்லாஹ்விடம் முறையிட்டுக் கொள் கிறேன்'' என்னும் வசனத்திற்கு வந்ததும், விம்மி, விம்மி அழுதார்கள். அதனால் அவர்களின் தொண்டை அடைத்துக் கொண்டு குரல் ஒலியே குறைந்துவிட்டது. இவ்வாறு அவர்கள் அதிகமாய் அழுததால், அவர்களுக்குக் கன்னத்தில் இரு கரிய வடுக்கள்கூட ஏற்பட்டிருந்தன.

அவர்கள், தாம் ஒரு மனிதராகவே பிறந்திருக்கக்கூடாது என்று எண்ணினார்கள். அதனால் அவர்கள் அடிக்கடி, ''என் அன்னை என்னைப் பெறாமல் இருந்திருக்கக்கூடாதா?'' என்று கூறிக் கொள் வார்கள். சில சமயங்களில் அவர்கள், ''நான் மனிதனாக இருப்பதற்குப் பதிலாக ஓர் ஆடாக இருந்திருந்தால் நன்றாக இருந்திருக்குமே. (மக்கள்) என்னை அறுத்தாவது புசிப்பார்களே'' என்று கூறுவார்கள். பல சமயங்களில் அவர்கள் சிறு துரும்புகளைக் கையில் எடுத்து வைத்துக் கொண்டு, ''நான் இந்தத் துரும்பாய்ப் பிறந்திருக்கக் கூடாதா?'' என்று சொல்வார்கள். ''நான் ஒரு கல்லாகப் படைக்கப் பட்டிருக்கக்கூடாதா?'' என்றும் அவர்கள் கூறிக் கொள்வதுண்டு.

இயற்கையின் உற்பாதங்களுக்குக் காரணம், இறைவனின் கோபம்தான் என எண்ணிக் கலீபா கலங்குவார்கள். அவர்கள் கலீபாவாக இருந்தபோது ஒருமுறை, மதீனாவில் நிலநடுக்கம் ஏற்பட் டதும் அதைக் கண்டு அவர்களுக்கு உளநடுக்கம் ஏற்பட்டு விட்டது. அப்பொழுது அவர்கள் மக்களைப் பார்த்து, ''இவ்வளவு விரைவில் என்ன வேலை செய்தீர்கள் இந்த நில நடுக்கம் ஏற்படுவதற்கு? இன்னொரு முறை நில நடுக்கம் ஏற்பட்டால் அல்லாஹ்வின் மீது ஆணையாகக் கூறுகிறேன் நான் உங்கள் மத்தியில் இருக்க மாட்டேன்,'' என உரைத்தார்கள்.

மழை பெய்யாமல் பஞ்சம் வந்தால் அதற்குக் காரணம் மக்கள் புரியும் பிழைதான் என எண்ணிக் கலீபா மயங்குவார்கள். ஒரு சமயம்

மழை பெய்யாமல் பஞ்சம் வந்த போது, அவர்கள் மழைத் தொழுகை தொழுது விட்டு, இஸ்திஃபாரைத் திரும்பத் திரும்ப ஓதினார்கள். ''மழைபொழிய வேண்டும் என ஏன் துஆ கேட்க வில்லை?'' என மக்கள் கேட்டபோது, ''நான் இஸ்திஃபாரைக் கொண்டு மழையை வேண்டினேன். நீங்கள் இறைவனிடம் பாவ மன்னிப்புக் கோரினால் அவன் தொடர்ந்து உங்களுக்கு மழையைப் பொழிய வைப்பான்'' என்று அவர்கள் கூறினார்கள்.

இம்மையில் அவர்கள் இவ்விதம் அஞ்சியதற்குக் காரணம், இதயத்தில் அவர்களுக்கு இருந்த மறுமை பற்றிய அச்சம் தான். இரவில் ஒருநாள் அவர்கள் நகர் வலம் வரும் போது, ஒரு வீட்டி லிருந்து வெளிச்சம் வருவது தெரிந்தது. அந்த வீட்டில் வதிந்த ஒரு மூதாட்டியின் கை நூலை நூற்றுக் கொண்டிருந்தது, நாவு இந்த பாடலைப் பாடிக் கொண்டிருந்தது: ''அல்லாஹ்வின் தூதர் அவர்களே! தாங்கள் இரவெல்லாம் தொழுவீர்கள். இரவின் இறுதியில் கண்ணீர் விட்டு அழுவீர்கள். நான் மரித்த பின் தங்களைச் சந்திப்பேனா, மாட்டேனா என்பது எனக்குத் தெரிய வேண்டுமே. மரணம் என்பது மனிதர்களுக்குப் பல நிலைகளில் வருவது. அது எந்த நிலையில் எனக்கு வரும் என்பதை நான் அறிய மாட்டேன். எனக்கு வரும் அந்த மரணத்திற்குப் பிறகு நான் தங்களைக் காண இயலுமா, இயலாதா என்பது எனக்குத் தெரியவில்லையே.'' மூதாட்டியின் இந்தப் பாடல் மறுமை தமக்கு எப்படி இருக்கும் என்னும் அச்சத்தைக் கலீபாவுக்கு அதிகப்படுத்திவிட, அவர்கள் அப்படியே உள் உருகி, மெய் மயங்கி உட்கார்ந்து விட்டார்கள்.

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் தம் அருமை மகனார் இப்ரா ஹீமை அடக்கம் செய்து விட்டு அவரின் கப்ர் அருகில் நின்று கொண்டு, ''என் அருமை மகனே! இதயம் துக்கம் அடைகிறது, கண்களிலிருந்து நீர் வழிகிறது. ஆனால் நாம் அல்லாஹ்வுக்குக் கோபமூட்டுவதைக் கூறமாட்டோம். நிச்சயமாக, நாம் அவனிடமே திரும்புபவர்கள். என் அருமை மகனே! 'அல்லாஹ்தான் என் இறைவன், இஸ்லாம்தான் என் மார்க்கம், என் தந்தைதான் அல்லாஹ்வின் தூதுவர்' என்று கூறுவீராக!'' என்றார்கள்.

(அதைக் கேட்டு) அப்பொழுது அங்கிருந்த தோழர்களும் அழுதனர், உமர் (ரலி) அவர்களும் அழுதனர். அவர்களின் அழுகை ஒலி அதிகமாக இருந்தது. உமர் (ரலி) அவர்களை நோக்கி அண்ணல்



நபி (ஸல்) அவர்கள், ''உமரே! எதற்காக அழுகிறீர்?'' என்று கேட்டார்கள். அதற்கு, அவர்கள், ''அல்லாஹ்வின் தூதர் அவர்களே! இப்ராஹீமோ தங்கள் குழந்தை. அவர் பருவமும் அடையவில்லை. அவர் மீது பாவ புண்ணியத்தை எழுத எழுது கோல் நடக்கவுமில்லை. இந்நிலையில் தங்களைப் போன்றவர்கள் அவருக்கு 'தவ்ஹீ'தைக் குறித்து சொல்லிக் காட்ட வேண்டிய அவசியமுள்ளதே. உமருடைய கதி யாதோ? அவரோ வயதானவர். அவர் மீது எழுது கோல் நடக்கிறது. தங்களைப் போன்று ஓதிக் காட்டுபவர் அவருக்கு இல்லையே'' என்றனர்.

அதைக் கேட்ட அண்ணல் நபி (ஸல்) அவர்களும் அழுதனர். அங்கிருந்த தோழர்களும் அழுதனர். அப்பொழுது ஜிப்ரயீல் (அலை) அவர்கள் வந்து, இந்த இறை வசனத்தை வெளிப்படுத்தினர்: ''மெய்யாகவே எவர்கள் விசுவாசங் கொள்கிறார்களோ, அவர்களை, மறுமையிலும் சரி, இம்மை வாழ்விலும் சரி, (கலிமா தய்யிபா என்னும்) மெய்யான இந்த வாக்கின் பொருட்டால் அல்லாஹ் அவர்களை ஸ்திரப்படுத்துகிறான்.'' *(14:27)*

இந்த வசனத்தை அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அறிவித்த பிறகு தான் அங்கு அழுகை அடங்கியது.

ஒரு நாள் கலீபா அவர்களைப் பார்த்துப் பாலைவன அரபி ஒருவர் இவ்விதம் பாடினார்: ''உமரே! உண்மையான இன்பம் சுவர்க்கத்தின் இன்பம் தான். என் புதல்வர்களுக்கும், அவர்களின் அன்னைக்கும் உடை கொடும்! அல்லாஹ்வுக்காக நீர் இதை எனக்குச் செய்ய வேண்டும்.'' அவரின் பாடலைக் கேட்டு விட்டுக் கலீபா, ''நான் அவ்விதம் செய்யாவிடில் என்ன நேரும்?'' என வினவினார்கள். அதற்கு அவர், ''நீர் என்பற்றி நியாயத்தீர்ப்பு நாளின் போது கேட்கப் படுவீர். அப்பொழுது உம்மால் ஒரு பதிலும் கூற இயலாமல் போகும். பிறகு நீர் நரகமோ, சுவர்க்கமோ செல்வீர்'' என பதிலுரைத்தார். அதைக் கேட்டதும் கலீபா அவர்கள் அழுது விட்டார்கள். அவர்களின் தாடி கண்ணீரால் நனைந்தது. அவருக்கு அதிகம் கொடுக்கவே அவர்கள் விரும்பினார்கள். ஆனால் அவர்களிடம் அப்பொழுது எதுவும் இல்லாததால் தம் சட்டையைக் கழற்றி அவருக்குக் கொடுத்தார்கள்.

இம்மை வாழ்க்கை, மறுமை வாழ்க்கை இரண்டிற்கும் இடையில் இருக்கும் தற்காலிகத் தங்குமிடம் கல்லறை அல்லவா?

கல்லறைகள்ளைக் கண்டுவிட்டால், அவர்கள் அங்கு நின்று கொண்டு பொங்கிப் பொங்கி அழுவார்கள். ''கல்லறை என்பது மறுமையின் எல்லைகளில் முந்தியது. அதில் வெற்றி அடைபவர்கள், மற்ற எல்லைகளை எளிதாகக் கடந்து விடுவார்கள். அதில் தோல்வி அடைபவர்கள் மற்ற எல்லைகளிலும் பெரிதும் சிரமப்பட வேண்டி யிருக்கும் என, அல்லாஹ்வின் தூதர் அவர்கள் சொல்ல நான் கேட்டிருக்கிறேன்'' என்று அவர்கள் கூறுவார்கள். ''மறுமை நாளில் அமரர் ஒருவர் 'எல்லா மனிதர்களிலிருந்தும் ஒரே ஒரு மனிதன் சுவர்க்கம் போவான்' எனக் கூவிச் செல்வாராயின், அந்தச் சுவர்க்கவாசி நானாக இருக்கக் கூடாதா என விரும்புவேன். 'ஒரே ஒரு மனிதன் நரகம் செல்வான்' எனக் கூவிச் செல்வாராயின், அந்த நரகவாதி நானாக இருப்பேனோ என அஞ்சுவேன்'' என அவர்கள் கூறியிருக்கின்றனர்.

சுவர்க்கம் கிடைக்க வேண்டும் என ஆசைப்பட்டாலும், நரகத்தில் அகப்பட்டுக் கொள்ளக் கூடாது என்னும் அச்சமே அவர்களுக்கு அதிகம் இருந்தது. அவர்கள் ஒரு சமயம் அபூ மூஸா அஷ்அரீ (ரலி) அவர்களிடம்,''இஸ்லாத்தை ஆரம்பத்திலேயே ஏற்றுக் கொண்ட நாம், ஊர் விட்டு அகன்று, அல்லாஹ்வின் தூதருடன் எப்பொழுதும் இருந்த நாம், தண்டனையோ, பரிசோ அளிக்கப்படாமல் வெறுமனே தான் விடப்படுவோமா? அதைக் கொண்டு நீர் திருப்தி அடைவீரா?'' என்று கேட்டனர். அதற்கு அபூமூஸா அஷ்அரீ (ரலி) அவர்கள், ''வெறுமனே விடப்பட்டால் மட்டும் நான் நிச்சயமாகத்திருப்தி அடையமாட்டேன். நாம் அதிக நன்மைகள் செய்திருக்கிறோம், அதிக நம்பிக்கை கொண்டிருக்கிறோம்'' என்று பதிலிறுத்தனர். உடனே கலீபா அவர்கள் உரைத்தார்கள்,''எவன் கையில் என் உயிர் உள்ளதோ, அவன் மீது ஆணையாக, எந்தத் தண்டனையுமின்றி விட்டுவிடப்படும் நிலைக்கு அதிகமாக நான் ஆசைப்பட மாட்டேன்'' என்று.

கலீபா இன்னொரு சமயம் காலித் இப்னு வலீத் (ரலி) அவர்களிடம் விருந்தொன்றில், ''நமக்குத்தான் இது இருக்கிறது. மதீனாவுக்கு ஹிஜ்ரத் செய்து, வயிறு நிரம்பாமல் கோதுமை ரொட்டி தின்று உயிர் துறந்த ஏழைகளுக்கு என்ன இருக்கிறது?'' என்று கேட்டனர். உடனே காலித் இப்னு வலீத் (ரலி) அவர்கள் ''அவர்களுக்குச் சுவர்க்கம் இருக்கிறது'' என்று கூறினார்கள். அதைக் கேட்டுக் கலீபா, ''அவர்கள் சுவர்க்கத்தை அடைந்து விட்டார்கள் என்றால், உலகில் நம் பங்கு இவ்வளவுதான் என்றால், நம்மைவிட அவர்கள் நிச்சயம் சிறப்படைந்து விட்டார்கள்'' என்று கூறினர்.



இறப்பைத் தமக்கு எப்பொழுதும் நினைப்பூட்டிக் கொண்டிருக்க வேண்டும் என்பதற்காகக் கலீபா, தம் மோதிரத்தில், ''உமரே! உமக்கு இறப்பே போதுமானது'' எனப் பொறித்து வைத்திருந்தார்கள்.

கலீபா அவர்களிடம் இறையச்சமும் இருந்தது, இறை திருப்தியும் இருந்தது. அதற்கு ஆதாரம் இந்தச் சம்பவம்: ஒரு நாள் அவர்கள் குட்டநோய் பிடித்த குருடர் ஒருவர் தெருவில் தட்டுத் தடுமாறி நடந்து செல்வதைக் கண்டார்கள். அப்பொழுது அவர்கள் தம் அருகிலிருந்த தோழர்களிடம், ''இந்த மனிதரிடம் இறைவனின் நிஃமத் எதையாவது காண்கிறீர்களா?'' என்று கேட்டார்கள். ''இவரிடம் என்ன நிஃமத் இருக்கிறது?'' என்று தோழர்கள் பதில் கேள்வி கேட்டனர். ''இவர் சுலபமாக சிறுநீர் கழிக்கிறார் அல்லவா! அது அல்லாஹ்வால் அவருக்கு அளிக்கப்பட்ட நிஃமத் இல்லையா?'' என்று கலீபா தம் தோழர்களைப் பார்த்துக் கேட்டார்கள்.

## அண்ணல் நபி (ஸல்) அவர்கள் மீது அன்பு

ஓர் உண்மை முஃமினுக்கு அல்லாஹ் மீது அச்சம் இருக்க வேண்டும், அண்ணல் நபி (ஸல்) அவர்கள் மீது அன்பு இருக்க வேண்டும். இவை இரண்டும் உமர் (ரலி) அவர்களிடம் அதிகமா கவே இருந்தன. ஒரு சமயம் அண்ணல் நபி (ஸல்) அவர்களின் கைப்பிடியில் உமர் (ரலி) அவர்களின் கை இருந்து கொண்டிருந்தது. ஆபத்தான நேரத்தில் அண்ணல் நபி (ஸல்) அவர்களுக்குக் கை கொடுத்த அவர்கள் இப்பொழுதும் தம் கையைக் கொடுத்துக் கொண்டு நின்றனர். அப்பொழுது அவர்கள், ''அல்லாஹ்வின் தூதர் அவர்களே! நிச்சயமாகத் தாங்கள் எனக்கு எல்லாப் பொருள் களையும் விட மிகவும் உவப்பானவர்களாய் இருக்கிறீர்கள், என் உயிரைத் தவிர்த்து'' என்று கூறினர். அதைக் கேட்டு அண்ணல் நபி (ஸல்) அவர்கள், ''எவன் கை வசம் என் உயிர் உள்ளதோ அவன் மீது ஆணையாக, உம்முடைய உயிரை விட நான் உமக்கு உவப்பானவனாய் இராதவரை, உம்முடைய விசுவாசம் முழுமையுற்றது அல்ல'' என்றனர். உடனே உமர் (ரலி) அவர்கள், ''இப்பொழுது தாங்கள் நிச்சயமாக என் உயிரையும்விட மிகவும் உவப்பானவர்களாய் இருக்கிறீர்கள்'' என்று கூறினர். அதைக் கேட்டு அண்ணல் நபி (ஸல்) அவர்கள், ''உமரே! இப்பொழுதுதான் நீர் பரிபூரண விசுவாசத்தை அடைந்தீர்!'' என அறிவித்தனர்.

இதன்பின் அண்ணல் நபி (ஸல்) அவர்களுக்கு உமர் (ரலி) அவர்கள் உயிரினும் இனியவர்களாய் ஆனார்கள். ஒரு நாள் அண்ணல்

நபி (ஸல்) அவர்கள் அயர்ந்து உறங்கிவிட்டு எழுந்தனர். அவர்களின் விலாப்புறத்தில் அவர்கள் படுத்திருந்த ஈச்சம்பாய் பதிந்த அடையாளம் இருந்ததைப் பார்த்து உமர் (ரலி) அவர்கள் அழுது விட்டார்கள். ''ஏன் அழுகிறீர்?'' என அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கேட்ட போது, ''அல்லாஹ்வின் பகைவராய் இருக்கும் கைஸரும், கிஸ்ராவும், செல்வ சுகத்தில் இருக்கின்றனர். அல்லாஹ்வின் தூதராயும், தோழராயும் இருக்கும் தாங்கள் இந்தத் துன்பங்களை அனுபவிக்கிறீர்களே'' என்று அவர்கள் உரைத்தார்கள். அதைக் கேட்டு அண்ணல் நபி (ஸல்) அவர்கள், ''உமரே! அந்த அரசர்களுக்கு இவ்வுலக வாழ்க்கை இருக்கிறதென்றால், நமக்கு அவ்வுலக வாழ்க்கை ஆவது பற்றி நீர் மகிழ்ச்சியடையமாட்டீரா?'' என வினவியபோது, ''மகிழ்ச்சி அடைவேன்'' என அவர்கள் மறுமொழி பகர்ந்தார்கள். ''அவ்விதமே ஆகும் என்பதை நீர் அறிந்திரும்!'' என்று அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறினர்.

அண்ணல் நபி (ஸல்) அவர்களின் உடம்பில் பாய் பதிந்ததையே பொறுக்காத அவர்கள், அவர்களின் மனத்தைப் பிறர் புண்படுத்துவதையா பார்த்துக் கொண்டிருப்பார்கள்? அண்ணல் நபி (ஸல்) அவர்கள் ஒரு யூதனிடம் கொஞ்சம் பேரீத்தம் பழம் கடனாக வாங்கியிருந்தனர். அதற்குரிய பணத்தைத் தருவதாக அவர்கள் கூறிய தவணை வருவதற்கு இரண்டு நாட்கள் இருக்கும் போதே, அந்த யூதனின் மனத்தில் பணம் வருமோ, வராதோ என்னும் அச்சம் வந்து விட்டது. அவன் அண்ணல் நபி (ஸல்) அவர்களிடம் வந்தான், அவர்களின் புனித உடம்பிலிருந்த போர்வையைக் கடுமையாகப் பிடித்து இழுத்து, ''என்னுடைய கடனைக் கொடுத்து விடும்! அப்துல் முத்தலிபின் குடும்பத்தினர் கடன் வாங்கினால் கொடுக்க மாட்டார்கள்'' என மொழிந்தான். அவன் புரிந்த செயலும், மொழிந்த சொற்களும், ஆங்கிருந்த உமர் (ரலி) அவர்களின் உதிரத்தைக் கொதிக்கச் செய்தன. ''அல்லாஹ்வின் பகைவனே! இந்தப் பரிசுத்த இடத்தில் அல்லாமல், வேறு இடத்தில் வைத்து இத்தகைய வார்த்தையை நீ கூறியிருந்தால் என் வாள்கொண்டு உன் தலையைத் துணித்திருப்பேன்'' என்றார்கள் அவர்கள். உமர் (ரலி) அவர்களின் சொல், அண்ணல் நபி (ஸல்) அவர்களை ஆறுதல்படுத்த வில்லை. அவர்கள் உமர் (ரலி) அவர்களைப் பார்த்து உரைத்தனர்; ''உமரே! நானும் அவரும் (நீர் கூறுகிற) இந்தச் செய்தி அல்லாத வேறு விஷயத்தின் பக்கம் தேவையுள்ளவர்களாய் இருக்கிறோம். அழகிய



முறையில் கடனை நிறைவேற்ற வேண்டும் என எனக்கு நீர் கூற வேண்டும். அழகிய முறையைப் பின்பற்ற வேண்டும் என அவருக்கு நீர் கட்டளையிட வேண்டும். உமரே! அவரை அழைத்துக் கொண்டு போய், அவருக்குச் சேர வேண்டியதை நிறைவேற்றும்! அவரை நீர் பயமுறுத்தியதற்காக இருபது மரக்கால் பேரீத்தம் பழத்தை அதிகமாகக் கொடும்!''

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் ஹுனைன் போரிலிருந்து திரும்பிக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது அவர்கள் பிலால் (ரலி) அவர்களின் துணியிலிருந்த வெள்ளி நாணயங்களை அள்ளி, அள்ளி மக்களுக்கு வழங்கிக் கொண்டு வந்தார்கள். அப்பொழுது ஒருவன் அண்ணல் நபி (ஸல்) அவர்களின் அருகில் வந்தான். ''முகம்மதே! நான் இன்று உம் நடவடிக்கையைப் பார்த்துக் கொண்டேன்'' என்றான். ''எப்படி?'' என்று அவனிடம் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கேட்டார்கள். ''நீர் நீதியுள்ளவர் தாமா என நான் ஆச்சரியப்படுகிறேன்'' என்று அவன் கூறினான். ''நீ என்னிடம் எந்த நீதியையும் காண வில்லையாயின், நீ வேறு எங்குக் காணப் போகிறாய்?'' என்றார்கள் அவர்கள். அவன் சொல் உமர் (ரலி) அவர்களின் உள்ளத்தைத் துடிக்கச் செய்தது. அவர்கள் தம் வாளை உருவினார்கள். ''அல்லாஹ்வின் தூதர் அவர்களே! இந்த நய வஞ்சகனின் தலையைத் துண்டித்து விடுகிறேன்'' என உறுமினார்கள். ஆனால், அதற்கு அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அனுமதி வழங்கவில்லை. ''அவனைத் தனியே விட்டு விடும்! முகம்மது தம் தோழர்களைக் கொல்கிறார் என்று மக்கள் சொல்வதிலிருந்து அல்லாஹ் காப்பாற்றட்டும்! அவனும், அவனுடைய தோழர்களும் குர்ஆனை ஓதுவார்கள். ஆனால் அது, அவர்களின் நெஞ்சங்களிலிருந்து அப்பால் போய் விடும். வில்லிலிருந்து அம்பு விரைவதைப் போல் அவர்கள் மார்க்கத்தை விட்டுப் போய் விடுவார்கள்''* என்று அவர்கள் கூறினார்கள்.

இந்த இரண்டு முறையும் உமர் (ரலி) அவர்களின் வாளுக்கு வேலை வரவில்லை, இப்பொழுது வேலை வந்து விட்டது. நயவஞ்சகன் ஒருவனும், யூதன் ஒருவனும் சண்டை போட்டுக் கொண்டு அண்ணல் நபி (ஸல்) அவர்களிடம் வந்தனர். அவர்களின் வழக்கைக் கேட்டு, யூதனுக்குச் சாதகமாய்த் தீர்ப்பு வழங்கினார்கள்

★ அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறியபடியே அவர்கள் பிற்காலத்தில் காரிஜிகளாகி அலீ (ரலி) அவர்களுக்கு எதிராகக் கலகம் செய்தனர்.

அண்ணல் நபி (ஸல்) அவர்கள். யூதனின் பக்கலே நியாயம் இருந்தது. ஆனால், அவர்களின் தீர்ப்பை நயவஞ்சகன் ஏற்றுக் கொள்ளவில்லை. அவன், ''வழக்கை உமரிடம் கூறவேண்டும்'' என்றான். அதன்படியே அவர்கள் இருவரும் உமர் (ரலி) அவர்களிடம் வந்தனர். அவர்களிடம், யூதன், தாங்கள் ஏற்கனவே அண்ணல் நபி (ஸல்) அவர்களிடம் வழக்குரைத்ததையும் அவர்கள் வழங்கிய தீர்ப்பை அடுத்தவன் ஏற்காததையும் எடுத்துக் கூறினான். உடனே உமர் (ரலி) அவர்கள் நயவஞ்சகனைப் பார்த்து, ''உண்மைதானா?'' என்று கேட்டார்கள். அவன், ''ஆம்'' என்றான். ''இங்கேயே இருங்கள்! இதோ வருகிறேன்'' எனக் கூறிவிட்டு வீட்டிற்குள் சென்ற அவர்கள் வாளுடன் வந்தார்கள். அவர்களின் வாள் பேசியது. நயவஞ்சகனின் தலை உருண்டது. அவர்களின் நாபேசியது, நீதி நிமிர்ந்தது. ''அல்லாஹ்வின் தீர்ப்பையும், அவன் தூதர் தீர்ப்பையும் ஏற்காதவர்களுக்கு இப்படித்தான் தீர்ப்பளிப்பேன்'' என அவர்கள் உரைத்தார்கள். அதை அங்கீகரிப்பது போல் சிறிது நேரத்தில் ஜிப்ரயீல் (அலை) அவர்கள் வந்து, ''உமர் சத்தியத்தையும் அசத்தியத்தையும் பிரித்தார்'' என அறிவித்தார்கள்.

அண்ணல் நபி (ஸல்) அவர்களுக்கு மரியாதைக் குறைவாக எவர் நடந்தாலும், அவர் பிறராக இருந்தாலும், பெற்ற மக்களாகவே இருந்தாலும் பொறுத்துக்கொள்ள உமர் (ரலி) அவர்களுக்கு ஒரு போதும் இயன்றதில்லை. ஒரு பெருநாளின் போது அபிஸீனிய பாடகிகள், அண்ணல் நபி (ஸல்) அவர்கள் இருக்கும் இடத்தில் பாடிக் கொண்டிருப்பதைப் பார்த்ததும், உமர் (ரலி) அவர்களுக்கு ஆத்திரம் அதிகப்பட்டு விட்டது. அவர்கள் அப்பாடகிகளை அதட்டினர். அப் பொழுது அண்ணல் நபி (ஸல்) அவர்கள், ''அவர்களை விட்டு விடும்!'' என்று கூறினார்கள். ஒரு நன்னாளின் போது அபிஸீனியர்கள் சிலர் விளையாட்டுக் காட்டிக் கொண்டிருந்தனர். அப் பொழுது அங்கு வந்த உமர் (ரலி) அவர்களுக்கு, அண்ணல் நபி (ஸல்) அவர்கள் முன்னிலையில் இவ்விதம் ஆடியது அடங்காச் சினத்தை உண்டு பண்ணியது, அவர்கள் ஆட்டக்காரர்களைக் கண்டிக்க ஆரம்பித்தனர். அப்பொழுது அண்ணல் நபி (ஸல்) அவர்கள், ஆட்டக்காரர்களைப் பார்த்து, ''ஹபஷி மக்களே! சரிதான். குற்றமில்லை'' என்று கூறினார்கள்.

ஒரு நாள் அவர்கள் அண்ணல் நபி (ஸல்) அவர்களின் ரவ்ளாவை சுத்தப்படுத்திக் கொண்டிருந்தனர். அப்பொழுது இருவர் அங்கு உரத்த குரலில் பேசிக் கொண்டிருப்பது அவர்களின் காதில் பட்டுவிட்டது.



உடனே அவர்கள் தம் சவுக்கை எடுத்துக் கொண்டு சென்றார்கள். ''இந்த இடத்தில் இவ்வளவு உரத்த குரலில் பேசுகிறீர்களா?'' என்று கேட்டார்கள்.

ஒரு நாள் உமர் (ரலி) அவர்கள் தம் மனைவியை ஏதோ ஒன்றிற்காகக் கண்டித்தனர். அவர் உமர் (ரலி) அவர்களை எதிர்த்து ஏதோ கூறினர். ''என்னை எதிர்த்துப் பேசுகிறாயா?'' என்று உமர் (ரலி) அவர்கள் சினத்துடன் கேட்டனர். அதற்கு அவர், ''அல்லாஹ்வின் தூதர் மனைவிகள் அவர்களை எதிர்த்துப் பேசுகிறார்கள். நான் உங்களை எதிர்த்துப் பேசுவதைக் கண்டிக்கிறீர்களே'' என்றார். இதைச் செவியுற்றது தான் தாமதம் உமர் (ரலி) அவர்கள், தம் மகளும், அண்ணல் நபி (ஸல்) அவர்களின் மனைவியுமான ஹஃப்ஸா (ரலி) அவர்களிடம் சென்று, ''அல்லாஹ்வின் தூதர் அவர்களை நீங்கள் எதிர்த்துப் பேசுகிறீர்களா?'' என்று கேட்டனர். ''ஆம்'' என்று ஹஃப்ஸா (ரலி) அவர்கள் பதில் அளித்தார்கள். உடனே உமர் (ரலி) அவர்கள் தம் மகளைப் பார்த்து, ''அல்லாஹ்வின் தூதர் அவர்களை அதிருப்திப்படுத்துவது, அல்லாஹ்வை அதிருப்திப்படுத்துவது என்பது உமக்கு நினைவில்லையா? அல்லாஹ்வின் தூதர் அவர்கள் என்னை நினைத்து (த்தான்) பொறுத்துக் கொள்கிறார்கள். இல்லையேல் உம்மை மண விலக்குச் சொல்லிவிடுவார்கள்'' என்று கூறினர்.

இதன்பின் அவர்கள் அண்ணல் நபி (ஸல்) அவர்களின் மற்றொரு மனைவியான உம்மு சல்மா (ரலி) அவர்களின் வீடு சென்று, தம் மகளிடம் கேட்ட அதே கேள்வியைக் கேட்டனர். அது உம்மு சல்மா (ரலி) அவர்களை ஆத்திரம் கொள்ள வைத்தது. ''உமரே! (நீர்) ஒவ்வொரு விஷயத்திலும் தலையிடுகிறீர். இப்பொழுது அல்லாஹ் வின் தூதருக்கும், அவர்களின் மனைவிமார்களுக்கும் இடையிலுள்ள தனிப்பட்ட விஷயங்களிலும் தலையிட்டு விட்டீர்'' என்று கூறினர். இவ்விதம் அவர்கள் கூறியதும், அவ் விஷயத்தை அப்படியே விட்டுத் தயங்கியபடியே உமர் (ரலி) அவர்கள் தம் வீட்டிற்கு வந்தார்கள்.

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் மீது அவர்கள் கொண்டிருந்த அன்பு, அண்ணல் நபி (ஸல்) அவர்கள் இறக்கக் கூடியவர்கள் அல்லர் என்று கூட எண்ணவைத்து விட்டது. அதனால் தான் அவர்கள் அல்லாஹ்வின் தூதர் அவர்கள் இறந்துவிட்டார்கள் என்று கூறுவோரைக் கொல்லாது விடப்போவதில்லை என வாளை உருவிக் கையில் வைத்துக் கொண்டு சூளுரைத்தார்கள். அல்லாஹ்வின் தூதர்

அவர்கள் மனிதர் தாம், மரிக்கக் கூடியவர்கள் தாம் என அறிந்த போது, ஊமையானார்கள், உணர்விழந்தார்கள். அண்ணல் நபி (ஸல்) அவர்கள் இறந்து விட்டது உண்மை தான் என உணர்ந்ததும், அவர்கள் இவ்விதம் கூறிக் கூறி அழுதார்கள்:

''அல்லாஹ்வின் தூதர் அவர்களே! என் தாயும், தந்தையும் தங்களுக்கு அர்ப்பணமாகட்டும்! மஸ்ஜிதில் மிம்பர் கட்டுவதற்கு முன் தாங்கள் ஒரு பேரீச்சம் கட்டை மீது நின்று குத்பா ஓதி வந்தீர்கள். மிம்பர் செய்த பின், அப் பேரீச்சம் கட்டையை விட்டு விட்டு மிம்பர் மீது இருந்து கொண்டு குத்பா ஓதினீர்கள். அப்பேரீச்சம் கட்டை தங்கள் பிரிவால் அழுது முனகியது. தங்களின் முபாரக்கான கையை அதன் மீது வைத்த பிறகு தான், அது தன் அழுகையை நிறுத்தி அமைதி பெற்றது. அல்லாஹ்வின் தூதர் அவர்களே! தங்களின் உம்மத்தினர் தங்களின் பிரிவினால் அழுவதற்கு, அப்பேரீச்சம் கட்டையை விட அதிகத் தகுதி பெற்றவர்கள்'' என்று கூறி அழுதார்கள்.

''அல்லாஹ்வின் தூதருக்கு வழிப்பட்டவர், அல்லாஹ்வுக்கு வழிப்பட்டவர் ஆவர்'' என்று அல்லாஹ் அறிவித்துள்ளதைக் குறிப்பிட்டு அழுதார்கள்.

''நபி மூஸா (அலை) அவர்களுக்குக் கற்பாறையிலிருந்து ஊற்றுக்கள் ஓடுகின்ற அற்புதத்தை அருளியது, அண்ணல் நபி (ஸல்) அவர்களின் விரல்களிலிருந்து தண்ணீர் ஓடச் செய்ததை விடப் பெரிய அற்புதமல்ல'' என்று குறிப்பிட்டு அழுதார்கள்.

நபி சுலைமான் (அலை) அவர்களைக் காற்று பெருந் தொலைவுக்குக் கொண்டு சென்றதையும், புராக் அண்ணல் நபி (ஸல்) அவர்களைச் சுமந்து கொண்டு சிறிது நேரத்தில் ஏழு வானங்களுக்கும் அப்பால் சென்று விட்டுத் திரும்பியதையும் குறிப்பிட்டு அழுதார்கள்.

நபி நூஹ் (அலை) அவர்கள் ஆயிரம் ஆண்டுகள் உயிர் வாழ்ந்து சன் மார்க்கப் பிரச்சாரம் செய்ததையும் அவர்களைப் பின் பற்றியோர் மிகவும் குறைவாக இருந்ததையும், அண்ணல் நபி (ஸல்) அவரக்ளின் இறுதி ஹஜ்ஜின் போது 1,24,000 பேர் இருந்ததையும் குறிப்பிட்டு அழுதார்கள்.

இவ்வளவு சிறப்பிற்குரிய அண்ணல் நபி (ஸல்) அவர்கள் தங்களுடன் அமர்ந்திருந்ததையும், தங்களின் பெண்களை மணந்து கொண்டதையும், தங்களுக்கு உணவளித்ததையும், தங்களுடன் சேர்ந்து



உணவருந்தியதையும், கழுதை மீது சவாரி செய்ததையும், அதில் தமக்குப் பின்னால் ஆட்களை ஏற்றிக் கொண்டதையும், தரையில் அமர்ந்து சாப்பிட்டதையும், சாப்பிட்ட பின் விரல்களை சூப்பிக் கொண்டதையும் குறிப்பிட்டு அழுதார்கள்.

மலை போல் குவிந்திருந்த கலீபாக் கடமைகளால் கூட அண்ணல் நபி (ஸல்) அவர்களின் மறைவால் ஏற்பட்ட மனத்துயரை மாற்ற இயலவில்லை. அண்ணல் நபி (ஸல்) அவர்களின் நினைவு வரும்போதெல்லாம், அவர்கள் அழுவார்கள். அவர்கள் பற்றிய பேச்சு வரும்போதெல்லாம் அவர்கள் அழுவார்கள். அண்ணல் நபி (ஸல்) அவர்களின் அடக்கத்தலம் சென்றால் ''அல்லாஹ்வின் தூதர் அவர் களே! என்னை ஏன் இங்கு விட்டுச் சென்றீர்கள்?'' என்று கூறி அழுவார்கள்.

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் மீது அவர்கள் கொண்டிருந்த அன்பு, அண்ணல் நபி (ஸல்) அவர்களின் குடும்பத்தார் மீதும் படர்ந்திருந்தது. கலீபாவாக வந்தபின் அந்த அன்பு அதிகரித்ததே தவிர அணுவளவும் குறையவில்லை. அவர்களுக்கும் அலீ (ரலி) அவர் களுக்கும், ஆரம்பத்தில் உறவு அவ்வளவு நன்றாக இரா விடினும், அது பிறகு படிப்படியாக வளர்ந்தது. கலீபா அபூபக்ர் (ரலி) அவர்களுக்குத் தாம் பிரமாணம் செய்யும் போது, அங்கு உமர் (ரலி) அவர்கள் இருக்கக் கூடாது என எண்ணியவர்கள் தாம் அலீ (ரலி) அவர்கள். ஆனால் பிறகு இந்த வெறுப்பு மறைந்து, திருமண உறவாகவும் உருவாகியது. அலீ (ரலி) அவர்கள், பாத்திமா (ரலி) அவர்கள் மூலம் தமக்குப் பிறந்த உம்மு குல்தூமை, உமர் (ரலி) அவர்களுக்குத் திருமணம் செய்து கொடுத்து, உள்ளம் மகிழ்ந்தனர். கலீபாவாகத் தாம் வந்தபின், உமர் (ரலி) அவர்கள் முக்கிய விஷயங் களிலெல்லாம் அலீ (ரலி) அவர்களின் கருத்தைக் கேட்டு அறிந்து கொள்வதுண்டு. அவர்கள் சிரியா சென்றபோது, கலீபாக் கடமைகளை விட்டுச் சென்றது அலீ (ரலி) அவர்களின் கையில்தான்.

அண்ணல் நபி (ஸல்) அவர்களின் அருமைப் பெயரர்களான ஹஸன் (ரலி) ஹுஸைன் (ரலி) ஆகியோர் மீதும் கலீபா அவர் களுக்கு அளவற்ற அன்பிருந்தது. அவர்கள் இருவரும் பத்ருப் போரில் பங்கு கொள்ளாதவர்களாயினும், பத்ரு வீரர்களுக்கு வழங்கப்பட்ட உதவித் தொகையைக் கலீபா, அவர்கள் இருவருக்கும் வழங்கினர். ஒரு சமயம் யமன் நாட்டிலிருந்து வந்த அங்கிகளில் அவர்கள் இருவருக்கும் ஏற்ற

அங்கிகள் இல்லாதபோது உடனே யமனலிருந்து அங்கிகள் வரவழைத்து அவர்களுக்குக் கொடுத்து அகமகிழ்ந்தார்கள் கலீபா. ஒரு நாள் ஹஸன் (ரலி) அவர்களும், ஹுஸைன் (ரலி) அவர்களும் அவர்களைக் காண அவர்களின் வீட்டிற்கு வந்தனர். அப்பொழுது அவர்களின் புதல்வரான அப்துல்லாஹ்வே உள்ளே வர அனுமதி கிடைக்காததால், வாயிலில் உட்கார்ந்திருந்தார். அதைக் கண்டு ஹஸன் (ரலி) அவர்களும் ஹுஸைன் (ரலி) அவர்களும் திரும்பத் தொடங்கினர். அதை அறிந்ததும் கலீபா, அவர்கள் இருவரையும் வரவழைத்து, ''நீங்கள் தாராளமாக உள்ளே வரலாம். நீங்கள் என் மகனைவிட உயர்ந்தவர்கள் அல்லவா?'' என்று கூறினார்கள்.

பாரசீகத் தலைநகர் மதாயினிலிருந்து பொருள்கள் வந்தபோது, அவற்றிலிருந்து ஆயிரம், ஆயிரம் திர்ஹம்களை கலீபா அவர்கள் ஹஸன் (ரலி) அவர்களுக்கும், ஹுஸைன் (ரலி) அவர்களுக்கும் அளித்தனர். ஆனால் கலீபா தம் புதல்வர் அப்துல்லாஹ்வுக்கு ஐந்நூறு திர்ஹம்களே கொடுத்தனர். அது கண்டு அப்துல்லாஹ், நான் அல்லாஹ்வின் தூதர் காலத்திலேயே புனிதப் போர் புரிந்திருக்கிறேன். அப்பொழுது அவர்கள் இருவரும் குழந்தைகள். அப்படியிருக்க அவர்களுக்கு ஆயிரம் திர்ஹம்களும், எனக்கு ஐந்நூறு திர்ஹம்களும் ஏன் தந்தீர்கள்?'' என்று கேட்டபோது, அவரைப் பார்த்துக் கலீபா கேட்டார்கள், ''அவர்களின் தந்தையாரைப் போன்று உன் தந்தையார் உண்டா?'' என்று. உஸாமா (ரலி) அவர்களுக்குக் கலீபா தம் புதல்வர் அப்துல்லாஹ்வைவிட அதிகப் பணம் கொடுத்தனர். அது கண்டு அப்துல்லாஹ் 'உஸாமாவுக்கு இரண்டாவதாக நான் எந்தச் சமயத்திலும் இருந்ததில்லையே?' என்று கூறியபோது, ''அது உண்மையாக இருக்கலாம். ஆனால் அல்லாஹ்வின் தூதர் அவர்கள், உன்னைவிட அதிகமாக உஸாமாவை நேசித்தார்கள். உன் தந்தையைவிட அதிகமாக உஸாமாவின் தந்தையை நேசித்தார்கள்'' என்றார்கள்.

அண்ணல் நபி (ஸல்) அவர்களின் குடும்பத்தார் மீது இவ்வித அன்பு வைத்திருந்த கலீபா அவர்கள், தம் குடும்பத்தார்மீது வைத்திருந்தது சாதாரண அன்புதான். அவர்களின் மனைவி ஒருவர் மீது, அவர்களுக்கு அன்பு கொஞ்சம் அதிகமாகியது. அவர் மீது தாம் கொள்ளும் அன்பு அல்லாஹ்வின் தூதரின் பிரதிநிதி, மக்களின் தலைவர் என்னும் தம் பதவிக்குரிய கடமைகளைப் பாதித்து விடுமோ எனப் பயந்து அவர்கள், அவரை மண விலக்குச் செய்து விட்டார்கள். ஆனால் பிறகு அல்லாஹ் தம்மை அவ்விதப் பலவீனங்களிலிருந்து



அப்புறப்படுத்தி உறுதிப்படுத்திவிட்டான் என உணர்ந்ததும், அவரை மறுமுறை மனைவியாக்கிக் கொள்ள விரும்பி அவரை அழைத்துவர ஆள் அனுப்பினார்கள். அந்த ஆள் வந்தார் அந்தப் பெண்மணியுடன் அல்ல, அவர் இறந்து விட்டார் என்னும் செய்தியுடன்.

அவர்கள் தம் ஆட்சியின்போது பெரிய பதவி எதனையும் தம் குடும்பத்தவருக்குக் கொடுக்கவில்லை. அவர்கள் கூறுவது வழக்கம், ''நட்பிற்காகவும், உறவிற்காகவும், எவர் ஒருவரைப் பதவியில் அமர்த்துகிறாரோ அவர் அல்லாஹ்வுக்கும், அவன் தூதருக்கும், முஸ்லிம்களுக்கும் துரோகம் செய்தவராவார்'' என்று. அவர்கள் தம் அதிகாரி ஒருவருக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டனர்: ''நீர். உறவினர்களுக்குக் கட்டளையிட வேண்டும் அவர்கள் அடுத்தடுத்து வசிக்கக்கூடாது என்று. ஆனால் அவர்கள் ஒருவரை ஒருவர் அடிக்கடி சந்தித்துக் கொள்ள வேண்டும். உறவினர்களாய் இருப்பதால், இப்படி அடிக்கடி சந்தித்துக் கொள்ள வேண்டியது அவசியம். பகைமை ஏற்படுமாதலால், அவர்கள் அடுத்தடுத்து வசிப்பது கூடாது'' 'உறவினர்களின் உள்ளங்கள் நெருங்கியிருக்க வேண்டும், இல்லங்கள் நெருங்கியிருக்கக் கூடாது' என்பது அவர்களின் கருத்தாகும்.

அவர்களின் அன்பை அதிகம் பெற்றவர்கள் அண்ணல் நபி (ஸல்) அவர்கள். அதற்கு அடுத்தபடியாக அவர்களின் அன்பைப் பெற்றவர் அவர்களின் சகோதரர் ஜைது (ரலி) அவர்கள். ''நபி யாவேன் நானும்'' என வாதிட்ட பொய்யர் முஸைலமாவை எதிர்த்துப் புரியப்பட்ட போரில் ஜைது (ரலி) அவர்கள் இறந்து விட்டதை அறிந்தபோது, அவர்கள் கண்ணீர் உகுந்து அழுதார்கள். அவர்களின் புதல்வர் அப்துல்லாஹ் போர்க்களத்திலிருந்து உயிருடன் திரும்பி வந்ததைக் கண்டதும் அவர்களின் ஆத்திரம் அணைகடந்தது. ''நீ பாதுகாப்புடனும், பத்திரத்துடனும் வீட்டிற்குத் திரும்பி வந்திருக்கிறாய், ஜைது இறந்துவிட்டார். அவருக்குமுன் நீயும் ஏன் இறந்திருக்கக் கூடாது?'' என்று அவர்கள் அப்துல்லாஹ் அவர்களைப் பார்த்துக் கேட்டார்கள். அதற்கு அப்துல்லாஹ், ''எந்தையே! அவர் இறவா வாழ்வின் கிரீடத்தைத் தேடினார். அதை அல்லாஹ் அவருக்கு அளித்தான். நானும் தான் முயன்றேன். எனக்குத் தரப்படவில்லையே'' என்று கூறினார். ஜைது (ரலி) அவர்கள் மறைவை மறக்க முடியாமல் கலீபா அவர்கள், உறக்க மின்றிக் கழித்த இரவுகள் பலவாகும். அடிக்கடி அவர்கள், ''யமாமா பக்கம் இருந்து வீசும் காற்று ஜைதின் நறுமணத்தைக் கொணர்கிறது'' என்று கூறுவதுண்டு. முதம்மின் பின்

நுவைரா கொல்லப்பட்ட தம் சகோதரர் மீது பாடிய இரங்கற்பாவைக் கேட்டு விட்டு, ''எனக்கு மட்டும் இரங்கற்பா இயற்றுவது எப்படி என்று தெரிந்திருந்தால், என சகோதரர் ஜைது மீது பாடியிருப்பேன்'' என்றார்கள் அவர்கள்.

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் மீது உமர் (ரலி) அவர்கள் கொண்டிருந்த அன்பு அறிவின் அடிப்படையில் அமைந்ததாகும். ஹஜ்ருல் அஸ்வத் கல்லை அண்ணல் நபி (ஸல்) அவர்கள் முத்த மிட்டார்கள் என்பதற்காகத்தான் அவர்கள் முத்தமிட்டார்கள். ஒருமுறை அவர்கள் அதன் முன் நின்று கொண்டு, ''நான் அறிவேன், நீ ஒரு கல் என்பதையும், உன்னால் நன்மையோ, தீமையோ செய்ய முடியாது என்பதையும்'' என்று கூறினார்கள்.

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் ஹுதைபியாவில் தம்முடன் வந்த தோழர்களிடம் ஒரு மரத்தின் கீழ் வைத்துப் பிரமாணம் பெற்றனர். மக்கள் அம்மரம் இருக்குமிடம் செல்லவும், அம்மரத்தைப் புனிதமானதாகக் கருதவும் தொடங்கினார்கள். இந்த நம்பிக்கை நல்ல தல்ல எனக் கருதிக் கலீபா அந்த மரத்தை வெட்டி வீழ்த்த உத்தரவிட்டனர்.

ஒருமுறை ஹஜ்ஜுச் செய்து விட்டு அண்ணல் நபி (ஸல்) அவர்கள் திரும்பும்போது, வழியிலிருந்த பள்ளி ஒன்றில் தொழு தார்கள். அதன்பின் மக்கள் அப்பள்ளியைக் கண்டதும் அதை நோக்கி விரையலாயினர். ''யூதர்களும், கிறிஸ்தவர்களும் தங்களின் நபிமார்கள் விட்டுச் சென்ற சின்னங்களை வணங்கியதன் மூலமே வழி கெட்டனர்'' என்று கூறிக் கலீபா அந்தப் பழக்கத்தைக் கண்டித்தனர்.

பத்ருப் போர் முடிந்ததும், அதில் இறந்த மக்காக் குறைஷிகளின் சடலங்கள் அங்கிருந்த பாழ் கிணற்றுக்குள் போடப்பட்டன. மூன்று நாட்களுக்குப் பின் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அந்தக் கிணற் றருகில் வந்து, ''எங்கள் இறைவன் கூறிய வாக்குறுதியை உண்மையாக நாங்கள் பெற்றுக் கொண்டோம். உங்கள் நாயன் கூறிய வாக்குறுதியை உண்மை என நீங்கள் கண்டு கொண்டீர்களா?'' என்று கேட்டனர். இது உமர் (ரலி) அவர்களை வியப்படையச் செய்தது. ''என்ன, அல்லாஹ் வின் தூதர் அவர்கள் சடலங்களுடன் பேசுகிறார்கள்'' என எண்ணினார்கள். அவர்கள், அண்ணல் நபி (ஸல்) அவர்களைப் பார்த்து, ''அல்லாஹ்வின் தூதர் அவர்களே! உயிர் இல்லாச் சடலங்கள் எப்படிக் கேட்கும்?'' என வினவினார்கள். அதற்கு அண்ணல் நபி



(ஸல்) அவர்கள், ''நான் சொல்லும் விஷயங்களை, அவர்களைவிட அதிகமாக நீங்கள் செவியுறவில்லை. உங்களுக்கு வெளிச்செவி உண்டு. அவர்களுக்கு ஆன்மச் செவி உண்டு. அதனால் அவர்கள் எல்லாவற்றையும் கேட்கிறார்கள்'' எனப் பதிலிறுத்தனர்.

இது எவ்வளவு உண்மை என்பதை உமர் (ரலி) அவர்கள் தம் சொந்த அனுபவம் ஒன்றின் மூலம் பிறகு அறிந்து கொண்டார்கள். ஒருநாள் அவர்கள் மதீனாவின் ஜன்னத்துல் பக்கீ சென்று, அங்கு அடங்கப்பட்டிருப்பவர்களைப் பார்த்து, ''உங்களுக்கு ஈடேற்றம் உண்டாவதாக! எங்களிடத்தில் உங்களுக்குள்ள செய்திகள், உங்களின் மனைவியர் மறுமணம் செய்து கொண்டனர். உங்களின் வீடுகள் குடியிருக்கப்படுகின்றன, உங்களின் பொருள்கள் பங்கிடப் படுகின்றன ஆகியவையே'' எனப் பகர்ந்தார்கள். அப்பொழுது அங்கிருந்து, ''கத்தாபின் மகனே! எங்களிடத்தில் உங்களுக்குள்ள செய்திகள், நாங்கள் முன்பாக அனுப்பி வைத்ததைப் பெற்றுக் கொண்டோம், நாங்கள் செலவு செய்ததில் இலாபம் அடைந்தோம், நாங்கள் விட்டு வந்ததில் இழப்பெய்தினோம் என்பவையே'' என்னும் ஒலி வந்தது.

ஜுஹைனா கூட்டத்தைச் சேர்ந்த பெண் ஒருத்தி விபச்சாரம் செய்து விட்டாள். அதனால் அவள் கருவுற்றாள். தான் புரிந்த பாவத்திற்கு உலகில் வைத்தே தண்டனை பெற்றுக் கொள்ள விரும்பி அவள் அண்ணல் நபி (ஸல்) அவர்களின் சமூகம் வந்தாள். அவர்களிடம் தான் புரிந்த பாவத்தைக் கூறி, அதற்குரிய தண்டனையை நிறைவேற் றும்படிக் கோரினாள். அவள் வயிற்றில் குழந்தை இருந்ததால் குழந்தை பிறந்ததும் வரும்படி அவர்கள் கூறினார்கள். அவ்விதமே அவள் குழந்தை பிறந்ததும் வந்து தன் மீது தண்டனையை நிறைவேற்றும்படி வேண்டினாள். அதன்படி அவள் கல்லால் எறியப்பட்டுக் கொல்லப்பட்டாள்.

அவளின் மரணத் தொழுகையை அண்ணல் நபி (ஸல்) அவர் களே நடத்தினர். இது உமர் (ரலி) அவர்களை அதிர்ச்சி கொள்ளச் செய்தது. அவர்கள் அண்ணல் நபி (ஸல்) அவர்களிடம் வந்து, ''அப் பெண் விபச்சாரம் செய்திருக்க (அவளுக்குத்) தாங்களே தொழவைத்து விட்டீர்களே?'' எனக் கேட்டார்கள். அதைக் கேட்டு அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அளித்த பதில் இது: ''அல்லாஹ்விடம் அவள் பாவ மன்னிப்புக் கோரினாள். அவளுக்கு அளிக்கப்பட்ட பாவமன்னிப்பு இம் மதீனாவிலுள்ள எழுபது பேர்களுக்குப் பங்கிடப்பட்டால், அது அவர்களுக்கு வசதியாகவே அமையும்.''

அண்ணல் நபி (ஸல்) அவர்களிடம் ஒருவர் வந்து தமக்கு ஏதாவது தரும்படி இரந்தார். அவருக்குக் கொடுக்க அப்பொழுது அவர்களிடம் எந்தப் பொருளும் இல்லை. கடை வீதிக்குச் சென்று எவரிடமாவது வாங்கிக் கொள்ளும்படியும் அவருக்குத் தாம் கொடுத்துவிடுவதாயும் அவர்கள் கூறினர். இது உமர் (ரலி) அவர்களை ஆச்சரியம் கொள்ள வைத்தது. அவர்கள், அண்ணல் நபி (ஸல்) அவர்களைப் பார்த்து, ''இப்படி ஏன் செய்யவேண்டும்? இருந்தால் தானே கொடுக்க வேண்டும்?'' என வினவினார்கள். அது கேட்டு அண்ணல் நபி (ஸல்) அவர்கள், அளித்த பதில் இது: ''அல்லாஹ்வுக்காகக் கடன்பட்டால், அல்லாஹ் அதைத் தீர்த்து விடுவான்.''

பயணங்களின் போது தொழுகையைச் சுருக்கிக் கொள்ள ஓர் அனுமதி இருந்து வந்தது. அதற்குக் காரணம், அப்பொழுது பாதைகளெல்லாம் பாதுகாப்பற்றவையாய் இருந்ததாகும். எந்தச் சமயத்திலும் பகைவர் முஸ்லிம்கள் மீது பாயலாம் என்னும் ஆபத்து இருந்து காலம் அது. இந்த நிலை, பிறகு மாறிய போதும், இந்த அனுமதி இருப்பது உமர் (ரலி) அவர்களின் மனத்தில் வினா எழச் செய்தது. அவர்கள் அண்ணல் நபி (ஸல்) அவர்களைப் பார்த்து, ''ஏன் பாதைகள் பாதுகாப்பானவையாய் ஆகிய பிறகும் தொழுகையைச் சுருக்கிக் கொள்வது அனுமதிக்கப்படுகிறது?'' என்று கேட்டார்கள். அதற்கு அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அளித்த பதில் இது: ''அது இறைவனே வழங்கிய சலுகையாகும்.''

உயர்தரப் பட்டாடை ஒன்று விற்கப்படுவதைப் பார்த்த உமர் (ரலி) அவர்கள் அதனை அண்ணல் நபி (ஸல்) அவர்களிடம் கொண்டு வந்து, ''அல்லாஹ்வின் தூதர் அவர்களே! இதனைத் தாங்கள் விலை கொடுத்து வாங்கி, பெருநாட்களின் போதும், தூதுவர்களை வரவேற்கும் போதும் அணிந்து கொள்ளுங்கள்!'' என்று கூறினார்கள். அதைக் கேட்டு அண்ணல் நபி (ஸல்) அவர்கள், ''இது (மறுமையில்) எத்தகைய நற்பேறுமற்றவருடைய ஆடையல்லவா?'' என்றனர். பிறகு ஒரு நாள் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் உமர் (ரலி) அவர்களுக்குப் பட்டுச் சட்டை ஒன்றை அன்பளிப்பாக அனுப்பி வைத்தனர். அதை எடுத்துக் கொண்டு உமர் (ரலி) அவர்கள் அண்ணல் நபி (ஸல்) அவர்களிடம் வந்து, அவர்கள் முன்பு ஒருமுறை பட்டாடை பற்றிக் கூறியதை எடுத்துக் காட்டி, ''ஏன் இதனை எனக்கு அனுப்பி வைத்தீர்கள்?'' எனக் கேட்டார்கள். அதற்கு அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அளித்த பதில் இது: ''நிச்சயமாக, நீர் அதனை அணியும்



பொருட்டல்ல நான் அனுப்பிவைத்தது. அதனை நீர் விற்று உம்முடைய தேவையை நிறைவேற்றிக் கொள்வீர் என்றுதான் அனுப்பிவைத்தேன்.''

ஹுனைன் போரின்போது அலீ (ரலி) அவர்கள் அபுல் ஆஸ் பின் ரபி என்னும் வீரனை நேரடிப் போரில் கொன்று விட்டு வந்த போது, ''அல்லாஹு அக்பர்!'' என முழங்கி அலீ (ரலி) அவர்களை வரவேற்று, அவர்களுடன் சற்று நேரம் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் தனித்திருந்தனர். அதைப் பார்த்து உமர் (ரலி) அவர்கள், ''அல்லாஹ் வின் தூதர் அவர்களே! தாங்கள் எதையாவது இரகசியமாக அலீக்கு மட்டுமே அறிவிக்கிறீர்களா?'' என்று கேட்டார்கள். அதைக் கேட்டு அண்ணல் நபி (ஸல்) அவர்கள், ''எந்த இரகசியத்தையும் அவருக்கு நான் அறிவிக்கவில்லை, அல்லாஹ் அறிவிக்கிறான்'' என்றனர். அதன் பொருள், ''அலீயுடன் அல்லாஹ்வின் ஆணையின் பேரில்தான் பேசினேன், நானாகப் பேசவில்லை'' என்பதாகும்.

இதைக் கேட்டு உமர் (ரலி) அவர்கள், தாம் அவசரப்பட்டு விட்டதை உணர்ந்து, அதிகம் வருந்தினார்கள். தனிமையில் இருக்கும் போது, ''ஹுதைபியாவில் அல்லாஹ்வின் தூதர் அவர்களுக்கு எதிர்ப்புக் காட்டியதுபோல், இப்பொழுது எதிர்ப்புக் காட்டியதும் ஆகி விடுமோ என அஞ்சுகிறேன்'' எனக் கூறிக் கவலைப்பட்டார்கள்.

அண்ணல் நபி (ஸல்) அவர்களிடம் தமக்கு ஏற்படும் ஐயங் களுக்கெல்லாம் உடனுக்குடன் விளக்கம் கேட்டு விடுவது உமர் (ரலி) அவர்களின் வழக்கம். அவர்கள் கேட்கும் கேள்விகளுக்கு விடையாகச் சில சமயங்களில் இறைவசனமும் இறங்கியதுண்டு. அல்லாஹ்வின் தூதர் அவர்களுக்கு அவர்களின் மனைவியர் சிலர் தொந்தரவு கொடுப்பது உமர் (ரலி) அவர்களுக்கு தெரிய வந்தது. அண்ணல் நபி (ஸல்) அவர்களின் உடல் மீது துரும்புவிழவே பொறுக்காத உமர் (ரலி) அவர்கள், அவர்களின் உள்ளத்தின் மீது இரும்பு விழவா பொறுப்பார்கள்? உடனே அவர்கள் அண்ணல் நபி (ஸல்) அவர்களின் மனைவியரிடம் சென்று, ''(அல்லாஹ்வின் தூதர் அவர்களுக்குத் தொந்தரவு கொடுப்பதை விட்டு) நீங்கள் விலகிக் கொள்ளுங்கள்! இல்லையேல் அல்லாஹ், தன் தூதருக்கு உங்களை விட மேலான வர்களை மாற்றிக் கொடுத்து விடுவான்'' என்று கூறினார்கள். இறுதி யாக அல்லாஹ்வின் தூதரின் மனைவியர் ஒருவரிடம் வந்தார்கள். (அப்பொழுது அவர்) ''உமரே! அறிந்து கொள்ளும்! அல்லாஹ்வின்

தூதரின் குடும்ப விஷயத்தில் நீர் தலையிடுகிறீர். தங்கள் மனைவி யருக்கு அல்லாஹ்வின் தூதர் அவர்கள் உபதேசம் செய்யவில்லை. அவர்களுக்கு நீர் உபதேசம் புரிகிறீர்'' என்றார். அப்பொழுது ''உங்களை அவர் விவாக விலக்குச் சொல்லி விட்டால், உங்களைவிட மேலான, அன்புள்ள மனைவியரை அவருக்கு அவருடைய நாயன் மாற்றிக் கொடுக்கக்கூடும்....'' என்னும் இறைவசனம் இறங்கியது.

ஒருநாள் உமர் (ரலி) அவர்கள் அண்ணல் நபி (ஸல்) அவர்களைப் பார்த்து, ''தங்களின் மனைவிமார்கள் இருக்கும் இடத்திற்கு ஆண்களில் நல்லவர்களும் வருகிறார்கள், கெட்டவர்களான முனாபிக்குகளும் வருகிறார்கள். அந்நியப் பெண்களிடம் திரை இல்லாமல் ஆண்கள் பேசக் கூடாது என்றும், அதே போல் அந்நிய ஆண்களைக் கண்ட பெண்கள் மறைந்து கொள்ள வேண்டும் என்றும், சட்டம் செய்தால் என்ன?'' என்று கேட்டார்கள். உமர் (ரலி) அவர்கள் இவ்விதம் இயம் பிய அன்றே, ''நபிமார்களின் மனைவிமார்களிடம் நீங்கள் பொருள் களைக் கேட்பதானால், திரைக்குப் பின் நின்று கேட்டுக் கொள்ளுங் கள்!'' என்னும் இறைவசனம் இறங்கியது.

ஒருநாள் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் உமர் (ரலி) அவர் களுக்குக் கஃபாவிலுள்ள முக்கிய இடங்களைக் காட்டிக் கொண்டு வந்தனர். அவர்கள் 'மக்காமெ இப்ராஹீம்' என்னும் இடத்தைச் சுட்டிக் காட்டியபோது, ''நாங்கள் இந்த இடத்திற்குப் பின்னால் தொழுது வரலாமா?'' என உமர் (ரலி) அவர்கள் கேட்டார்கள். ''இந்த இடத்தைத் தொழுது கொள்ளும் இடமாக அமைத்துக் கொள்ளுங் கள்!'' என்று இறையறிவிப்பு வந்தால்தான் நான் அவ்வாறு செய்ய முடியும்'' என்று அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறினர். அன்று மாலையே, ''இப்ராஹீம் நின்ற இடத்தை நீங்கள் தொழும் இடமாக வைத்துக் கொள்ளுங்கள்!'' *(2:125)* என்னும் இறைவசனம் இறங்கி விட்டது. மேற்கண்ட மூன்று விஷயங்கள் பற்றித்தான் உமர் (ரலி) அவர்கள் இப்படிக் கூறுவது வழக்கம்: ''அல்லாஹ் மூன்று விஷயங் களில் என்னோடு இணங்கினான்.''

ஒரு நாள் உமர் (ரலி) அவர்கள் முஆது (ரலி) அவர்களுடன் அண்ணல் நபி (ஸல்) அவர்களிடம் சென்று, ''மது அருந்துவது பற்றி எங்களுக்கு மார்க்கத் தீர்ப்பு அளியுங்கள்! ஏனெனில் அது அறிவை அகற்றுவதாக இருக்கிறது'' என்று கூறினர். அப்பொழுது, ''(நபியே!) சாராயத்தையும், சூதாட்டத்தையும் பற்றியும் அவர்கள் உம்மிடம்



கேட்கின்றனர். அதற்குக் கூறும் இவ்விரண்டிலும் பெரும் பாபமிருக் கின்றது. மனிதர்களுக்கு(ச் சில) பயன்களும் இருக்கின்றன. ஆனால் அவ்விரண்டிலுள்ள பாபம் அவ்விரண்டிலுள்ள பயனை விட மிகப் பெரியது'' *(2 : 219)* என்னும் இறைவசனம் இறங்கியது. மேலும், ''மதுபானத்தைக் கொண்டும் சூதாட்டத்தைக் கொண்டும் உங்களுக் கிடையில் விரோதத்தையும் குரோதத்தையும் உண்டுபண்ணவும், அல்லாஹ்வின் ஞாபகத்திலிருந்தும், தொழுகையிலிருந்தும் உங்களைத் தடுத்து விடவுமே நிச்சயமாக ஷைத்தான் விரும்புகிறன். (ஆகவே அவைகளிலிருந்து நீங்கள் விலகிக் கொள்வீர்களாக'' *(5 :91)* என்னும் இறைவசனமும் இறங்கியது. இவ்வசனங்களைக் கேட்டதும் உமர்(ரலி) அவர்கள், ''என் ரப்பே! நாங்கள் விலகிக் கொண்டோம்'' என உரைத்தார்கள்.

அண்ணல் நபி (ஸல்) அவர்களின் கருத்திற்கு மாறுபட்டுச் சில சமயங்களில் உமர்(ரலி) அவர்களின் கருத்து இருந்ததுண்டு, உமர் (ரலி) அவர்களின் கருத்தை அங்கீகரிக்கும் விதம் இறைவசனம் இறங்கியதும் உண்டு. பத்ருப் போரில் பிடிக்கப்பட்ட கைதிகளை என்ன செய்வது என்னும் விஷயத்தில், இருவரும் மாறுபட்டக் கருத்துக் கொண்டிருந்தனர் ஆனால் உமர் (ரலி) அவர்களின் கருத்தை அங்கீகரித்தே இறைவசனம் இறங்கியது.

அண்ணல் நபி (ஸல்) அவர்களின் பரமவைரி அப்துல்லாஹ் இப்னு உபை இறந்ததும், அவன் உடல் புதைப்பதற்காகக் கொண்டு வரப்பட்டது. ஹுனைர் என்னும் இடத்தை அது அடைந்தபோது, அதனுடன் செல்ல அண்ணல் நபி (ஸல்) அவர்கள் எழுந்தனர். அப்பொழுது உமர் (ரலி) அவர்கள், அவர்களின் சட்டையைப் பிடித்துக் கொண்டு, அவன் உடலைப்பின் தொடர்ந்து செல்ல வேண்டாம் என வற்புறுத்தினார்கள். அவன் ஆயிஷா (ரலி) அவர்களுக்கு எதிராக எழுப்பிவிட்ட அவதூற்றையும், நினைவுறுத் தினார்கள். ஆனால் அதனை அண்ணல் நபி (ஸல்) அவர்கள் பொருட் படுத்தாமல் போகத் தொடங்கினர். ஆனால் உமர் (ரலி) அவர்கள் அவர்களின் சட்டையை உறுதியுடன் பிடித்துக்கொண்டு அவனுக்காக அவர்கள் எழுபது முறை இறைஞ்சினாலும், மன்னிக்கமாட்டேன்'' என இறைவன் தெளிவாகக் கூறியுள்ளதை மீண்டும் நினைவு படுத்தினார்கள். அப்பொழுது அண்ணல் நபி (ஸல்) அவர்கள் தம்மைப் போகவிடும்படி கேட்டு விட்டுக்கூறினர், ''அவர்களின் பாவமன்னிப்பிற்காக எழுபது முறை இறைஞ்ச அல்லது இறைஞ்சாது

இருக்க அல்லாஹ் எனக்கு அனுமதி அளித்துள்ளான். எழுபது முறை களுக்கு மேல் அப்துல்லாஹ்வுக்காக இறைஞ்சினால், அல்லாஹ் அவரை மன்னிப்பான் என அறிந்தால், நான் அவ்விதமே இறைஞ்சுவேன். அவருக்காக இறைஞ்சுவது அல்லது இறைஞ்சாது இருப்பது என் கையில் இருக்கிறது. அதை ஏற்றுக் கொள்வது அல்லது ஏற்றுக்கொள்ளாது இருப்பது அல்லாஹ்வின் கையில் இருக்கிறது. எனவே, நான் அப்துல்லாஹ்வுக்காக இறைஞ்சப் போகிறேன்.'' இவ்விதம் கூறிவிட்டு அவன் உடலைப் பின் தொடர்ந்து சென்று, அவன் மீட்சிக்காக அவர்கள் இறைஞ்சினர். இறைஞ்சிவிட்டு அவ்விடத்தை விட்டு அகலுமுன்னர், அல்லாஹ்வின் கண்டிப்பான இந்த ஆணை அவர்களுக்கு வந்தது. ''அன்றி அவர்களில் எவர் இறந்து விட்டாலும், அவர் மீது ஒருபோதும் (ஜனஸா) தொழுகையும் தொழாதீர்! அவருடைய கப்ரில் (அவர்களுக்காக மன்னிப்புக் கோரி) நிற்காதீர்! ஏனென்றால் நிச்சயமாக அவர்கள் அல்லாஹ்வையும், அவனுடைய தூதரையும் நிராகரித்துவிட்டதுடன், பாவிகளாகவே இறந்துமிருக் கின்றனர்.'' *(9:84)*

இவ்வாறு உமர் (ரலி) அவர்கள் விரும்பியவிதம் அல்லது விளம்பியவிதம் இறைவசனம் இறங்கிய சம்பவங்கள் 21 என்று இமாம் சுயூத்தி (ரஹ்) அவர்களும், 15 என்று இன்னும் சிலரும் கூறுகின்றனர். அது பற்றி அப்துல்லாஹ் இப்னு உமர் (ரலி) அவர்களின் அபிப் பிராயம் இது : '' 'நிச்சயமாக அல்லாஹ் உமர் கூறிய வண்ணமும், எண்ணிய வண்ணமுமே உண்மையை நிலை நாட்டினான்'' என அல்லாஹ்வின் தூதர் அவர்கள் சொன்னார்கள். மேலும் மக்களை எந்தப் பிரச்சினையாவது அணுகினால், அது பற்றி அல்லாஹ்வின் தூதர் அவர்கள் தம் கருத்தைத் தெரிவிப்பார்கள், உமர் (ரலி) அவர்களும் தம் கருத்தைத் தெரிவிப்பார்கள். உமர் (ரலி) அவர்களின் கருத்துப்படி இறைவசனம் இறங்கியது.''

இவ்விதம் இறைவசனம் இறங்குவது அறிந்து மகிழ்ந்த ஒருவர் உமர் (ரலி) அவர்கள். மற்றொருவர் அண்ணல் நபி (ஸல்)அவர்கள். இதனால் உமர்(ரலி)அவர்களின் அடக்கமும் அதிகரித்தது. அண்ணல் நபி (ஸல்) அவர்கள் உமர் (ரலி) அவர்கள் மீது கொண்ட மதிப்பும் அதிகரித்தது. அதனால் தான் அண்ணல் நபி (ஸல்) அவர்கள், ''உமரே! நான் நபியாக வந்திராவிட்டால், என்னுடைய இடத்திற்கு நீர் வந்திருப்பீர்'' என்றும், ''எனக்குப்பின் நபி தோன்றுவதாய் இருந்தால், அதற்கு உமர் பின் கத்தாப் அருகதையுள்ளவர்'' என்றும், ''பனீஇஸ்ரா



யீல்களில் சில மனிதர்கள் இருந்தனர். அவர்கள் இறை தூதர்கள் அல்லர். அவர்கள் அல்லாஹ்வுடன் பேசினர். என் உம்மத்தில் ஒருவர் அப்படி இருந்தால் அவர் நிச்சயமாக உமராகவே இருப்பார்.'' என்றும், ''உமர் வாய்திறந்து பேசினால் அது அவரே பேசுவதல்ல. அவரின் நாவில் அல்லாஹ் பேசுகிறான்'' என்றும், ''உமருடைய நாவிலும் இதயத்திலும் அல்லாஹ் சத்தியத்தை ஏற்படுத்தியிருக்கிறான்'' என்றும், ''உண்மை உமரின் நாவைக் கொண்டு பேசுகிறது'' என்றும், ''உமர் என்னுடன் இருக்கிறார், நான் உமருடன் இருக்கிறேன். உமர் எங்கிருந்தாலும் அவருடன் சத்தியம் இருக்கிறது'' என்றும் கூறினர்.

அபூசுப்யான் ஒப்பந்தத்தைப் புதுப்பிக்கும்படி வேண்டிக் கொள்வதற்காக மதீனா வந்தார். ஆனால் அவரால் அண்ணல் நபி (ஸல்) அவர்களைச் சந்திக்கக் கூட இயலவில்லை.தோல்வியைச் சுமந்துகொண்டு அவர் மக்கா திரும்பினார். இது பற்றி அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அபூபக்கர் (ரலி), உமர் (ரலி) ஆகிய தம் இரு தோழர் களையும் அழைத்து ஆலோசனை கேட்டனர். ''இனி நாம் என்ன செய்ய வேண்டும்?'' என்பதே அவர்களின் ஆலோசனையின் அடிப் படையாக இருந்தது. மக்கா மீது படையெடுப்பது அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு அவ்வளவாகப் பிடிக்கவில்லை. ''அல்லாஹ்வின் தூதர் அவர்களே! அவர்களும் உங்களின் சமூகத்தார் தாம்'' என்று கூறிப் படையெ டுப்பைத் தவிர்ப்பது நல்லது என்னும் தம் உளக்கருத்தை அவர்கள் சூசமாக உரைத்தார்கள். ஆனால் உமர் (ரலி) அவர்களுக்கு மக்கா மீது படையெடுப்பது அதிகம் பிடித்திருந்தது. ''அவர்கள் தாம் காபிர்களின் தலைவர்கள். அவர்கள் சூனியக்காரர்கள், பொய்யர்கள்'' என்று தொடங்கி மக்காக் குறைஷிகளின் தீமைகளை ஒவ்வொன்றாகக் குறிப்பிட்டுவிட்டு, ''மக்காவாசிகள் கீழ்ப்படியாத வரை, (மற்ற) அரபிகள் கீழ்ப்படிய மாட்டார்கள்'' என்று உமர் (ரலி) அவர்கள் உரைத்தார்கள்.

தம் இரு தோழர்களும் கூறிய கருத்துக்களைக் கேட்டுவிட்டு அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அறிவித்தனர்: ''அபூபக்ர், இப்ராஹீம் (அலை) அவர்களைப் போல் இருக்கிறார்; மார்க்க விஷயத்தில் மிருது வாக இருக்கிறார். உமர், நூஹ் (அலை) அவர்களைப் போல் இருக் கிறார்; ஆனால் காரியம் நிகழுவதெல்லாம் உமர் கூறியபடித்தான்.

ஒரு சமயம் அண்ணல் நபி (ஸல்) அவர்கள், ''நான் (ஒரு) கனவுகண்டேன். மக்கள் என்னிடம் கொண்டு வரப்பட்டனர்.

அவர்கள் அங்கி அணிந்திருந்தனர். சிலரின் அங்கி கொப்பூழ் வரை இருந்தது, சிலரின் அங்கி அதற்குக் கீழும் இருந்தது. உமர் பின் கத்தாப் என் முன் கொண்டுவரப்பட்டார். அவருடைய அங்கி தரையைத் தொடும்படி அவ்வளவு கீழே இருந்தது'' என்று கூறினர். அதைக் கேட்ட மக்கள், ''அல்லாஹ்வின் தூதர் அவர்களே! இதன் பொருள் என்ன?'' என்று வினவியபோது, அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அளித்த ஒற்றைச் சொல் பதில் ''தீன்'' (சன்மார்க்கம்) என்பதாகும். இதற்கு விளக்கம் போல் பிறகு அவர்கள் ஒரு சமயம் கூறினர், ''சன்மார்க்க விஷயத்தில் அதிக வன்மையுள்ளவர் ஆவார் உமர்'' என்று.

மற்றொரு சமயம் அண்ணல் நபி (ஸல்) அவர்கள், ''நான் தூங்கும்போது பால் கிண்ணம் ஒன்று எனக்குத் தரப்பட்டது. நான் குடித்தேன். திருப்தியாகக் குடித்தேன், என்னுடைய நகங்களிலிருந்து பால் வெளிவந்தது. பிறகு நான் குடித்து மீதியானதை உமர் பின் கத்தாபுக்குக் கொடுத்தேன்'' என்று கூறினர். அதைக் கேட்டு மக்கள், ''அல்லாஹ்வின் தூதர் அவர்களே! இதற்குப் பொருள் என்ன?'' என வினவியபோது, அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அளித்த ஒற்றைச் சொல் பதில் ''அறிவு'' என்பதாகும்.

இன்னொரு சமயம் அண்ணல் நபி (ஸல்) அவர்கள், ''நான் ஒரு கனவில் ஒரு கிணற்றில் நின்று கொண்டிருக்கக் கண்டேன். அங்கு ஒரு தோல் வாளி வைக்கப்பட்டிருந்தது. அந்தக் கிணற்றிலிருந்து நான் இறைவனின் அருள் எவ்வளவு இருந்ததோ, அத்தனை வாளித் தண்ணீர் எடுத்துக் கொண்டேன். பிறகு அபூபக்ர் அந்த வாளியை எடுத்துக் கொண்டார். அவர் ஒரு வாளி, இரண்டு வாளித் தண்ணீர் அக்கிணற்றிலிருந்து அள்ளிக் கொண்டார். அவர் அள்ளும் போது பலவீனம் இருந்தது. அவருடைய பலவீனத்தை அல்லாஹ் மன்னிப்பானாக! அதன்பின் அந்த வாளியை உமர் எடுத்துக் கொண்டார். அவர் தண்ணீர் இறைப்பதைப் போன்று வேறு எந்தப் பலவானையும் நான் பார்க்கவில்லை. மக்கள் எல்லோரும் தங்கள் ஒட்டகைகளுக்குத் தண்ணீர் காட்டிக் கொண்டனர்.''

வேறொரு சமயம் அண்ணல் நபி (ஸல்) அவர்கள், ''நான் உறங்கிக் கொண்டிருக்கையில் சுவர்க்கத்தில் என்னைப் பார்த்தேன். அப்பொழுது ஒரு மாளிகையின் ஓரத்தில் ஒரு பெண் (உட்கார்ந்து) உளூச் செய்து கொண்டிருந்தாள். (நான் அவளிடம்) 'இந்த மாளிகை



யாருக்குரியது?' என்று கேட்டேன். 'உமர் இப்னு கத்தாபுக்குரியது' என்று (அவள்) கூறினாள், அவருடைய கோபம் எனக்கு நினைவு வந்ததால் பின் வாங்கியவனாக நான் திரும்பி விட்டேன்'' என்று தம் தோழர்களிடம் கூறினர். அப்பொழுது அங்கிருந்த உமர் (ரலி) அவர்கள் அழுது, ''அல்லாஹ்வின் தூதர் அவர்களே! தங்கள் மீதா நான் கோபம் கொள்வேன்?'' என்று கேட்டார்கள்.

மற்றொரு சமயம் அண்ணல் நபி (ஸல்) அவர்கள், 'உமர் பொருட்டால் குழப்பங்களின் வாயில் அடைக்கப்பட்டிருக்கிறது. அவர் உயிரோடு இருக்கும்வரை எவரும் குழப்பம் விளைவிக்கத் துணியமாட்டார்கள்'' என்றார்கள்.

ஒருமுறை உமர் (ரலி) அவர்கள் உம்ரா செய்யச் சென்ற போது, அண்ணல் நபி (ஸல்) அவர்கள், ''(உமரே!) உம் துஆவில் நம்மை மறந்து விடாதீர்!'' என்று கூறினார்கள்.

மேற்கண்ட உரைகள் அண்ணல் நபி (ஸல்) அவர்கள், உமர் (ரலி) அவர்கள் மீது கொண்டிருந்த மதிப்பிற்கு உரைகல். கீழ்வரும் நிகழ்ச்சி அண்ணல் நபி (ஸல்) அவர்கள் மீது உமர் (ரலி) அவர்கள் கொண் டிருந்த மதிப்பிற்கு ஒரு கணிப்பு. ஒருநாள் மதீனாவின் தெருவில் உமர் (ரலி) அவர்களின் புதல்வரும், அண்ணல் நபி (ஸல்) அவர்களின் பெயரரும் விளையாடிக் கொண்டிருந்தனர். அப்பொழுது அவர்களுக் குள் சண்டை வந்து விடுகிறது. அண்ணல் நபி (ஸல்) அவர்களின் பெயரர் ஹுஸைன் (ரலி), உமர் (ரலி) அவர்களின் புதல்வரைப் பார்த்து, ''நீ என்ன எங்கள் பாட்டனாரின் அடிமை மகன் தானே'' என்று கூறி விடுகின்றனர். இது உமர் (ரலி) அவர்களின் புதல்வருக்கு ஆத்திரத்தையும், அழுகையையும் உண்டுபண்ணிவிடுகிறது. உடனே அவர் தம் தந்தையாரிடம் வருகிறார், ''ஹுஸைன் கூறுகிறார் நீங்கள் அவர் பாட்டனாரின் அடிமையாம்'' என்கிறார். அதைக் கேட்டதுதான் தாமதம் உமர் (ரலி) அவர்கள் எழுகிறார்கள். தம் புதல்வருடன் ஹுஸைன் (ரலி) நிற்கும் இடத்திற்கு வருகிறார்கள். ஹுஸைன் (ரலி) அவர்களின் கையைப் பிடித்துக்கொண்டு, ''அல்லாஹ்வின் தூதர் பெயரரே! கொஞ்சம் உம் பாட்டனாரின் அடக்கத் தலம் வரை வாரும்!' எனக் கெஞ்சலாகக் கூறுகிறார்கள். ஹுஸைன் (ரலி) அவர்களும் அவ்வாறே வருகின்றனர். எல்லோரும் அண்ணல் நபி (ஸல்) அவர்களின் அடக்கத்தலம் வந்து சேருகின்றனர். ''அல்லாஹ்வின் தூதர் பெயரரே!'' என ஹுஸைன் (ரலி) அவர்களை விளிக்கிறார்கள். உமர்

(ரலி) அவர்களின் கண்களில் நீர் முட்டிக்கொண்டு நிற்கிறது. அவர்களின் நா தழுதழுத்த குரலில் இவ்விதம் கூறுகிறது: ''நீர் சாட்சி சொல்லும், நான் அல்லாஹ்வுடைய தூதரின் அடிமை என்று. நீர் அவ்விதம் என் மகனிடம் கூறினீர்: அவனுடைய செவிகள் அதற்குச் சாட்சி. அதனை இப்பொழுது நீர் இங்கு வைத்து, மீண்டும் ஒரு முறை கூறிவிடும்! அதன் மூலம் என் அடிமைத்தனம் உறுதியாகட்டும்! நான் உம்பாட்டனாரின் அடிமையாகி, அதன் பலனால் நான் சுவர்க்கத்தின் உரிமையாளனாக ஆகிவிடுவேன்.'' ஹுஸைன் (ரலி) அவர்களின் கைகளைப் படித்துக் கொண்டு உமர் (ரலி) அவர்கள் மறுகுகிறார்கள். அப்பொழுது அவர்களின் கண்களில் நீர் பெருகுகிறது.

## கடுமைக் குணம்

கடுமைக்குணமும், இத இயல்பும் இணைந்த ஓர் அற்புத மனிதர் என்று உமர் (ரலி) அவர்களை உரைக்கலாம். ஆனால் கடுமைக் குணம் ஒரு தீமை என்று கூறத்தக்க அளவு அவர்களிடம் இருந்ததில்லை. இத இயல்பு தீமை செய்துவிடும் அளவும் அவர்களிடம் இருந்தது கிடையாது. அதனால் அவர்களின் கடுமைக் குணத்தாலும் இத இயல்பாலும் விளைந்தது நன்மையே என்று நவிலலாம். ஊர்த்தெருவில் உமர் (ரலி) அவர்கள் வருவதைக் கண்டால் சிறுவர்கள் சிதறி ஓடி எங்காவது போய் ஒளிந்து கொள்வார்கள். அவ்வாறு ஓடி ஒளியாத சிறுவர் அப்துல்லாஹ் பின் சுபைர் (ரலி) அவர்கள்தாம். அவர்களின் வீரம் கண்டு வியந்து, உமர் (ரலி) அவர்கள், ''ஏன் மற்றவர் களெல்லாம் ஓட்டமெடுக்க நீ மட்டும் நின்று கொண்டிருக்கிறாய்?'' என்று கேட்டனர். அதற்கு அந்தப் புலிக் குருளை புகன்ற பதில் இது: ''நான் தவறு எதுவும் செய்யவில்லையே ஓடி ஒளிவதற்கு. மேலும் தெருவும் குறுகியதாய் இல்லையே தாங்கள் செல்ல இயலா அளவுக்கு.''

ஊர்ச் சிறுவர்கள் மட்டுமல்ல, பெண்களும் உமர் (ரலி) அவர்களுக்கு அஞ்சி நடுங்கினார்கள். ஒருநாள் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் முன் பெண்கள் பெருங்குரலில் பேசிக் கொண்டிருந்தனர். அந்தச் சமயத்தில் உமர் (ரலி) அவர்கள் அங்கு வந்து விட்டார்கள். அவர்களைக் கண்டதும் உரத்துப் பேசிக் கொண்டிருந்த பெண்கள் அனைவரும் ஓட்டமெடுத்தனர். உமர் (ரலி) அவர்களின் அதட்டல் அவர்கள் அனைவரின் கால்களையும் கட்டியது. அவர்கள் அப்படியே நின்று விட்டனர். அவர்களைப் பார்த்து உமர் (ரலி) அவர்கள், ''நீங்கள்



எனக்குப் பயப்படுகிறீர்கள். அல்லாஹ்வின் தூதர் அவர்களுக்குப் பயப்படாதவர்களாய் இருக்கிறீர்கள்'' என்று கூறினர். அதற்கு அந்தப் பெண்கள், ''நீர் மிகவும் கடின குணம் கொண்டவர். அவர்கள் அப்படி அல்ல'' என்று பதில் அளித்தார்கள். அதைக் கேட்டு அண்ணல் நபி (ஸல்) அவர்கள், ''கத்தாபுடைய மகனே! எவன் கையில் என் உயிர் உளதோ, அவன் மீது ஆணையாக, நீர் நடந்து செல்லும் எந்த வழியிலாவது ஷைத்தான் உம்மைக் கண்டால் அவன் உம் பயத்தினால் அந்த வழியை விட்டு வேறு வழிக்கு ஓடாதிருப்பதில்லை'' என்று கூறினர்.

மற்றொரு நாள் இப்படி நிகழ்ந்த சம்பவம் ஒன்றை ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: ''அடிமைப் பெண் ஒருத்தி என் வீட்டில் பாடிக் கொண்டிருந்தாள். அப்பொழுது உமர் அங்கு வந்து உள்ளே வர அனுமதி கோரினார். உமரின் காலடி ஓசை கேட்டது தான் தாமதம், பாடிக்கொண்டிருந்த அவள் ஓட்டமெடுத்தாள். உமர் உள்ளே வந்தார். அல்லாஹ்வின் தூதர் அவர்கள் சிரித்தனர். 'அதுகண்டு, ''அல்லாஹ்வின் தூதர் அவர்களே! தங்களைச் சிரிக்கச் செய்தது எது?'' என்று உமர் கேட்டார். ''ஓர் அடிமைப் பெண் இங்குப் பாடிக் கொண்டிருந்தாள். ஆனால், அவள் உம் காலடி ஓசை கேட்டதும் ஓடிவிட்டாள்'' என்று அல்லாஹ்வின் தூதர் அவர்கள் பதில் கூறினர். இதைக் கேட்டதும் உமர் ''அல்லாஹ்வின் தூதர் அவர்கள் கேட்டதை (பாடலை) நான் கேட்காத வரை நான் அகல மாட்டேன்'' என்றார். அந்தப் பெண்ணை அல்லாஹ்வின் தூதர் அவர்கள் திரும்ப அழைத்தனர். அவள் பாட ஆரம்பித்தாள். அல்லாஹ்வின் தூதர் அவர்கள் அதைக் கேட்டுக் கொண்டிருந்தனர்.

தம்மைக் கண்டு எவரும் அஞ்சி ஓட வேண்டுமென்று உமர் (ரலி) அவர்கள் விரும்பியதில்லை. ஆனால் ஷைத்தான் தம்மைக் கண்டதும் ஓடவேண்டுமென்று அவர்கள் விரும்பினார்கள். இரவில் இறைவனை வணங்கும்போது, அபூபக்ர் (ரலி) அவர்கள், திருகுர்ஆனை மெதுவாகவும், உமர் (ரலி) அவர்கள் உரத்தும் ஓதுவது வழக்கம். அண்ணல் நபி (ஸல்) அவர்கள் ஒருநாள் இது பற்றி அபூபக்ர் (ரலி) அவர்களிடம் கேட்டபோது, ''நான் எவனுடன் உரையாடுகிறேனோ, அவன் கேட்பான்'' என்றார்கள். இது பற்றி உமர் (ரலி) அவர்களிடம் கேட்கப்பட்டபோது, ''நான் உறங்குபவர்களை எழுப்புகிறேன், ஷைத்தானை விரட்டுகிறேன்'' என்றார்கள் அவர்கள்.

உமர் (ரலி) அவர்கள் கலீபாவானதும், மக்கள் மனத்தில் கொஞ்சம் கிலி ஏற்படத்தான் செய்தது. அதனால் சில நாட்கள்வரை,

சிலர் வீட்டை விட்டுக்கூட வெளி வரவில்லை என்று கூறப்படுகிறது. இதை அறிந்ததும் உமர் (ரலி) அவர்கள் பள்ளியில் சொற்பொழிவு செய்யும்போது சொன்னார்கள்: ''மக்களே! அல்லாஹ்வின் தூதர் அவர்களும், அபூபக்ரும் உங்களிடம் மென்மையாக நடக்கும்வரை நான் கடுமையானவனாகக் காணப்பட்டேன். என்னுடைய கடினமும், அவர்களுடைய மென்மையும் நடுநிலையை உருவாக்கிக் கொண்டிருந்தன. இப்பொழுது நான் உங்களுக்குத் தலைவனாக ஆக்கப்பட்டிருக்கிறேன். உங்களிடம் நான் கடுமையாக நடக்க மாட்டேன். என் கடுமை அநியாயக்காரர்களையே சாரும்.''

அவர்களின் கடுமைக் குணம் கடைத்தெருவுக்குச் செல்லும் போது சற்று அதிகரிக்கும். அதற்குக் காரணம், வாணிபத்தில் தவறு செய்வர்களை அந்த இடத்தில் வைத்தே கண்டிக்கவோ, தண்டிக்கவோ செய்வது அவர்களின் வழக்கம். வணிகர் சிலரை ஒரு நாள் அவர்கள் தம் சவுக்கால் அடித்தார்கள். அதற்குக் காரணம், அந்த வணிகர்கள் வட்டிப் பணத்தைத் தம் பையில் அடைத்தவர்கள். ''வாணிபம் பற்றிய சட்டத்திட்டங்களை உணராதவர்கள் நம் கடைத்தெருவில் வாணிபம் செய்யக் கூடாது. ஏனெனில் சட்டத்தை உணராதவர்கள் விரும்பியோ, விரும்பாமலோ வட்டிப் பணத்தைத் தின்றுவிடுகிறார்கள்'' என்று அவர்கள் தாம் அடித்ததற்கு விளக்கம் கூறினார்கள்.

மார்க்கச் சட்டங்களை அறியாதவர்களான இந்த அந்நிய நாட்டு மனிதர்கள், கொடுக்கல் வாங்கலுடைய சட்டங்களைத் தெரியாதவரை வாணிபத்திற்காக வரவேண்டாம்!'' என்று அவர்கள் உரைத்தார்கள்.

''எவர் விற்பது, வாங்குவது ஆகியவற்றின் சட்டங்களைத் தெரிந்திருக்கவில்லையோ, அவரை நம்முடைய கடைத் தெருவிலிருந்து அப்புறப்படுத்தும்!'' என்று கூறி அவர்கள் ஒருவரை கடைத் தெருவுக்கு அனுப்பி வைத்தார்கள்.

''வட்டி பற்றி அறியாத மனிதர் நம்முடைய கடைத் தெருவில் வாணிபம் செய்வதற்காக உட்காரக் கூடாது'' என்று அவர்கள் உரைத்தார்கள்.

சட்டம் தெரியாமல் வாணிபம் செய்பவரை, அவர்களின் சவுக்கு சில சமயம் பதம் பார்க்கும்.

அவர்கள் கலீபாவாக ஆன பிறகும் கூடத் தம் வீட்டிற்கு வேண்டிய சாமான்கள் வாங்குவதற்காக கடைத் தெருவுக்குச் செல்வ



துண்டு. அப்பொழுது அவர்களின் இடக்கையில் வாங்கப் பட்ட சாமான்கள் இருக்கும். வலக்கையில் குற்றவாளிகளுக்கு அப்போதைக் கப்போதே தண்டனை கொடுக்கத் தயாராக சவுக்கு இருக்கும்.

உமர் (ரலி) அவர்களும் ஒரு வணிகர் தாம். இஸ்லாத்தை ஏற்கு முன்பும், ஏற்ற பின்பும் அவர்கள் வாணிபம் புரிந்ததாக வரலாறு இருக்கிறது. இஸ்லாத்தை ஏற்பதற்குமுன் அவர்கள் வாணிபப் பயணங்களில் உரோமர்களிலிடமிருந்து சுங்கம் செலுத்தாது தப்புவதற்காகத் தங்க நாணயங்களைத் தம் குதிரைகளுக்கு உணவுடன் சேர்த்துக் கொடுப்பர் என்றும் ஒரு கதை உண்டு. இஸ்லாத்தை ஏற்ற பின் அவர்கள் மக்காவில் வைத்தும், மதீனா வந்த பின்பும் வாணிபம் புரிந்திருக்கின்றனர். அவர்கள் வாணிபம் செய்யக் கடைத் தெருவுக்குச் செல்லும்போது இவ்வாறு இறைஞ்சுவது வழக்கம்: ''இறைவனே! நேர்வழியை மறுப்பது, நயவஞ்சகம் புரிவது போன்ற கொடிய குணங்களை என்னிடத்தில் ஏற்படுத்திவிடாதே! உன்னிடம் உதவி கேட்கிறேன். கடைத் தெருவில் மலிந்து கிடக்கும் தீங்குகளிலிருந்தும் என்னைக் காப்பாற்று! பொய் ஆணை புகல்வது போன்ற தீய செயல்களிலிருந்தும் என்னைக் காத்தருள்!''

அவர்கள் வாணிபம் புரியும்போது, நாள் முழுவதையும் கடைத் தெருவிலேயே கழிப்பதில்லை. அவ்விதமே மற்றவர்களும் இருக்க வேண்டும் என அவர்கள் விரும்பினார்கள். எனவே தான் அவர்கள், ''வணிகர்களே! காலை நேரத்தை மறுமைக்காகச் செலவிடுங்கள்! அதற்குப் பிறகுள்ள நேரத்தை இம்மைக்காகப் பயன்படுத்துங்கள்!'' என அறிவுரை பகர்ந்தார்கள்.

அவர்களின் கண்காணிப்பு, கடைத் தெருவில் அதிகம் இருந்தாலும், மற்ற இடங்களை அவர்கள் மறந்து விடவில்லை. ஒரு நாள் ஒருவர் தெருவில் பெண் ஒருத்தியுடன் பேசிக் கொண்டிருந்தார். இதனை அவர்களின் கண் கண்டுவிட்டது. உடனே அவர்களின் வலக் கையிலிருந்த சவுக்கிற்கு வேலை வந்து விட்டது. அடிபட்ட அந்த மனிதர் துடித்துப் போய், ''உமரே! இவள் என் மனைவி'' என்றார். ''நீர் ஏன் ஒருவரும் இல்லாத இடத்தில் இருந்து பேசக் கூடாது?'' என்று அவரிடம் அவர்கள் கேட்டார்கள், ''பகிரங்கமாகத் தவறு செய்பவர்களுக்கு மரியாதை கொடுக்கக் கூடாது'' என்று அவர்கள் சொல்வது வழக்கம்.

அத்தகையவர்களைக் கொன்றால் கூடக் குற்றமில்லை என்பது அவர்கள் கொள்கை. ஒரு பிரயாணக் கூட்டத்தார் தாம் கொண்டு

சென்ற தண்ணீர் தீர்ந்துவிட்டதால், அருந்தத் தண்ணீர் இன்றி அவதிப் பட்டு பாதி இறந்த நிலையில் ஒரு சிற்றூர் வந்து சேர்ந்தனர். அவர்கள் தம் அவல நிலையை அவ்வூர் மக்களிடம் கூறி நீர் நிலையைக் காட்டும்படியும், நீர் அள்ளப் பாத்திரம் தந்து உதவும் படியும் வேண்டினர். ஆனால் அவ்வூர் மக்கள் அருந்த நீர் தர மறுத்ததுடன், நீர்நிலையைக் காட்டவும், நீர் அள்ள பாத்திரம் தரவும் தயங்கினர். இது அந்தப் பயணிகளின் மனத்தை அதிகம் வருத்தியது. அவர்கள் மதீனா வந்ததும் கலீபாவைக்கண்டு அவ்வூர் மக்களின் ஈரமற்ற நெஞ்சம் பற்றி எடுத்துக் கூறினார்கள். அதைக் கேட்டதும் கலீபா விடுத்த வினா இது: ''ஏன் நீங்கள் அவர்கள் மீது உங்களின் வாளை வீசவில்லை?''

மது அருந்தும் குற்றத்திற்குத் தண்டனை 80 அடிகள் என உயர்த்தியவர்கள் உமர் (ரலி) அவர்கள் தாம். ஒரு நாள் அவர்கள் கடைத் தெருவுக்குச் சென்று கொண்டிருந்தார். அப்பொழுது ஓர் இளைஞர் மது புட்டியைத் தம் சட்டையில் மறைத்து வைத்துக் கொண்டு சென்று கொண்டிருந்தார். கலீபா அவர்களின் கூர்மை மிக்க கண்கள் அதைக் கண்டு கொண்டன. ''எதையோ மறைத்து எடுத்துச் செல்கிறீரே, அது என்ன?'' என்று அவர்கள் கேட்டார்கள். அவ்வளவு தான். அவ்விளை ஞருக்கு ஆட்டம் கண்டுவிட்டது. குலைக்குள் ஒரு குலுக்கல். உணர்ந்து கொண்டார் அவர் உமரிடமிருந்து தப்ப அல்லாஹ்வின் உதவி ஒன்றினால் தான் முடியும் என்று. உள்ளம் உருகி அவர் அல்லாஹ் விடம் இறைஞ்சினார்: ''என்னிடம் இருக்கும் மதுவை உமர் பார்த்து விட்டால் நான் தண்டனையிலிருந்து தப்பமுடியாதே. இனி ஒரு போதும் நான் மது அருந்த மாட்டேன். அல்லாஹ்! என்னைத் தண்டனையிலிருந்து காப்பாற்று!''

இவ்விதம் மனதிற்குள் இறைஞ்சிவிட்டு, கலீபா அவர்களைப் பார்த்து, ''அமீருல் முஃமினீன் அவர்களே! நான் பதப்படுத்தப்பட்ட பானத்தைத் தான் எடுத்துச் செல்கிறேன்'' என்று கூறினார். கலீபா அவர்களா இத்துடன் விட்டு விடுபவர்கள்? அவர்களின் விரல் அவர் விழிகளுக்குள் நுழைந்து விளையாடாதா? அதனைத் திறந்து காட்டும்படி அவர்கள் கூறினார்கள். பாதி உயிர் போன நிலையில் அவ்விதமே அவர் செய்து காட்டினார். அது அவர் கூறிய படியே பதப்படுத்தப்பட்ட பானமாகவே இருந்தது.

சங்கீதம் கேட்பதும் கலீபா அவர்களுக்குச் சற்றும் பிடிக்காது. தோழர்களில் சங்கீதம் கேட்பவர்களை அவர்களின் சவுக்குப் பதம் பார்க்கத் தவறாது.



## இத இயல்பு

இவ்விதம் கலீபாவிடம் கடுமைக் குணம் இருந்தாலும், இத இயல்புகளும் அவர்களிடம் இல்லாமல் இல்லை. இத இயல்புகள் மட்டுமல்ல, அவர்களிடம் நகைச்சுவை உணர்ச்சியும் இருந்தது. ஒருநாள் அவர்களிடம் அபூசுப்யான், ''ஒட்டகை மிகவும் உயரமான பிராணியாக இருக்கிறது. அதனால் அது இயல்பிலும் மிகவும் நேர்மையானதாய் இருக்கிறது'' என்று கூறினார். அதைக்கேட்டு அவர்கள், ''என்ன, நீர் நினைத்துக் கொண்டீரா? எந்தப் பொருள் உயரமானதாய் இருக்கிறதோ, அதுவெல்லாம் நேர்மையானதாய் இருக்கும் என்று? நானும் தான் உயரமானவனாய் இருக்கிறேன். அதனால் நானும் நேர்மையானவனாய் இருக்கிறேன் என்பது உம் எண்ணமா?'' என்று சிரித்துக்கொண்டே கேட்டார்கள்.

ஒருநாள் அவர்கள் குடிகாரன் ஒருவனைக் காண நேர்ந்தது. அவன் குடித்திருக்கிறான் என்பது நிச்சயமாகத் தெரிந்துவிட்டது அவர்களுக்கு. அவனைப் பிடித்துத் தண்டிக்க அவர்கள் தயாரானார்கள். அவனோ குடித்ததுமல்லாமல் கலீபாவைத் திட்டவும் ஆரம்பித்தான். மது உள்ளே நுழைந்ததும் அது செய்யும் முதல் வேலை அறிவை வெளியேற்றுவதுதானே. அவனைத் தண்டிக்கத் தயாரான கலீபா அவர்கள் அவன் தம்மைத் திட்டத் தொடங்கியதும் அவனை விட்டுவிட்டார்கள். இது அங்கிருந்த ஒருவருக்கு ஆச்சரியத்தை அளித்தது; உயர் பதவியில் இருக்கும் ஒருவர் தம்மைத் திட்டும் ஒருவனைத் தண்டியாது விட்டதை. இது வரை பாராதவர் அவர். எனவே அவர், ''அமீருல் முஃமினீன் அவர்களே! அவனை ஏன் விட்டு விட்டீர்கள்? அவன் தங்களைக் கண்டபடியெல்லாம் திட்டினானே?'' என்று கேட்டார். ''ஆம். அதனால் தான் நான் அவனை விட்டு விட்டேன். அவன் என்னை நிந்தித்தது, எனக்குக் கோபத்தை உண்டுபண்ணியது. அதன் பின் நான் அவனைத் தண்டித்தால், அது என் சினத்தின் பிரதிபலிப்பாகத்தான் இருக்கும். இறைவனுக்காக இராது. சுய நலத்திற்காக, எனக்கு ஏற்பட்ட வஞ்சகத்தைத் தீர்ப்பதற்காக எந்த முஸ்லிமையும் நான் தண்டிக்க விரும்பவில்லை'' என்று அவர்கள் அவருக்குப் பதில் கூறினார்கள்.

இவனாவது கலீபாவை நிந்திப்பதுடன் நின்றான். இன்னொ ருவன் அவர்களைக் கொல்லவே வந்துவிட்டான். உரோமப் பேரரசின் ஆசியத் தலைநகர் அந்தாக்கியாவைப் பிடிக்க முஸ்லிம்கள் முன்

னேறிக் கொண்டிருந்த சமயம் அது. உரோமப் பேரரசர் ஹிராக்லியஸ் கலீபாவைப் போரில் வெல்ல முடியாததால், அவர்களைக் கொல்லக் கஸ்ஸானிய அரபியான வாசிக் என்பவனை அனுப்பி வைத்தார். தம் கஷ்டங்கள் அனைத்திற்கும் காரணமான கலீபாவை, முஸ்லிம்களின் உணர்ச்சிக்கும், ஊக்கத்திற்கும் ஊற்றுக் கண்ணான உமர் அவர்களைக் கொன்று விட்டால் தொலைந்து விடும் தம் தொல்லைகள் எனக் கருதித்தான் பேரரசர் என்னும் பெயர் பெற்ற அந்தச் சிறிய மனிதர் இதைச் செய்தார்.

தன் இழி செயல் மூலம் தான் பெறப்போகும் பழிபற்றிக் கவலைப்படாமல், தான் பெறப்போகும் பொற்கிழி நினைந்து மகிழ்ந்தவனாய் வாசிக் மதீனா வந்தான், கலீபாவைக் கொல்ல ஏற்ற தருணத்தை எதிர் பார்த்துக் காத்திருந்தான். ஒருநாள், காவல் கடமை ஏற்றிருந்த கலீபா அவர்கள் காவலர் எவருமின்றி ஒரு மரத்தடியில் கையை மடித்துத் தலைக்கு வைத்துக் கொண்டு படுத்திருந்தார்கள். அந்நிலையில் அவர்களைக் கொல்வது எளிது என எண்ணி வாசிக் அவர்கள் அருகில் வந்தான். தம் ஆவிக்கு ஆபத்து வரும் என்னும் அச்சம் அணுவளவும் இன்றி அமைதியாக உறங்கிக் கொண்டிருந்த அந்த உத்தமரைத் தன் பாதகக் கண்கொண்டு பார்த்தான். அடுத்த கணம் அவன் மனத்தில் ஒரு பலத்த அடி. அதனால் ஒரு நடுக்கம் அவன் உடலில் எழுந்தது, அது கைகளில் படர்ந்தது. அந்த நடுக்கத்தில் அவன் கை வாள் தரையில் விழுந்தது. இப்பொழுது விழித்துக் கொண்டு விட்ட கலீபாவின் இணைக் கண்கள் கணைகளாய் உருமாறின. இனிமேல் அவர்களைக் கொல்லத் தன்னால் மட்டுமல்ல, தன் பாட்டனாலும் முடியாது என்பதை உணர்ந்த வாசிக் வெட்டப் பட்ட நெடுமரம் போல் கலீபா அவர்களின் கால்களில் விழ்ந்தான். தான் ஆற்றத் துணிந்த ஈனச் செயல் பற்றி மொழிந்தான், தன் ஆற்றாமையைக் கூறி கலீபா அவர்களின் மன்னிப்பை இரந்தான். அக்கணமே அவனைக் கலீபா மன்னித்தார்கள். அவர்களின் மன்னிப்பு அவன் மனத்தை மாற்றியது. அவன் இஸ்லாத்தை ஏற்றான்.

பத்ருப் போருக்குப் பின் உமைர் என்பவன், அல்லாஹ்வின் தூதர் அவர்களைக் கொல்ல வேண்டும் என்னும் தீய எண்ணத்துடன் தன் வாளைத் தீட்டிக் கொண்டு, அதில் உயிர் கொல்லும் விஷத்தைத் தடவிக் கொண்டு மதீனா வந்தான். அவனை உமர் (ரலி) அவர்களின் கழுகுக் கண் கண்டு கொண்டது. அவன் பார்வையும் நடவடிக்கையும் சந்தேகத்தை ஏற்படுத்த அவர்கள் அண்ணல் நபி (ஸல்) அவர்களிடம் சென்று ''உமைர் இப்னு வஹ்ப் வாளுடன் வந்திருக்கிறான். இவன் தான் சில தவறான கணக்குகள் போட்டு நம் அணியின் எண்ணிக் கையைப் பத்ருப் போரில் நம் பகைவர்களுக்குப் பகர்ந்து பாதகம் பண்ணியவன்'' என்று கூறினார்கள்.



அவர்கள் கூறியதை அதிகம் பொருட்படுத்தாமல், ''அவன் வரட்டும்!'' என அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறினர். உடனே உமர் (ரலி) அவர்கள் அவன் பக்கம் பாய்ந்து சென்று, அவன் பிடரியைப் பிடித்து அண்ணல் நபி (ஸல்) அவர்களின் சமூகம் கொணர்ந்தார்கள். உமர் (ரலி) அவர்கள் அவ்விதம் அவனிடம் நடந்து கொண்டதை விரும்பாமல் அவன்மீது பரிவு கொண்டு அவனை விடும்படி அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறினர். அவனைப் பார்த்து அவர்கள் ''உம்மை இங்குக் கொண்டு வந்தது எது?'' என்று கேட்டனர். சிறைப்பட்டிருக்கும் தம் மகனை மீட்டிச் செல்ல வந்திருப்பதாய் அவன் பொய் கூறினான். அண்ணல் நபி (ஸல்) அவர்கள் மற்றொரு முறை கேட்டும் அவன் உண்மையை உரைக்கவில்லை. அதன்பின் அவர்கள் அவனுக்கும், அவன் நண்பன் சஃப்வானுக்கும் மக்காவில் வைத்து நடந்த உரையாடலை அருகிலிருந்து கேட்டவர்கள் போல் அப்படியே அறிவித்தனர். அதைக் கேட்டு அதிர்ந்து இடி விழுந்தவன் போல் இருந்த அவன் அடுத்த கணம், ''அல்லாஹ்வைத் தவிர்த்து வேறு ஆண்டவன் இல்லை. முகம்மது அவனுடைய தூதர்'' என மொழிந்து முஸ்லிமானான்.

அதைக் கேட்டது தான் தாமதம் உமர் (ரலி) அவர்கள் ஆனந்தப் பரவசமுற்று அறிவித்தார்கள்: ''உமைரை நான் முதலில் பார்க்கும் போது அவனைவிட ஒரு பன்றியை நான் அதிகம் நேசித்தேன். ஆனால் இப்பொழுது எவரும், என் கண்மணிக் குழந்தைகளும் கூட உமைரை விட என் அன்புக்கு உரியவர்களாய் இருக்கவில்லை.''

தவறு செய்ய வந்தவரைத் தண்டியாது மன்னித்து விட்ட சம்பவம் இது மட்டுமல்ல, இன்னும் எத்தனையோ அவர்களின் வாழ்வில் உண்டு. ஒரு சமயம் தவறு செய்துவிட்ட ஒருவன் மீது அவர்களுக்குக் கடுமையான கோபம் ஏற்பட்டுவிட்டது. அவனைத் தண்டிக்குமாறும் அதிகாரிகளுக்கு ஆணையும் இட்டுவிட்டார்கள். அப்பொழுது அவன் அவர்களைப் பார்த்து, ''அமீருல் முஃமீனின் அவர்களே! என்னை மன்னித்தருளுங்கள்!'' எனக் கூறிக் கெஞ்சினான். அதைக் கேட்டு அவர்களின் இதயம் இளகி விட்டது. அவன் புரிந்த

தவறு மன்னிக்கத் தகுந்தது தானா என அவர்கள் ஒரு கணம் யோசித்தார்கள். மறுகணம், ''அவனை விட்டுவிடுங்கள்!'' என ஆணையிட்டார்கள்.

இன்னொரு சமயமும் இப்படித்தான் நிகழ்ந்தது. ஒருவன் தவறு செய்து விட்டான். அவனுக்கு சவுக்கடி கொடுக்க வேண்டியதே முறை என்னும் முடிவிற்கு அவர்கள் வந்தார்கள். முதல் அடி விழுந்ததுமே அவன், ''சுப்ஹானல்லாஹ்'' எனக் கத்தினான். அதற்கு மேல் அடிக்க அவர்களுக்கு மனம் வரவில்லை. அக்கணமே அவனை அவர்கள் மன்னித்தார்கள்.

தவறு செய்தவரை மன்னிப்பதற்குக் குறுக்கே நிற்பது கோபம். அதைக் கலீபா அடக்காது விடுவதில்லை. ''அல்லாஹ்வுக்கு அஞ்சியவன் கோபத்தால் நிதானம் இழக்கமாட்டான்'' என்பது அவர்களின் சொல்லாகும். ஒரு சமயம் அவர்களுக்குக் கடும் கோபம் வந்து விட்டது. அதனால் தம் நிதானம் அகன்று விடுமோ என அஞ்சி, உடனே அதற்கு நிவாரணமாய்த் தம் நாசிக்குள் கொஞ்சம் தண்ணீரைச் செலுத்தினார்கள். ''கோபம் ஷைத்தானின் குணம். இப்படிச் செய்தால் அது தணிந்துவிடும்'' என்று இயம்பினார்கள். இப்படிக் கோபத்தை அடக்க அவர்கள் முயன்றதற்குக் காரணம், அவர்கள் பொறுமையின் சிறப்பை அறிந்திருந்ததாகும். ''உடலுக்கு எப்படித் தலையோ, அப்படி இறை நம்பிக்கைக்குப் பொறுமை. எவனுக்குத் தலை இல்லையோ, அவனுக்கு உடலும் இல்லை. எவனுக்குப் பொறுமை இல்லையோ, அவனுக்கு இறை நம்பிக்கையும் இல்லை'' என்று அவர்கள் கூறினார்கள்.

பொறுமையைப் பற்றி இப்படி பெருமையாகப் பேச மட்டும் செய்யவில்லை, அதைப் பின்பற்றவும் செய்தார்கள் என்பதற்கு இந்தச் சம்பவம் ஆதாரம்: அண்ணலாரின் தோழர் ஒருவருக்கும் அவர் மனைவிக்கும் ஒரு நாள் பெரும் சண்டை வந்து விடுகிறது. அப்பொழுது அவள் அவர் உள்ளத்தைப் புண்ணாக்கும் கூர்வேல் போலும் சொற்களைக் கூறிவிடுகிறாள். அவளுக்கும் தமக்கும் உள்ள உறவிற்கு முடிவு கட்டிவிட வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டு அதைக் கலீபாவிடம் தெரிவிக்க அவர் வருகிறார். அப்பொழுது கலீபா தம் வீட்டு வாயிலில் உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள். வீட்டின் உள்ளிருந்து வசைமாரி வந்து கொண்டிருக்கிறது. அதைச் செய்ய தைரியம் அவர்களின் மனைவி தவிர்த்து வேறு எவருக்கு இருக்கும்? ஷைத்தான் கூட அவர்கள் வரும் வழியில்வர அஞ்சக் கூடிய உமர் (ரலி) அல்லவா அவர்கள்?



கலீபா அந்த வசையடிகள் கசையடிகளைப் போல் தம் மனத்தில் பட்டாலும் அவற்றைப் பொறுமையோடு கேட்டுக் கொண்டு, எதுவுமே நிகழாததுபோல் உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள். தம் மனைவியை மணவிலக்குச் செய்வது பற்றி விளக்க வந்த நபித் தோழர் இதைக் கவனிக்கிறார். 'இங்கும் அதே நிலைதானா?' எனத் தம்மை மனத்திற்குள் நினைக்கிறார், வீட்டிற்குத் திரும்ப விரும்புகிறார். தம்மை நோக்கி அவர்கள் வந்ததையும், தயங்கிக் கொண்டு நிற்பதையும் கலீபா அவர்கள் கவனித்து விடுகிறார்கள். அவரை அவர்கள் அழைக்கிறார்கள். அருகில் வந்ததும், ''விஷயம் என்ன?'' என வினவுகிறார்கள். அவர் தாம் விளக்க வந்த விஷயத்தை விரிக்கிறார். அவர் கூறியதைக் கேட்டு விட்டுக் கலீபா, ''நானும் உம்மைப் போலவே எண்ணியதுண்டு. ஆனால் நான் அப்படிச் செய்யாததற்குக் காரணம் என் மனைவி எனக்குச் செய்யும் ஓர் உதவியை நினைத்துத்தான்'' என்று கூறுகிறார்கள். 'அப்படி என்ன உதவி உங்களுக்கு உங்கள் மனைவி செய்கிறார்?' என்று அவர் நா கேட்கவில்லை, முகம் கேட்கிறது. அது அறிந்து கலீபா மொழிகிறார்கள்: ''அவள் என்னை விபச்சாரத்திலிருந்தும் காக்கிறாள்.''

கலீபா அவர்களிடம் இவ்விதப் பொறுமை மட்டும் இருக்கவில்லை, இரக்ககுணமும் இருந்தது. ஒரு நாள் அவர்கள் சில மனிதர்களுக்கு உணவளித்துக் கொண்டிருந்தனர். அப்பொழுது ஒருவர் உணவைத் தம் வலக்கையால் உண்ணாமல் இடக்கையால் உண்பதைப் பார்த்தார்கள். 'வலக்கையால் உண்பது தானே வழக்கம். ஏன் அவர் இடக்கையால் உண்கிறார்?' என்னும் எண்ணம் ஏற்பட அவரைப் பார்த்து அவர்கள், ''ஏன் நீர் (உம்) வலக்கையால் உண்ணக் கூடாது.'' என்று கேட்டார்கள். அதற்கு அவர் தம் வலக் கையை யர்முக் போரில் இழந்து விட்டதாகக் கூறியதும் கலீபா அவர்களின் உள்ளம் உருகிவிட்டது. உடனே அவர்கள் அவர் அருகில் அமர்ந்து ஆறுதல் கூறி அவருக்கு உதவ ஊழியர் ஒருவரையும் நியமித்தார்கள்.

இரக்கமிக்கவர்களாய் இருந்த கலீபா அடக்கமிக்கவர்களாயும் இருந்தனர். அதனால்தான் அவர்களால் பிறரைப் பெரிதாயும் தம்மைக் குறைவாயும் கருத முடிந்தது. அதனால் தான் அவர்கள், ''உமரையோ, அபூ உபைதாவையோ கலீபாவாகத் தேர்ந்தெடுங்கள்!'' என அபூபக்ர் (ரலி) அவர்கள் உரைத்தபோது அதனை ஏற்க அடியோடு மறுத்தார்கள். ''எந்த மக்கள் தொகையில் அபூபக்ர் சித்தீக்கும் ஒருவராய் இருக்கிறார்களோ அந்த மக்கள் மீது நான் அமீராவதை விட என் கழுத்தை

அறிந்து கொள்வதையே நான் அதிகம் விரும்புவேன்'' என அவர்கள் கூறினார்கள்.

தம்மை மக்கள் 'இறைதூதரின் கலீபா' என்றோ 'இறைதூதரின் கலீபாவின் கலீபா' என்றோ அழைப்பதை அவர்கள் விரும்ப வில்லை. அதை அறிந்து மக்கள் ''தங்களை எப்படி அழைப்பது?'' என்று கேட்டபோது ''நீங்கள் முஃமின்கள், நான் உங்களின் அமீர்; எனவே என்னை 'அமீருல் முஃமினீன்' என அழையுங்கள்!'' என்று அவர்கள் அறிவித்தார்கள். அது முதல் அவர்களை மக்கள் அப்பெயர் கொண்டு அழைக்கத் தொடங்கினர். அவ்விதம் அவர்களை முதலில் அழைத்த மனிதர் அத்தீ பின் ஹாத்திரம் (ரலி) ஆவர்.

அவர்கள் கலீபாவாக இருக்கும்போது நடந்த நிகழ்ச்சி இது: பஸ்ராவின் ஆளுநராய் இருந்த அபூமூஸா அஷ்அரீ (ரலி) அவர்கள் ஜூம்ஆ தொழுகைக்கு முன் குத்பா ஓதும் போது அல்லாஹ்வுக்கு வணக்கம் கூறிவிட்டு, உமர் (ரலி) அவர்களுக்கு வாழ்த்துக் கூறுவது வழக்கம். அங்கிருந்த இப்னு அன்தரீ என்பவர், ''உமருக்கு வாழ்த்துத் தெரிவிக்குமுன் அபூபக்ர் அவர்களுக்கு வாழ்த்துக் கூற வேண்டும். அபூபக்ர் அவர்களை விட்டு உமருக்கு உயர்வளிக்க முயல்வது முறை யல்ல'' என்று வாதிட்டார். இதன் பிறகும் கூட அபூமூஸா அஷ்அரீ (ரலி) அவர்கள் அபூபக்ர் (ரலி) அவர்களின் பெயரைக் குறிப்பிட வில்லை. இப்னு அன்தரீயும் தம் எதிர்ப்பைத் தெரிவிக்கத் தவற வில்லை. இப்படி மூன்று ஜூம் ஆக்கள் ஆகிவிடுகின்றன. அபூமூஸா அஷ்அரீ (ரலி) அவர்கள் இதனைக் கலீபா அவர்களுக்குத் தெரியப் படுத்தினர். உடனே தம்மிடம் இப்னு அன்தரீயை அனுப்பி வைக்கும்படிக் கடிதம் எழுதினார்கள் கலீபா.

அதன்படி இப்னு அன்தரீ மதினா வந்தார். கலீபா அவர்களைக் கண்டு, ''என்னை அழைத்த காரணம் என்ன?'' என்று கேட்டார். ''உமக்கும் நம் ஆளுநருக்கும் என்ன பிணக்கு?'' எனக் கலீபா கேட்டார்கள். தமக்கும் ஆளுநருக்கும் இடையே இருக்கும் தாவாவை இப்னு அன்தரீ உரைக்கத் தொடங்கினார். அதைக் கவனத்துடன் கேட்டுக் கொண் டிருந்த கலீபா அவர்களின் கண்களிலிருந்து நீர் வழிந் தோடியது. ''நம் ஆளுநரைவிட நீர்தாம் நேர்வழியில் சென்றிருக்கிறீர். என் பிழையைப் பொறுத்தருளும்! உம் பிழை முழுவதையும் பொறுக்க இறைவன் போதுமானவன்'' எனக் கலீபா தழு, தழுத்த குரலில் கூறி னார்கள். அதுகேட்டு இப்னு அன்தரீ, ''அமீருல் முஃமினீன் அவர்



களே! உங்கள் பிழையை அல்லாஹ் பொறுத்தருள்வான்'' எனப் புகன்றார்.

இதன்பின் கலீபா தம் கண்களிலிருந்து நீர் வழிந்து கொண் டிருக்க இவ்விதம் மொழிந்தார்கள்: ''நண்பரே! அபூபக்ர் அவர்களின் அந்த ஒரு பகலும், ஓர் இரவும் உமருடையவும், உமருடைய குடும்பத்தவ ருடையவும் வாழ்க்கையை விட மகத்தானவையாகும். அந்த ஒரு பகலையும், ஓர் இரவையும் உமக்கு உரைக்கட்டுமா? மக்கா நகர்ப் பகைவரை விட்டு அல்லாஹ்வின் தூதர் அவர்கள் பயணம் செய்தார்களே அந்த இரவைத்தான் கூறுகிறேன். ஆபத்து மலிந்த அந்த நேரத்தில் அபூபக்ர் அவர்கள் தம் ஆவியைப் பொருட் படுத்தவே இல்லை. அபூபக்ர் அவர்கள் கொஞ்சநேரம் அல்லாஹ்வின் தூதர் அவர் களுக்கு முன்புறமாய்ப் போவார்கள் பிறகு பின்புறமாய் வருவார்கள்; சிறிதுநேரம் வலப்புறமாய்ச் செல்வார்கள் பிறகு இடப்புறமாய் வருவார்கள். 'இது எதற்கு?' என்று அல்லாஹ்வின் தூதர் அவர்கள் கேட்டபோது 'அல்லாஹ்வின் தூதர் அவர்களே! நாம் இவ்வழியே வருவோம் என எதிர்பார்த்துப் பகைவர் முன் பக்கமாய்ப் பதுங்கி யிருப்பரோ என எண்ணி முன்புறம் செல்கிறேன், பகைவர் பின்புறமாய் வந்து விடுவரோ எனப் பயந்து பின்புறம் போகிறேன். வலப்புறமாக வந்துவிட்டால் என் செய்வது என எண்ணி வலப்புறமாக வருகிறேன், இடப்புறம் பகைவர் வந்து விட்டால் என் செய்வது என அஞ்சி இடப் புறமாகப் போகிறேன்' என அபூபக்ர் பதிலிறுத்தார்கள். இருவரும் பொழுது புலருமுன் தவ்ர் குகைவந்து சேர்ந்தனர். அந்தக் குகையில் ஆபத்து ஏதாவது இருக்கலாம் என எண்ணி, முதலில் அபூபக்ர் அவர்கள் உள்ளே நுழைந்தனர். அல்லாஹ்வின் தூதர் அவர்கள் அதிகம் களைத்திருந்ததால் அபூபக்ர் அவர்களின் மடியில் படுத்து உறங்கினார்கள். அப்பொழுது அபூபக்ர் அவர்களின் காலில் அரவம் ஒன்று தீண்டிவிட்டது. அதனால் ஏற்பட்ட வேதனையைத் தாங்க இயலாமல் அபூபக்ர் விட்ட கண்ணீர், அல்லாஹ்வின் தூதர் முகத்தில் விழ அவர்கள் கண் விழித்தார்கள். இதுவே அந்த இரவு.

''அல்லாஹ்வின் தூதர் அவர்கள் இறந்து விட்டதை அறிந்ததும், இஸ்லாத்தை ஏற்றிருந்த சிலர் ஜகாத் கொடுக்க மறுத்தனர். அவர்களை அடக்க வேண்டும் என அபூபக்ர் அவர்கள் கட்டளை இட்டார்கள். 'அவர்களைத் தண்டிக்க வேண்டாம்! நயந்து அவர்களை நம் பக்கம் கொண்டுவர வேண்டும்' என நான் எண்ணி அபூபக்ர் அவர்களிடம் சென்று என் கருத்தைக் கூறினேன். அபூபக்ர் (ரலி) அவர்கள்

அவ்வளவு ஆத்திரப்பட நான் பார்த்ததில்லை. பிறகு நான் என் தவற்றை உணர்ந்து கண்ணீர் உகுத்தேன். அதன்பின் அவர் களின் தோளோடு தோள் இணைந்து நின்று, இவ்விஷயத்தில் பாடு பட்டேன். அவர்கள் செய்த முடிவு எவ்வளவு பொருத்தமானது, அறிவானது, என்பது எனக்குப் பிறகு தான் புலனாகியது. அதுவே அந்தப் பகலாகும்.

''ஹிஜ்ரத்தின்போது அபூபக்ர் (ரலி) அவர்கள் அல்லாஹ்வின் தூதர் அவர்களுடன் இருந்த நன்மையையும் ஜகாத் விஷயத்தில் அபூபக்ர் அவர்களிடம் இருந்த உறுதியையும் பண்டமாற்றுப் பண்ண இயன்றிருக்குமாயின் நான் என் வாணாளில் செய்த நன்மைகளைக் கொடுத்து அந்த இரு நன்மைகளையும் வாங்கி விடுவேன்.'' இவ் விதம் கலீபா இப்னு அன்தரீயிடம் இயம்பிவிட்டு, அபூமூஸா அஷ்அரீ (ரலி) அவர்களுக்குக் கடிதம் எழுதினர். ''இப்னு அன்தரீ தவறு செய்வதாக எனக்கு எழுதினீர். தவறு செய்தவர் நீர் தாம் அவர் அல்ல; எச்சரிக் கிறேன்'' என்று.

ஒருமுறை அவர்கள் வஹ்ப் பின் காபூஸின் பெருவீரத்தை மனத்திற்கொண்டு ''காபூஸுடைய வீரச் செயல்கள் மீது எனக்கு ஏற்பட்ட பொறாமை போன்று, வேறு எவருடைய வீரச் செயல் மீதும் எனக்குப் பொறாமை ஏற்படவில்லை. அவருடைய செயல் ஏடு போன்ற ஒன்றுடன் நான் இறைவனிடம் சேர வேண்டுமென விரும்பு கிறேன்'' என்று கூறினார்கள். இன்னொரு முறை அவர்கள் அம்ர் மஃதீ கரபை முதன் முறையாகக் கண்டு, அவரின் ஆஜானு பாகுவான உருவம் பற்றி ஆச்சரியம் கொண்டு, ''இவரைப் படைத்தவனும், என்னைப் படைத்தவனும் ஒரே இறைவன் தானா?'' என உரைத் தார்கள். அவரையும் துலைகாவையும் காதிசியாப் போருக்கு அனுப் பியபோது, ''நான் ஈராயிரம் புரவி வீரர்களை அனுப்பியிருக்கிறேன்'' என்று கடிதம் எழுதினார்கள்.

ஒரு சமயம் அவர்கள், ''அந்த மிகவும் குறைவானவர்களில் என்னையும் ஆக்குவாயாக!'' என்று ஒருவர் பிரார்த்தித்துக் கொண்டிருப்பதைப் பார்த்தார்கள். ''இது என்ன பிரார்த்தனை?'' என்று அவர்கள் அவரைப் பார்த்துக் கேட்டார்கள். ''மிகவும் குறைவான வர்கள் என் அடியார்களில் நன்றி செலுத்துபவர்'' என இறைவன் கூறியிருப்பதை நான் அறிந்திருக்கிறேன். எனவே நன்றி செலுத்துபவர் களாகிய அந்த மிகவும் குறைவானவர்களில் என்னையும் சேர்க்க



வேண்டும் என நான் பிரார்த்திக்கிறேன்'' என்று அவர் பதில் பகர்ந்தார். அதுகேட்டு அவர்கள் அவரின் அறிவுத் திறனை வியந்து, ''மனிதர் ஒவ்வொருவரும் உமரைவிட அதிகம் அறிந்தவராகவே இருக்கின் றனர்'' என்று கூறினார்கள்.

இன்னொரு சமயம் அவர்கள் உரை நிகழ்த்தும் போது, ''திருமணங்களில் அதிக மஹர் தொகை கொடுக்கக்கூடாது. அல்லாஹ் வின் தூதர் தம் மனைவியருக்கும் பெண் மக்களுக்கும் கொடுத்த தொகைக்குமேல் அதிகமாக அது இருந்தால், அதைப் பிடுங்கி நான் பொது நிதியில் சேர்த்து விடுவேன்' என்று குறிப்பிட் டார்கள், அதைக் கேட்டு ஒரு கிழவி எழுந்து நின்று, ''உமக்கு அப்படிச் செய்யும் உரிமை எங்கிருந்து வந்தது? நீர் குர்ஆனுக்கு மாற்றமாகச் செய்ய முடியாது. 'கணவர்களே! ஆண்களாகிய நீங்கள் ஒரு பெரும் பொருள் குவியலை மஹராகக் கொடுத்திருந்தாலும், அதில் இம்மி அளவு கூட எடுத்துக் கொள்ளாதீர்கள்!' என்னும் குர்ஆனின் கூற்றிலிருந்து மஹருக்கு ஓர் அளவு இல்லை என்று தெரியவில்லையா?'' என வினவினாள். உடனே அவர்கள், அவள் உரைப்பது உண்மை என உணர்ந்தார்கள். ''எல்லோரும் உமரை விட அதிகமாக அறிந்தவர்களாகவே இருக் கின்றனர், இந்தக் கிழவி உட்பட'' என்று கூறினார்கள். 'இத்தகைய உத்தமிகள் இருக்கும்வரை மார்க்கத்திற்கு முரணாக உமர் தீர்ப்புக் கூற முடியாது'' எனவும் உரைத்தார்கள்.

மற்றொரு சமயம் அவர்கள் மக்களுக்குப் போதனை செய்யும் போது, ''எவரேனும் திருகுர்ஆன் பற்றி விளக்கம் கேட்க விரும்பினால், அவர் உபை பின் கஃபிடம் செல்லட்டும்! எவரேனும் விதிக்கப்பட்டவை விலக்கப்பட்டவை பற்றி விசாரிக்க விரும்பினால் அவர் முஆத் பின் ஜபலிடம் செல்லட்டும்! எவரேனும் வாரிசுரிமை பற்றி அறிய விரும்பினால் அவர் ஜைத் பின் தாபித்திடம் சொல் லட்டும்! எவருக்குப் பணம் தேவைப்படுகிறதோ அவர் என்னிடம் வரட்டும்!'' என்று குறிப்பிட்டார்கள்.

இன்னொரு சமயம் அவர்கள் அப்துல்லாஹ் பின் மஸ்வூத் (ரலி) அவர்களைக் கூபாவுக்குக் காஜியாக அனுப்பி வைத்த போது அவ்வூர் மக்களுக்கு எழுதிய கடிதத்தில்,''உங்களுக்கு நான் ஓர் ஆசிரியரையும், ஓர் அமைச்சரையும், அனுப்பியிருக்கிறேன் எனக்கே நான் புறக் கணித்துக் கொண்டு, உங்களுக்கு இந்தச் சலுகையை வழங்கியிருக் கிறேன். அவரை நான் என்னிடமிருந்து அனுப்புகிறேன்'' என்று

குறிப்பிட்டார்கள். கடினமான கேள்விகளுக்கு அப்துல்லாஹ் பின் மஸ்வூத் (ரலி) அவர்கள் அறிவான பதில் அளிக்கும்போதெல்லாம், கலீபா, ''அவர் அறிவு நிறைந்த பாத்திரம்'' எனக் குறிப்பிடத் தவறமாட்டார்கள். உபை பின் கஃபு இறந்தபோது, ''முஸ்லிம்களின் தலைவர் இன்று காலமாகிவிட்டார்'' என்று கூறினார்கள்.

மற்றொரு சமயம் அவர்கள் தம் தோழர்களுடன் தெரு வழியே சென்று கொண்டிருக்கும்போது, ஒரு பெரிய வீட்டைப் பார்த்தார்கள். அப்பொழுது அவர்களுக்கு ஓர் எண்ணம் தோன்றியது. அதை மறைத்துக் கொண்டு, அவர்கள் தம் தோழர்களைப் பார்த்து, ''இந்த வீடு நிறைய என்ன பொருள் இருக்க வேண்டும் என நீங்கள் விரும்புகிறீர்கள்'' என்று கேட்டார்கள். ஒரு தோழர் ''இந்த வீடு நிறைய தானியங்கள் இருக்க வேண்டும் என விரும்புகிறேன். அவற்றைக் கொண்டு பலருக்கும் உணவளிக்கலாம், அல்லாஹ்வின் உவப்பையும் பெறலாம்'' என்றார். இன்னொரு தோழர், ''இந்த வீடு நிறையப் பொற் காசுகள் இருக்க வேண்டும் என விரும்புகிறேன். அவற்றைக் கொண்டு அல்லாஹ்வின் வழியில் நிறையச் செலவு செய்து சேவை புரியலாம்' என்று கூறினார். மற்றொரு தோழர், ''இந்த வீடு நிறைய நல்ல குதிரைகளும், ஒட்டகைகளும் இருக்க வேண்டும் என விரும்புகிறேன். அவற்றைக் கொண்டு தொலை நாடுகளுக்குச் சென்று அல்லாஹ்வின் செய்தியை எத்தி வைக்கலாம், அவற்றை ஜிஹாதிலும் பயன்படுத்தலாம்'' எனப் பகர்ந்தார்.

இவ்விதம் தம் கருத்துக்களைக் கூறிய தோழர்கள் கலீபா அவர் களைப் பார்த்து, ''தங்களின் விருப்பங்களையும் தெரிவியுங்களேன்'' என்று கேட்டனர்.

அதைக்கேட்டு அவர்கள், ''அபூ உபைதா பின் ஜர்ராஹ், முஆத் பின் ஜபல், ஹுதைபா பின் அல் யமான் போன்ற ஆற்றல் மிக்க துடிப்பான மனிதர்கள் இந்த வீடு நிறைய இருந்தால் அவர்களின் உதவியுடன் அல்லாஹ்வின் வழியில் நான் இன்னும் அதிகமதிகம் சேவை செய்ய இயலும்'' என்று பதில் கூறினார்கள்.

இவ்விதம் கலீபா அவர்கள் பிறரைப் பெரிதாயும், தம்மைச் சிறிதாயும் கருதக் காரணம், அவர்கள் அறிந்திருந்த அண்ணல் நபி (ஸல்) அவர்களின் அறிவுரையாகும். ஒரு நாள் கலீபா மிம்பர் மீது நின்று சொற்பொழிவு செய்யும் போது தெரிவித்தார்கள்: ''மக்களே! பணிவை மேற்கொள்ளுங்கள்! ஏனெனில், அல்லாஹ்வின் தூதர்



அவர்கள் பின்வருமாறு கூற நான் கேட்டிருக்கிறேன்: 'எவர் அல்லாஹ் வுக்காகக் கீழ்ப்படிதலையும், பணிவையும் மேற்கொள்கிறாரோ, அவருக்கு அல்லாஹ் உயர்வு அளிக்கிறான். அவர் தம்மைக் குறித்து சிறியவராகக் கருதுகின்றனர், மக்களின் பார்வையிலோ பெரியவராகத் தெரிகின்றார். ஆனால், எவர் பெருமையடிக்கின்றாரோ அவரை அல்லாஹ் சிறுமைப்படுத்துகிறான். தாம் பெரிய மனிதர் எனத் தம்மைக் குறித்து அவர் நினைத்துக் கொண்டிருக்க, மக்களின் பார்வையில் சிறியவராகி விடுகிறார். எந்த அளவுக்கெனில், அவர்களின் எதிரில் நாய் மற்றும் பன்றியை விட அவர் இழிவடைந்து போகிறார்.''

## கர்வத்தின்மீது வெறுப்பு

இவ்வித அடக்க உணர்வு உள்ளவர்களாய் இருந்ததால் அவர்கள் கர்வத்தை அதிகம் வெறுத்தார்கள். பிறந்தகுடி பெற்றிருக்கும் பதவி, செல்வம், அறிவு ஆகியவையே பெரும்பாலும் கர்வத்திற்குக் காரணம் என்பதை அவர்கள் நன்கு அறிந்திருந்தார்கள். அது தம்மிடமும் ஏற்பட்டு விடாமலும், பிறரிடமும் ஏற்பட்டு விடாமலும் பார்த்துக் கொண்டார்கள். அது ஒருமுறை தம்மிடம் ஏற்பட்டு விட்டபோது, அதற்காகத் தம்மைத் தண்டித்துக் கொள்ள அவர்கள் கொஞ்சமும் தயங்கவில்லை. ஒருநாள் அவர்கள் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் சமூகம் அமர்ந்திருந்தனர். அப்பொழுது அவர்கள் ஏதோ காரணத் திற்காகப் பிலால் (ரலி) அவர்களைப் பார்த்து ''நீர் ஒரு நீக்ரோவுக்குப் பிறந்தவர் தாமே. நீர் ஓர் அடிமையும் ஆவீர் அல்லவா!'' என்று கூறிவிட்டனர்.

இது அண்ணல் நபி (ஸல்) அவர்களின் உள்ளத்தை அனலைப் போல் சுட்டு விட்டது. உடனே அவர்கள் உமர் (ரலி) அவர்களைப் பார்த்து, ''உமரே! இந்த அறிவற்ற சொல்லிற்காக, நீர் அல்லாஹ்விடம் பாவமன்னிப்புக் கோரிக் கொள்ளும்! அவர் அடிமையானாலும் ஒரு முஸ்லிம் சகோதரரிடம் நீர் இப்படிக் கூறுவது முறையா?'' என்று கண்டிப்புடன் கேட்டனர். அண்ணல் நபி (ஸல்) அவர்கள் விடுத்த வினாக் கேட்டு துடிதுடித்துப் போன உமர் (ரலி) அவர்கள் அல்லாஹ்விடம் மன்னிப்புக் கேட்டு மன்றாடிக் கொண்டு மண் மீது விழுந்தார்கள். வெகு நேரம் எழுந்திருக்கவில்லை. அதைக் கண்டு சிலர் அவரை எழுந்திருக்கும்படி வேண்டினர். அதைக் கேட்டு அவர்கள், ''என்னால் இழித்துரைக்கப்பட்ட பிலால் என்னைத் தம்

காலால் தட்டினால் தான் நான் எழுவேன்'' என்று கூறினார்கள். அவர்கள் பிடிவாதம் செய்த தால், பிலால் (ரலி) அவர்கள் அவர்களைத் தம் காலால் தட்ட வேண்டி யதாயிற்று. அதன் பிறகு தான் அவர்கள் எழுந்தார்கள். ஒருநாள் அவர்கள் பள்ளியின் மிம்பர் மீது ஏறி நின்று கொண்டு, ''நண்பர்களே! நான் ஒரு சமயம் மிகவும் ஏழையாக இருந்தேன். அப்பொழுது நான் தண்ணீர் சுமந்து சென்று மக்களுக்குக் கொடுப்பேன். அதற்குக் கூலியாக மக்கள் காய்ந்த பேரீத்தம் பழங்களைத் தருவார்கள். அவற்றை உண்டு நான் உயிர் வாழ்ந்தேன்'' என்று கூறிவிட்டுக் கீழே இறங்கினார்கள். இதனை அவர்கள் இப்பொழுது கூறவேண்டிய அவசியம் என்ன என்று மக்கள் பேசிக் கொள்வது தம் காதில் விழுந்ததும், கலீபா, ''நான் சிறிது கர்வம் அடைந்தேன். அதற்குப் பரிகாரமே இந்தப் பேச்சு'' என்று கூறினார்கள்.

இன்னொருநாள் அவர்கள் தண்ணீர் நிறைந்த தோல்பை ஒன்றைத் தூக்கிக் கொண்டு சென்றார்கள். அதைப் பார்த்து மக்கள், ''அமீருல் முஃமினீன் அவர்களே! ஏன் இதனை இப்படித் தூக்கிக் கொண்டு போகிறீர்கள்?'' என்று கேட்டபோது அவர்கள், ''என் மனம் கொஞ்சம் கர்வம் அடைந்தபோது, அதை அடக்குவதற்காகத்தான்'' என அறிவித்தார்கள்.

ஒருநாள் அவர்களின் புதல்வர் நெய்விட்டுத் தலைநீவி நல்ல ஆடை அணிந்து அலங்கரித்துக் கொண்டு அவர்கள் முன் வந்தார். அவரைப் பார்த்து மகிழுவதற்குப் பதிலாக அவர் அழும் வரை அவர்கள், அடித்தார்கள். அவர்களின் புதல்வி ஹஃப்ஸா (ரலி) அவர்கள் தம் சகோதரர் அடிபடுவதைக் காணச் சகியாது ''எந்தையே! ஏன் (அவரை) அடித்தீர்கள்?'' எனக் கேட்டபோது, ''அவன் கர்வம் கொண்டிருந்ததை நான் கண்டேன். அவன் நஃப்ஸ் (மனம்) அவன் எதிரிலேயே குறை காணட்டும் என்றே அப்படிச் செய்தேன்'' என்று அவர்கள் கூறினார்கள்.

கோத்திரப்பெருமை, குடிப்பெருமை இவையே பெரிதும் கர்வம் கொள்ளச் செய்கின்றன, பிறரைக் குறைவாகக் கருதவும் செய்கின்றன என்பதை அறிந்து கலீபா அவற்றைக் குழி தோண்டிப் புதைக்க முடிவு செய்தார்கள். சிரியா நாட்டைச் சேர்ந்த சிற்றரசர் ஒருவர், பலமிக்க கஸ்ஸானிய கோத்திரத்தில் பிறந்தவர். ஜபலா பின் ஜஹாம் என்பது அவர் பெயர். இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டபின் அவர் கலீபாவைக் காண மதீனா வந்தார். அவருடன் பணியாட்கள், பாதுகாவலர் என



ஐந்நூறுக்கும் அதிகமானவர்கள் வந்தனர். காதம் பல கடந்து வந்து மதீனா எல்லையை அடைந்ததும் அவர் தாம் வந்திருக்கும் செய்தியை கலீபா அவர்களுக்குத் தெரியப் படுத்தினார். நேராக மதீனாவிற்குள் நுழைந்து கலீபாவைக் காண வேண்டியவர் இப்படிச் செய்தி அனுப்பி யதன் நோக்கம், கலீபா அவர்களே வந்து தம்மை வரவேற்க வேண்டும் என்பதாகும். கலீபா தம் தூதுவர் சிலரை அனுப்பி அவரை அழைத்துவரச் செய்தார்கள்.

சில நாட்கள் மதீனாவில் தங்கியிருந்துவிட்டு, அவர் கலீபா அவர்களுடன் ஹஜ்ஜுச் செய்வதற்காக மக்கா புறப்பட்டார். கஃபா உலகில் உள்ள ஏற்றத்தாழ்வுகள் இம்மியும் இல்லாத இடமாகும். அங்கு உயர்ந்த நிலையில் உள்ளவர்களுக்கு முன்னும் பின்னும், இடப்புறமும், வலப்புறமும் மக்கள் இடம் விட்டே இடம் சுற்ற வேண்டும் என்றும் விதி எதுவும் கிடையாது. எனவே அதனைப் பலதரப்பட்ட மக்களும் இடம் சுற்றி வந்தனர். அவர்களுடன் சேர்ந்து அவரும் இடம் சுற்றிக் கொண்டிருந்தார், அப்பொழுது அவர் பின்புறம் சென்று கொண்டிருந்த ஒருவர் தவறுதலாக அவர் ஆடையை மிதித்து விட்டார். இது அவருக்கு அடங்காச் சினத்தை உண்டுபண்ணியது. அவர் உடனே அந்த மனிதரின் முகத்தில் அறைந்ததுடன், கலீபா அவர்களிடம் சென்று தம் குலப் பெருமையைக் கூறி, ''அவனுக்குச் சரியான தண்டனை அளித்தே ஆக வேண்டும். இவ்விதக் குற்றம் புரிந்தவருக்கு மரண தண்டனை கொடுப்பது எங்கள் மரபு'' என்று அறிவிக்கவும் செய்தார். ''அந்தக் காலம் மலையேறி விட்டது. இஸ்லாத்தில் உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்னும் வேறுபாடே கிடையாது'' என்றார்கள் கலீபா. அதைக் கேட்டு நிலைகுலைந்து போன அவர், ''இஸ்லாத்தில் உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்னும் வேறுபாடே கிடையாது என்றால் நான் இஸ்லாத்திற்கே விடை கொடுத்து விடுகிறேன்'' என்று கூறிவிட்டு கான்ஸ்டான்டி நோபிளுக்கு ஓடினார். நூறாயிரம் ஜபலாக்கள் ஓடுவதைக் காட்டிலும், இஸ்லாத்தை விட்டு சமத்துவம் ஓடி விடாதிருப்பதே உகந்தது எனக் கலீபா கருதி அவரைக் கை கழுவினார்கள்.

கஸ்ஸானியருக்குக் குறைந்தவர்கள் அல்லர் குறைஷிகள் கர்வத்தில். கஸ்ஸானியர் போல் அல்லாமல் குறைஷிகள் இஸ்லாத்தின் சமத்துவத்தை ஏற்றுக் கொண்டார்கள். ஒருநாள் குறைஷித் தலைவர்களான சுஹைல் பின் அம்ர், ஹாரிஸ் பின் ஹிஷாம், அபூசுப் யான் ஆகியோர் கலீபா அவர்களைக் காண வந்தனர். அப்பொழுது

கலீபாவைக் காண சுஹைப் (ரலி), பிலால் (ரலி) அம்மார் (ரலி) ஆகியோரும் வந்து அமர்ந்திருந்தனர். இவர்கள் மூவரும் அடிமைகளாய் இருந்தவர்கள். குடிப் பெருமை என்று கூற எதுவுமே இல்லாதவர்கள். ஆனால் இவர்களைத் தாம் கலீபா தம்மைக் காண முதலில் அழைத்தார்கள். இது செருக்குமிக்க அபூசுப்யானின் ஆத்திரத்தைப் பெருக்கி விட்டது. ஆயினும் அவர் அதை அடக்கிக் கொண்டு ''இது உருளையின் விந்தையான சுழற்சியாக இருக்கிறது. குறைஷித் தலைவர்களாகிய நாம் காத்திருக்கக் கலீபா அடிமைகளுக்கு முன்னுரிமை அளித்து விட்டனரே. இந்நாள் போல் ஒரு கெட்ட நாள் என் வாழ்வில் வந்தது கிடையாது'' என்று கூறினார். அதைக் கேட்டு விட்டு அவர்களில் ஒருவரான சுஹைல் சொன்னார்; ''உண்மையைக் கூறுவதென்றால் இதற்கு உமரைக் குறை சொல்ல நமக்கு உரிமை இல்லை. நாம் தான் நம்மைக் குறை கூறிக் கொள்ள வேண்டும். இஸ்லாமிய அழைப்பு உங்களுக்கும், பிலாலுக்கும் ஒரே சமயத்தில் தான் கொடுக்கப்பட்டது. அதை அவர் மனப்பூர்வமாக ஏற்றுக் கொண்டார். அல்லாஹ்வுக்காகவும், அல்லாஹ்வின் தூதருக்காகவும் பல துன்பங்களையும் சகித்துக் கொண்டு தொடர்ந்து முன்னேறினார். ஆனால் நீங்களோ பின் தங்கி விட்டீர்கள். கொஞ்சம் யோசித்துப் பாருங்கள்! மறுமையில் அல்லாஹ் பிலாலை முதலில் அழைத்து உங்களைப் பின்னால் தள்ளி விட்டால்...? இஸ்லாம் நம்மையெல் லாம் ஒரே சமயத்தில் தான் அழைத்தது. துரதிருஷ்ட வசத்தால் தாமதித்து வருபவர்களுக்கு இறுதியில் அழைப்பு வருவது முறை தானே.''

சுஹைலின் சொல் அறிந்து மகிழ்ந்த கலீபா அபூசுப்யானின் மனம் அறிந்து வருந்தினார்கள். ''அபூசுப்யானே! அறியாமைக் காலத்து மௌட்டீகம் இன்னும் உம் உள்ளத்தில் ஒட்டிக் கொண்டிருக்கிறது. அதை விட்டொழியும்!'' என அவர்கள் அபூசுப்யானைப் பார்த்துப் பகர்ந்தார்கள்.

அடு போர்களில் குருதியைக் கொதிக்க வைப்பதற்காக, அறியா மைக்கால அரபிகள் தம் கோத்திரப் பெருமை, குடிப் பெருமை கூறிக் கத்துவது வழக்கம். அவ்விதம் கத்துவது கூடாது எனக் கலீபா தடை விதித்தார்கள். அவர்களின் தடையை மீறி ஒருவர் போர் ஒன்றின் போது, ''தபாக் கோத்திர மக்களே!'' எனக் கத்தி விட்டார். அதை அறிந்ததும் கலீபா அவருக்கு ஓர் ஆண்டுச் சம்பளம் பிடிக்கப்பட வேண்டும் என கட்டளையிட்டார்கள்.



போரின்போது மட்டுமல்ல, ஒருவருக்கொருவர் உரையாடும் போது கூடப் பெருமைப் பேச்சு பேசக் கூடாது என்பது கலீபா அவர்களின் கருத்தாகும். சப்வான் என்பவர், ''நான் உபையத் பின் கலபின் மகன் சப்வான்'' என ஒருவரிடம் பெருமையாகக் கூறினார். அதை அறிந்ததும் கலீபா அவரை அழைத்து வரச் செய்து, ''உம் தாய் இறக்கட்டும், என்ன சொன்னீர் நீர்?'' என்று வெஞ்சினத்துடன் வினவினார்கள். அவர் அஞ்சி நடுங்கிப்போய் பதில் பகராமல் நின்று கொண்டிருந்தார். ''உமக்கு இறையச்சம் இருக்குமாயின், உமக்கு இரக்கம் இருக்க வேண்டும். உமக்கு அறிவு இருக்குமாயின், உமக்குத் தனித்தன்மை இருக்க வேண்டும். உமக்கு நற்குணம் இருக்குமாயின் உமக்குப் பெருந்தன்மை இருக்க வேண்டும். இவை இல்லாவிடில் நீர் நாயினும் கீழானவரே'' என்று கலீபாக் கடிந்துரைத்தார்கள்.

ஒரு நாள் அவர்கள் இருந்த இடத்திற்கு ஜாருத் என்பவர் வந்தார். அவரைக் கண்டதும் அங்கிருந்தவர்கள், ''இவர் ரபீஆ கிளையின் தலைவர்'' என்று கூறினர். அவர் அமர்ந்ததும் கலீபா அவர்கள் அவருக்குத் தம் சாட்டையால் ஓர் அடி கொடுத்தார்கள். அதிர்ந்து போய் அவர், ''அமீருல் முஃமினீன் அவர்களே! இது என்ன?'' என்று கேட்டார். ''எந்தக் குற்றமும் நான் புரியாதிருக்க என்னை ஏன் இப்படி அடித்தீர்கள்?'' என்பதைத்தான் ''இது என்ன?'' என்னும் அவரின் இரு சொற்கள் உணர்த்தின. கலீபா அவரை அறிமுகப்படுத்திய மனிதரைச் சுட்டிக்காட்டி, ''இவர் உம்மைக் குறித்து என்ன சொன்னார்? அதை நீர் கேட்க வில்லையா?'' என வினவினர். ''ஆம் கேட்டேன் தான். அதற்கும் அடிக்கும் என்ன சம்பந்தம்?'' என அவர் கேட்டார். ''அதனால் உம் மனத்தில் ஏதாவது (கர்வம்) விழுந்துவிடும் எனப் பயந்து நான் உம் பெருமையை முறியடிக்க விரும்பினேன்'' எனக் கலீபா கூறினார்கள்.

உபை இப்னு க்ஃப் அண்ணல் நபி (ஸல்) அவர்களின் தோழர் களில் ஒருவர். அவருக்குச் சிலர் அளவிற்கதிகமான மரியாதை செய்தனர். அவர் எழுந்தால் அவர்களும் எழுந்தார்கள். அவர் நடந்தால், அவர்களும் அவர் பின்னால் நடந்தார்கள். கலீபா அவர்கள் இதைக் கவனித்தார்கள். உபை இப்னு கஃபும் அவர் தோழர்களும் தம் அருகில் வந்ததும், கலீபா தம் சவுக்கைக் கொண்டு உபை இப்னு கஃபுக்கு ஓர் அடி கொடுத்தார்கள். அவர் அதிர்ந்து போய் கலீபா அவர்கள் அடித்ததற்கான காரணம் புரியாமல் பிரமை பிடித்தவர் போல் நின்றார். அவரைப் பார்த்துக் கலீபா, ''நீர் அறிய மாட்டீரா இது

பின் செல்பவருக்குச் சிறுமையையும், முன் செல்பவருக்குப் பெருமையையும் உண்டு பண்ணும் என்பதை?'' என்று கேட்டார்கள். கலீபா அவர்களின் விளக்கம் கேட்டதும், அவர் பிரமை விலகியது. பிறர் தம் பின்னால் வருவதை அறிந்து, ஒருவர் மனத்தில் ஏற்படுவது கர்வம். அதுவே மனிதர்களுக்கிடையில் ஏற்றத் தாழ்வை ஏற்படுத்தும் குணத்தின் கருவுமாம். அது அப்போதைக்கப் போதே அரியப்பட்டு விட வேண்டும் என்பது கலீபா அவர்களின் கருத்து.

தாழ் குடியில் பிறந்தவர்கள், மேல் குடியில் பிறந்தவர்களைப் பார்த்து 'இறைவன் என்னைத் தங்களுக்கு அர்ப்பணிப்பான்' என்றோ 'எந்தையும், தாயும் தங்களுக்கு அர்ப்பணம் ஆகட்டும்' என்றோ கூறவேண்டும் என்பது அறியாமைக்கால அரேபியாவில் இருந்த வழக்கமாகும். இந்தச் சொற்கள் ஏற்றத் தாழ்வைக் குறிப்பவை எனக் கலீபா கருதினார்கள். அதனால் அவர்கள் அவைபற்றித் தம் வெறுப்பை அடிக்கடி காட்டிக் கொண்டு வந்தார்கள். மேல் குடியில் பிறந்தவர்கள், அடிமையாய் இருந்த பிலால் (ரலி) அவர்களை 'சையதினா' என அழைத்தபோது அதிகம் மகிழ்ந்தார்கள். பிலால் (ரலி) அவர்களைத் தாமும் அவ்விதமே அழைத்தார்கள். ''எங்கள் சையதினா அபூபக்ர் அவர்கள், எங்கள் சையதினா பிலாலை விடுதலை செய்தார்கள்'' என்று அவர்கள் குறிப்பிட்டார்கள்.

அப்பொழுது எகிப்தின் ஆளுநராக அம்ர் இப்னு ஆஸ் (ரலி) அவர்கள் இருந்து கொண்டிருந்தனர். அவர்களின் புதல்வன் முகம்மது, ஆளுநரின் பிள்ளை என்னும் அகங்காரத்தில் நகரத்தெரு ஒன்றில் செல்லும்போது, கிப்தி ஒருவரை சாட்டை கொண்டு அடித்து விட்டான். இதைப்பற்றி அந்தக் கிப்தி ஆளுநரிடம் முறையிட வில்லை, மதீனா வந்து கலீபாவிடம் முறையிட்டார். கலீபா அவர் களின் வளையா நீதி வேலை செய்ய ஆரம்பித்தது. ஆளுநரும், அவர் புதல்வனும் உடனே மதீனா வரவேண்டும் எனக் கலீபா உத்திர விட்டார்கள். அவ்விதமே அவர்கள் இருவரும் கலீபா முன் வந்து நின்றனர். ஒரு சாட்டையை அந்தக் கிப்தியின் கையில் கொடுத்து, ''அவன் உமக்கு எத்தனை அடிகள் கொடுத்தானோ அத்தனை அடிகள் நீர் அவனுக்குக் கொடும்!'' எனக் கலீபா கூறினார்கள்.

தவறு செய்த வரைத் தண்டிப்பார்கள் கலீபா என நம்பினாலும், தண்டனையைத் தம் கையால் கொடுக்கக் கூறுவார்கள் என அந்தக் கிப்தி கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை. ஆளுநரின் புதல்வன்



ஆயிற்றே என்னும் அச்சம் ஏற்பட்டாலும், பேரரசுகளை வீழ்த்திய கலீபா பக்கத்தில் நிற்பது பயத்தை அகற்றி, கிப்தி ஆளுநர் புதல்வனுக்குக் கொடுத்தார் அடிகளை. அதன் பின் அவர் சாட்டையைக் கலீபா அவர்களிடம் திருப்பிக் கொடுத்தபோது ''ஆளுநருக்கும் கொடும் சாட்டை அடி ஒன்று. தன் தந்தையின் பதவி பற்றித் தவறான கர்வம் கொண்டிருக்கா விட்டால் புதல்வன் உம்மை அடித்திருக்கமாட்டான்'' என்றார்கள் கலீபா. அது கேட்டுக் கிப்தி ''என்னை எவர் அடித்தாரோ அவருக்கு நான் பதிலடி கொடுத்து விட்டேன். அதுபோதும்'' என்று கூறியபோது, ''அல்லாஹ் மீது ஆணையாக, நீர் அவரை அடித்திருந்தாலும், நீர் அவ்விதம் செய்வதி லிருந்தும் நான் உம்மைத் தடுத்திருக்கமாட்டேன். உம் சொந்த விருப்பத்தின் பேரிலேயே நீர் அவரை விட்டுவிட்டீர்'' என்றார்கள் கலீபா. அதன்பின் அவர்கள் ஆளுநர் பக்கம் சினத்துடன் திரும்பி, ''அம்ரே! மக்கள் ஆளுபவர்களின் அடிமைகள் அல்லர். அவர்கள் அன்னை வயிற்றிலிருந்து சுதந்திரமானவர்களாகவே பிறக் கிறார்கள். அவர்களை எப்பொழுது நீர் அடிமைப்படுத்த ஆரம் பித்தீர்?'' என்று கேட்டார்கள்.

ஒரு நாள் அவர்களை சப்வான் பின் உமையா தம் வீட்டிற்கு விருந்துண்ண அழைத்தார். அதை ஏற்றுக் கொண்டு அவர்கள் அவர் வீட்டிற்குச் சென்றனர். உணவுத் தட்டுக்கள் விருந்தினர் அனைவர் முன்பும் கொண்டு வந்து வைக்கப்பட்டன. ஊழியர்கள் விருந்தி னருடன் சேர்ந்து உண்ண உட்காரவில்லை. எல்லோரும் அமர்ந்திருக்க அவர்கள் நின்று கொண்டிருந்தார்கள். இதைப் பார்த்ததும் கலீபா அவர்களுக்குக் கோபம் வந்துவிட்டது. ''ஊழியர்களை அவ மதிப்புடன் நடத்துபவர்களை அல்லாஹ் கவனித்துக் கொள்வான்'' என அவர்கள் எச்சரித்தார்கள்.

இவ்விதம் அவர்கள் மக்களில் கர்வம் கொண்டோரைக் கண்டித் தார்கள். மக்கள் மனத்தில் கர்வம் ஏற்பட்டு விடாமலும் பார்த்துக் கொண்டார்கள். ஒருவர் அவர்களிடம் வந்து, ''காலைத் தொழுகைக்குப் பின் நான் மக்களுக்கு நற்போதனை செய்ய அனுமதி தாருங்கள்!'' என வேண்டினார். அவருக்கு அவர்கள் ஒரு பதிலும் கூறாது அமைதியாய் இருந்தார்கள். அவர்களின் அமைதி, தம் கோரிக்கைக்கு அனுமதி இல்லை என்பதை அறிந்து கொண்டு அவர், ''அமீருல் முஃமினீன் அவர்களே! நற்போதனை செய்வதையா தடை செய்கிறீர்கள்?'' என்று கேட்டபோது, ''ஆம். அதனால் நீர் கர்வம்

கொண்டு வானத்தின் மீது ஏறிவிடுவீரோ என நான் அஞ்சுகிறேன்'' என அவர்கள் பதிலிறுத்தார்கள்.

'போதனை செய்கிறேன்' என்று ஒருவர் புறப்பட்டால், அவர் தம்மை அறிந்தவர் என்றும், பிறரை அறியாதவர் என்றும் கருதுகிறார் என்பதைக் கலீபா நன்கு அறிவார்கள். எனவே, தான் அவர்கள், ''எவன் தன்னை அறிஞன் என்று எண்ணுகிறானோ அவன் என்றும் அறியாதவனாகவே இருக்கிறான். எவன் தன்னை சுவர்க்கவாதி என்று கருதுகிறானோ, அவன் நரகவாதியாகவே இருக்கிறான்'' என்று கூறினார்கள்.

''கர்வம் கொண்ட அறிஞராய் இராதீர்கள்! உங்கள் அறிவிற்கு உங்கள் அறியாமையால் முட்டுக் கொடாதீர்கள்!'' என்று அறிவித்தார்கள்.

''நான் ஓர் அறிஞன்'' எனக் கூறிக் கொள்பவன் உண்மையில் அறிஞன் அல்லன்'' என்று சொன்னார்கள்.

## நீதி

கலீபா அவர்களுக்கு இருந்த சிறப்புப் பெயர்களில் ஒன்று அத்லு என்பது. அதன் பொருள் நீதி என்பதாகும். நீதிக்கு முன் எல்லோரும் ஒரு நிறை என்னும் கொள்கையைத் தாமும் கொண்டிருந்ததோடு, தம் காஜிகளும் கொண்டிருக்க வேண்டும் என அவர்கள் விரும்பினார்கள். அதனால் தான் அப்பெயரை அவர்களுக்கு மக்கள் வழங்கினர். அதை அங்கீகரிப்பது போல் அவர்களுக்கு மறுமையில் நீதி என்னும் கொடி கொடுக்கப்படும் என்று கூறப்படுகிறது.

அவர்கள் நீதி செலுத்திய விதமும், அவர்களின் நீதி நிர்வாகமும் அப்பழுக்கற்றவையாய் அமைந்திருந்தன, நீதி பகர்பவர் அல்லாஹ்வின் திருப்திக்கு ஆசைப்பட வேண்டும் என்பது அவர்களின் அசைக்க முடியாத கொள்கை. அதற்கு ஆதாரம் அவர்களின் இந்த அறிவிப்பு: ''நான் ஒவ்வொரு நாளும் பொதுச் சபையை விட்டு எழும் போது, பாதிப் பேர் என் மேல் திருப்தியில்லாமல் குறைபாடோடு தான் செல்வார்கள். இது தவிர்க்க முடியாததாகும். ஏனெனில், நீதிமன்றத்திற்கு வந்து விட்டால் இரு தரப்பினருக்கும் சாதகமாகத் தீர்ப்புக் கூற முடியாதல்லவா? நியாயமில்லாத வழக்கைக் கொணர்ந்தவனுக்கு எதிராகத் தீர்ப்புச் சொன்னால், அவனும் கூடக் குறைப்படத் தான் செய்வான். எனவே இருவரையும் திருப்திப்படுத்துவது இயலாத



காரியம். மக்களின் திருப்திக்காக அல்லாஹ்வின் திருப்தியை விடுபவன் மூடனாவான்.''

அநீதி நிரபராதிக்கு அணுவளவும் ஏற்பட்டுவிடக் கூடாது என்பதில் கலீபா அதிகம் அக்கறை செலுத்துவார்கள். அதனால் அவர்கள் தம் தீர்ப்புகளைத் தகுந்த ஆதாரத்துடன் தான் வழங்குவது வழக்கம். அவர்களிடம் ஒரு நாள் வழக்கு ஒன்று வந்தது. அதில் சாட்சி சொல்ல ஒருவர் வந்தார். அவர் சொல்லும் சாட்சியத்தைக் கேட்குமுன் அவரின் தகுதியை அவர்கள் அறிந்து கொள்ள விரும்பினார்கள். எனவே அவரைப் பார்த்து, ''நீர் தாமே சாட்சி சொல்ல வந்தவர்? உம்மை எனக்குத் தெரியவில்லை. உம்முடைய நேர்மையையும், நாணயத்தையும் முதலில் நான் தெரிந்து கொள்ள வேண்டும். எனவே உம்மை அறிந்த ஒருவரை அழைத்து வாரும்! அவரிடம் உம்மைப் பற்றி விசாரிக்கிறேன். அதன் பிறகு நீர் சாட்சியம் சொல்லலாம்'' என்று அவர்கள் கூறினார்கள்.

அதன்படி அவர் ஒருவரை அழைத்து வந்தார். அந்த மனிதரைப் பார்த்துக் கலீபா, ''இதோ சாட்சியம் சொல்வதற்கு வந்து நிற்கிறாரே அவரைப் பற்றி உமக்குத் தெரியுமா?'' என்று கேட்டார்கள்.

அந்த மனிதர், ''எனக்கு நன்றாகத் தெரியும்'' என்று பதில் அளித்தார். ''எப்படித் தெரியும்?'' என்று கலீபா கேட்டார்கள். அவர் மௌனம் சாத்தித்தார். ''அவருக்கு அண்டை வீட்டுக்காரராக நீர் இருந்ததுண்டா? அப்படியிருந்தால் அவரைப் பற்றி உமக்கு ஓரளவு தெரிந்திருக்க முடியும்'' என்று கலீபா கூறினார்கள். ''நான் அப்படி இருந்ததில்லை'' என்றார் அவர். ''சரி, அவர் நடத்தையை நன்கு அறிந்து கொள்வதற்கு வாய்ப்பாகப் பிரயாணம் எதிலாவது அவருடன் சேர்ந்து சென்றிருக்கிறீரா?'' என்று கலீபா கேட்டார்கள். ''அப்படியுமில்லை'' என்றார் அவர்.

''போகட்டும். உங்களுக்கிடையில் பணத் தொடர்பு கொடுக்கல், வாங்கல் ஏதும் உண்டா?'' என்னும் கலீபா அவர்களின் கேள்விக்கு, ''அறவே இல்லை'' என்று அவர் பதில் அளித்தார்.

கலீபா தீர்க்கமாக சிந்தித்து விட்டுத் தம் தீர்ப்பை வெளியிட்டார்கள். ''அந்த மனிதரைப் பற்றி உமக்கு ஒன்றுமே தெரியாது. இப்படித்தான் தீர்மானிக்க வேண்டியிருக்கிறது. அவரை நீர் நல்லவர் என்று எண்ணிக் கொண்டிருக்கிறீர். ஏனெனில் அவர் பள்ளியில்

தொழுது கொண்டிருந்ததை நீர் பார்த்திருக்கிறீர். அங்கேயே உட்கார்ந்து தலையைத் தாழ்த்தியும், உயர்த்தியும் குர்ஆன் ஓதிக் கொண்டிருந்ததை நீர் கண்டிருக்கிறீர். உடனே நல்லவர் எனத் தீர்மானித்து விட்டீர், இல்லையா? நான் சொல்வது சரிதானே?''

''ஆம், முற்றிலும் சரி'' என்று அந்த மனிதர் கூறியதும், ''அப்படியானால் அவரைப்பற்றி உமக்கு ஒன்றுமே தெரிந்திருக்க முடியாது. நீர் போகலாம்'' என்று குறிப்பிட்டு விட்டு சாட்சி சொல்ல வந்தவரைப் பார்த்து, ''உம்மைப் பற்றி நன்கு அறிந்த ஒருவரை அழைத்து வாரும்!'' என்று கலீபா கட்டளையிட்டார்கள்.

இவ்விதம் அவர்கள் கூறக்காரணம், ஒருவரை அவருடைய தொழுகை வணக்கங்களைக் கொண்டு சரியாகத் தெரிந்து கொள்ள இயலாது என்று அவர்கள் கருதியதாகும். ''ஒருவரை அவருடைய தொழுகை நோன்பை வைத்துத் தீர்மானித்து விடாதீர்கள்!'' என்பது அவர்களின் சொல்லாகும். சிலர் பக்திமான்கள் போல் பாசாங்கு செய்வதை அவர்கள் அறிவார்கள். அவ்வித ஆட்களை அவர்களுக்கு அறவே பிடிக்காது. ஒருவர் பள்ளியில் தலைகுனிந்து உட்கார்ந்திருப்பதைப் பார்த்த அவர்கள், ''கோணல் கழுத்தரே! நிமிர்ந்து உட்காரும்!'' என உரத்து உரைத்தார்கள்.

ஒரு நாள் ஒருவன் அவர்கள் முன் கொண்டு வந்து நிறுத்தப்பட்டான். அவன் மீது சாட்டப்பட்ட குற்றம், பொது நிதியிலிருந்து திருடி விட்டான் என்பது. பலரையும் விசாரித்துப் பார்த்தபோது, அவன் திருடியது உண்மைதான் எனத் தெரிந்தது கலீபாவுக்கு. ஆனால் அவர்கள் அவனுக்குத் தண்டனை எதுவும் கொடுக்காமல் விட்டு விட்டார்கள். இது அங்கிருந்தவர்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. அதை அறிந்து கொண்டு அவர்கள், ''பொது நிதியில் அந்த மனிதனுக்கும் பங்கிருக்கிறது. அதனால்தான் நான் அவனைத் தண்டிக்கவில்லை. தனக்கும் பங்கிருக்கும் நிதியிலிருந்து எடுத்தவனை எப்படித் தண்டிப்பது? அவனை எச்சரித்து அனுப்ப வேண்டும். தனக்குச் சிறிதும் உரிமையில்லாத பொருளைத் திருடியவனின் கரத்தையே துண்டிக்க வேண்டும்'' என்று கூறினார்கள்.

இன்னொரு நாளும் இப்படித்தான் ஒருவனை இருவர் அவர்கள் முன் இழுத்துக் கொண்டு வந்து நிறுத்தினார்கள். அவன்மீது கூறப்பட்ட குற்றமும் திருடினான் என்பதே. அவனைப் பார்த்து அவர்கள், ''நீ திருடியது உண்மைதானா?'' என்று கேட்டார்கள்.



''இல்லை'' என மறுத்துவிட்டு அவன் இயம்பினான்: ''எனக்கோ அதிகப் பசியாயிருந்தது. இவர்கள் இருவருக்கும் சொந்தமான பழத் தோட்டம் ஒன்றைப் பார்த்தேன், சில பழங்களைப் பறித்துத் தின்னலாமா என எண்ணினேன். ஆனால் அவற்றை நான் பறிக்கவில்லை. அமீருல் முஃமினீன் அவர்களே! என் நிலையிலிருந்த ஒருவன் அந்தப் பழங்களைப் பார்த்து அப்படி எண்ணாமல் இருப்பானா, நீங்களே சொல்லுங்கள்!'' அவன் சொன்னதைக் கேட்டதும் கலீபா அவர்களுக்கு அவன் மீது பரிவும், அவனை இழுத்து வந்தவர்கள் மீது சினமும் ஏற்பட்டன. அவர்கள் கூறினார்கள்: ''அவன் திருடாதவரை அவன் மீது திருட்டுக் குற்றம் சாட்டி அவனை இப்படி நீங்கள் இழுத்து வந்திருக்கக்கூடாது.''

ஆதாரத்துடன் குற்றம் சாட்டப்படும்போது, அவர் எவராக இருந்தாலும், அவர்களைத் தண்டிக்கக் கலீபா என்றும் தயங்கியதில்லை. தாம் குற்றம் செய்தபோதும் அதற்கான தண்டனையைப் பெற அவர்கள் கொஞ்சமும் தயங்கியது கிடையாது. நீதி கோரி காஜி முன் வந்து விட்டால் சமூகத்தில் இருக்கும் ஏற்றத்தாழ்விற்கு அங்கு இம்மியும் இடமில்லை என்பது அவர்கள் கருத்து. ஒருமுறை அவர்கள் மீது 'உபை பின் கஃப் வழக்கு ஒன்று தொடுத்தார். அது காஜி ஜைத் பின் தாபித் (ரலி) அவர்கள் முன் வந்தது. வாதியும், பிரதிவாதியும் தம் தம் கட்சியை எடுத்துச் சொல்ல வந்தார்கள். கலீபா அவர்களைக் கண்டதும் காஜி 'நீதிக்கு முன் ஒரு நிறை' என்னும் விதி விட்டு விலகினார். எழுந்து நின்றார், நீதி விழுந்து விடுமே என எண்ணிப் பாராமல், ''இந்த இருக்கையில் உட்காருங்கள்!'' எனக் கூறி உபசரித்தார் நீதி வளைந்து விடுமே என நினைத்துப் பாராமல். அவர் எழுந்தது, மொழிந்தது கண்டு கலீபா மகிழ்ந்துவிடவில்லை. அதற்கு மாறாகக் காஜியைப் பார்த்து, ''இது நீர் செய்யும் முதல் அநீதி'' என உரைத்து விட்டு உபை பின் கஃப் பக்கம் போய் உட்கார்ந்து கொண்டார்கள்.

வழக்கு காஜி முன் விசாரணைக்கு வந்தது. உபை, கலீபா மீது குற்றம் ஒன்றைச் சாட்டினார். அவர் சாட்டிய குற்றத்தைக் கலீபா மறுத்தார்கள். வாதி உபை வழக்குப் பிரகாரம் கலீபா பிரமாணம் செய்யவேண்டும் என வற்புறுத்தினார். பிரதி வாதியின் பதவியை நினைந்து அந்த உரிமையை விட்டுக் கொடுக்கும்படி உபையைக் காஜி வேண்டினார். இந்தப் பாகுபாடு கலீபா அவர்களை ஆத்திரம் கொள்ள

வைத்தது. ''இதுநீர் செய்யும் இரண்டாவது அநீதியாகும். நீதிக்கும், நேர்மைக்கும் அப்பாற்பட்டதாகவும், அல்லாஹ்வுக்கும், அவன் தூதருக்கும் துரோகம் செய்வதாகவும் இது அமைகிறது. காஜியாக இருக்கும் ஒருவர் இத்தகைய பலவீனங்களை விட்டும் விலகியிருப்பதோடு, ஒவ்வொரு வேளையிலும் அல்லாஹ்வையும் அவன் தூதரையும் நினைக்கத் தவறக்கூடாது. நான் இங்கு ஆட்சி யாளன் என்றோ, அரசன் என்றோ, அழைத்துவரப் பட வில்லை, ஒரு பிரதிவாதி என்னும் முறையில்தான் கொண்டு வரப்பட்டிருக்கிறேன்'' என்று காஜியைப் பார்த்துக் கூறி விட்டுக் கலீபா பகர்ந்தார்கள். ''உமரும் மற்றவரும் உம் பார்வையில் சமமாகத் தெரியாவிடில் நீர் காஜிப் பதவிக்கே தகுதியானவர் அல்லர். வழக்கை முடிந்த மட்டும் விரைவில் விசாரித்து முடியும்! உமரையும், பிறரையும் நீதி மன்றத்தில் சமமாக நடத்தத் தவறிய உம்மீது நான் நடவடிக்கை எடுப்பதுபற்றி யோசிக்க வேண்டியதிருக்கிறது.''

இன்னொருமுறை கலீபா அவர்கள் மீது ஒருவர் வழக்குத் தொடுத்தார். வழக்கு அவர்களால் காஜியாக நியமிக்கப்பட்ட சுரைஹ் முன் வந்தது. கலீபா குதிரை ஒன்றை அதனைச் சோதித்துப் பார்த்த பிறகே எடுத்துக் கொள்ளப்படும் என்னும் நிபந்தனையுடன் வாங்கி னார்கள். அதனை ஒருவரிடம் கொடுத்து, சவாரி செய்து பார்க்கும்படிக் கூறினார்கள். அவர் அதன் மீதேறி சவாரி செய்யும் போது அதற்குக் காயம் ஏற்பட்டுவிட்டது. குதிரை கலீபா அவர்களுக்குப் பிடிக்க வில்லை. அதனை அவர்கள் திருப்பிக் கொடுத்து விட விரும்பி னார்கள். ஆனால் குதிரையின் சொந்தக்காரர் அதனைப் பெற்றுக் கொள்ள மறுத்தார். இதற்கு நீதி கோரித்தான் இருவரும் காஜி முன் வந்தனர். வழக்கை விசாரித்து விட்டுக் காஜி இவ்விதம் தீர்ப்புக் கூறினார்: ''குதிரையின் சொந்தக்காரர் அனுமதி பேரில் சவாரி செய்யப்பட்டிருந்தால் குதிரையைத் திருப்பிக் கொடுத்து விடலாம். அப்படி அனுமதி பெறவில்லையாயின் குதிரையின் சொந்தக்காரர் அதனைத் திரும்பப் பெற வேண்டியதில்லை.'' இந்தத் தீர்ப்பு தமக்குப் பாதகமானதாய் இருந்தாலும், சுரைஹின் நீதி கலீபா அவர்களின் மனத்தை மகிழ்வித்தது. அவரை அவர்கள் கூபாவுக்குக் காஜியாக ஆக்கினார்கள்.

கலீபா அவர்கள் இவ்விதம் இம்மியும் நீதி வழுவாது இருந்து கொண்டிருக்கும்போது அவர்களின் நீதியைச் சோதிக்கும் ஒரு சம்பவம் நிகழ்ந்துவிட்டது. அவர்களின் புதல்வர் அபூசஹ்மா மது அருந்தி



விட்டார்.* அந்த வழக்கைத் தாமே விசாரிக்க வேண்டும் எனக் கலீபா கூறினார்கள். அதற்குக் காரணம் கலீபாவின் புதல்வர் என்பதற்காக, காஜி சற்று இரக்கம் காட்டிவிடலாம் என்பதாகும். அபூசஹ்மா குடித்தார் என்பது ஐயத்திற்கிடமின்றி நிரூபணமாகியது. அதற்கான தண்டனையான எண்பது அடிகளைத் தாமே கொடுக்கக் கலீபா சாட்டையைக் கையில் எடுத்தார்கள். அதற்குக் காரணம் மற்றவர் அடித்தால் அடிகள் அவ்வளவு பலமாக இராமல் போய் விடலாம் என்பதாகும். கலீபா அவர்களின் கரங்கள் இரக்கம் என்பதை இதயத்திலிருந்து பிய்த்தெறிந்து விட்டு அபூசஹ்மா மீது அடிகளை அடுக்க ஆரம்பித்தன.

அபூசஹ்மாவின் ஆவி அணுஅணுவாகப் போய்க் கொண்டி ருந்தது. எண்பது அடிகளில் சில எஞ்சியிருக்கும் போதே அபூசஹ்மா இறந்துவிட்டார். அதை அறிந்து கலீபா தாம் பெற்ற பிள்ளை தவறு செய்து விட்டானே என்பதற்காக வருந்தினாலும், அந்தத் தவற்றிற் கான தண்டனையைப் பெற்று இறந்து விட்டான் என்பதற்காக மகிழ்ந்தார்கள். இத்தகைய சோதனையிலும் நீதி வழுவாமல் நடக்க வலிமை தந்ததற்காக அவர்கள் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத் தினார்கள். கதாமா பின் மஸ்ஊன் என்னும் தம் மைத்துனர் மது அருந்திவிட்டதை அறிந்த போதும், அவர்கள் அவருக்கு இதே விதத் தண்டனையைக் கொடுக்க இம்மியும் தயங்கவில்லை.

தம் குடும்பத்தார் தவறு செய்தால், தண்டனை கொடுக்க ஒரு சிறிதும் தயங்காத கலீபா அவர்கள், தம் குடும்பத்தாருக்கு இப்படியும் எச்சரிக்கையும் செய்வதுண்டு. ''நான் இன்று மக்களுக்கு இன்ன காரியத்தைச் செய்யக் கூடாது என போதித்திருக்கிறேன். எனவே நீங்களும் அதனைச் செய்யக் கூடாது. அதன் அருகிலும் நீங்கள் போகக் கூடாது. ஏனெனில் மக்களின் பார்வை உங்கள் மீது இருந்து கொண்டி ருக்கும். உங்களில் எவரும் அதைச் செய்தால், நான் உங்களுக்கு இருமடங்கு தண்டனை தருவேன்.''

இவ்விதம் வழுவாது நீதி வழங்குபவர்களாய்க் காஜிகள் இருக்க வேண்டும் எனக் கலீபா விரும்பினார்கள். அவ்வித மனிதர்களையே

* கலீபா அவர்களின் நற்பெயரைக் கெடுக்க வேண்டும் என்பதற்காக யூதன் ஒருவன் அபூசஹ்மாவைத் தன் வீட்டிற்கு அழைத்துச் சென்று அவர் மனத்தை மயக்கி மது அருந்தச் செய்து விட்டான் என்று சொல்லப்படுகிறது.

தேர்ந்தெடுத்து அவர்கள் காஜிகளாக ஆக்கினார்கள். காஜிகள் வழுவாது நீதி வழங்குவதற்காக அவர்கள் சில விதிகளை ஏற்படுத்தினார்கள். அபூமூஸா அஷ்அரீ (ரலி) அவர்களுக்கு அனுப்பிய ஃபர்மானில் இந்த விதிகள் இருந்தன: ''எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே! நீதி வழங்குவது என்பது ஒரு முக்கிய கடமையாகும். உம் முன்னிலையிலும், பலர் நடுவில் நீர் இருக்கும் போதும் உம் தீர்ப்பில் நீர் மக்களைச் சமமாக நடத்தும்! ஏனெனில், பலவீனர்கள் நீதியைப் பெறுவதில் மனம் தளராமலும், உயர் நிலையில் உள்ளவர்கள் உம் சலுகையைப் பெறாமலும் இருப்பதற்காக. நிரூபிக்க வேண்டிய பொறுப்பு வாதியுடையதே. மறுப்பவர் எவரும் அதனைப் பிரமாணத்தின் மீது செய்ய வேண்டும். ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுப்பது, சமாதானமாகப் போவது அனுமதிக்கப்பட்டது தான், அது சட்ட விரோதமானதைச் சட்டப்படியானதாகவோ, சட்டப்படியானதைச் சட்ட விரோதமானதாகவோ மாற்றாவிடில், நேற்றையை முடிவை ஆலோசனைக்குப் பிறகு (முன் முடிவு தவறானதாகத் தோன்றினால்) மாற்றுவதிலிருந்து உம்மை எதுவும் தடுக்க வேண்டாம்! ஒரு பிரச்சினை பற்றி உமக்கு ஐயம் ஏற்பட்டு, அதுபற்றி குர்ஆனிலோ, ஹதீஸிலோ ஒன்றும் காணா விடில், அது பற்றி மீண்டும், மீண்டும் சிந்தியும்! அது போல முன் நிகழ்ந்த வழக்குகளையும், அதைப் போன்று இருக்கும் வழக்குகளையும் மனத்தில் கொண்டு சிந்தனை செய்யும்! சாட்சியங்களை சமர்ப்பிக்க விரும்பும் மனிதனுக்கு விதி ஒன்றும் விதிக்க வேண்டும். அவன் தன் கட்சியை நிரூபித்தால், அவன் உரிமையை வழங்கி விடும்! இல்லையேல் வழக்கைத் தள்ளுபடி செய்து விடும்! எல்லா முஸ்லிம்களும் நம்பத் தகுந்தவர்கள், கசையடி தண்டனை பெற்றவர்கள், தவறான சாட்சியங்களைக் கொண்டு வந்தவர்கள், வசம்சாவளியில், உறவில் ஐயத்திற்குரியவர்கள் தவிர்த்து,''

காஜிகள் மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்களாக இருக்க வேண்டும் எனக் கலீபா கருதினார்கள். காஜி மக்களின் நன்மதிப்பை இழந்து விட்டால் அவர் காஜியாக இருக்கத் தகுதியில்லை எனவும் அவர்கள் எண்ணினார்கள். அப்துல்லாஹ் இப்னு மஸ்வூத் (ரலி) அவர்கள் மக்களின் நன்மதிப்பை இழந்து விட்டனர் என அறிந்ததும், அவர்கள் இனிமேல் வழக்குகளைக் கேட்கக் கூடாது எனக் கலீபா தடை விதித்தார்கள்.

பணத்தேவை காஜிகளின் மனத்தைக் கெடுத்துவிடும் எனக் கலீபா கருதினார்கள். அதனால் அவர்கள் காஜிகள் தவறான



வருமானத்தை எண்ணியும் பாராமல் இருப்பதற்காக 'இதைவிட அதிகச் சம்பளம் எங்களுக்கு அவசியமில்லை' என்று கூறும் அளவு அதிகச் சம்பளம் கொடுத்தார்கள். சுரைஹ், சுலைமான் இப்னு ரபீஆ போன்ற காஜிகள் மாதம் 500 திர்ஹங்கள் சம்பளமாகப் பெற்றனர். அவற்றின் இன்றைய மதிப்பு 5000 ரூபாய் ஆகும். காஜிகள் வாணிபம் செய்யக் கூடாது என்றும், கடை வீதியில் இலாபம் பெறுவதற்காக விற்கவோ, வாங்கவோ கூடாது என்றும் கலீபா தடை செய்தார்கள்.

ஒரு வழக்கு குறிப்பிட்ட துறை சம்பந்தப்பட்டதாக இருந்தால், அந்தத் துறையில் தேர்ந்தவர்களை அழைத்து, அவர்களிடம் ஆலோசனை கேட்டுத் தீர்ப்புக் கூறும் வழக்கத்தையும் கலீபா அவர்கள் அறிமுகப்படுத்தினார்கள். ஹுதிய்யா என்பவர் சபர்கான் என்பவர் பற்றிக் கிண்டல் கவி ஒன்று எழுதினார். அது பற்றி சபர்கான் கலீபாவிடம் வந்து வழக்குரைத்தார். அது கவிதையாக இருந்ததால், அத்துறையில் தேர்ந்தவர்களைக் கொண்டே அதற்குப் பொருள் அறிய விரும்பிக் கலீபர், கவிஞர் ஹஸ்ஸான் இப்னு தாபித் (ரலி) அவர்களை அழைத்தார்கள். அவர்கள் கூறிய கருத்தை மனத்திற் கொண்டே கலீபா இவ்வழக்கில் தீர்ப்பு வழங்கினார்கள்.

சட்டம் தெரியாத ஒருவரை, அதனை மீறி விட்டார் என்று கூறித் தண்டிப்பது அநீதி எனக் கலீபா கருதினார்கள். அதனால் அவர்கள் ஒவ்வொரு ஊரிலும் இலவச ஆலோசனை கூற சட்ட நிபுணர்களை நியமித்தார்கள். அத்துடன் சட்டம் தெரியாதவர்கள் தவறான விளக்கங்கள் கொடுத்து மக்களை வழி கெடுத்து விடாமலும் பார்த்துக் கொண்டார்கள்.

நீதி என்னும் பெயர் பெற்றிருந்த கலீபா அவர்கள் நேர்மை என்னும் பெயர் பெறவும் தகுதி பெற்றவர்களாய் இருந்தனர். அதற்கு ஆதாரமாக அவர்களின் வரலாற்றில் எத்தனையோ சம்பவங்கள் வருகின்றன. அவர்கள் ஒரு சமயம் பிணிவாய்ப்பட்டிருந்தார்கள். அவர்களை வருத்தும் பிணி விலக வேண்டுமானால் தேன் அருந்த வேண்டும் எனச் சிலர் சொன்னார்கள். கலீபா அவர்களிடம் தேன் வாங்கப் பணமும் இல்லை, கடைத் தெருவில் தேனும் கிடைக்கவில்லை. ஆனால் அப்பொழுது பொது நிதிக்கு ஏராளமாகத் தேன் வந்திருந்தது. அதனை மக்களின் அனுமதி பெற்றுக் கூட எடுக்க அவர்களின் மனம் மறுத்தது. அவசியத்தை முன்னிட்டு அதிகத் தயக்கத்துடன் தொழுகைக்குத் திரண்டிருந்த மக்களிடம், தம் நோய்க்கு

மருந்தாகப் பொது நிதியிலிருந்து கொஞ்சம் தேன் எடுத்துக் கொள்ள அனுமதி கோரினார்கள்.

ஒரு சமயம் பஹ்ரைனிலிருந்து கஸ்தூரி வந்திருந்தது அதனை மக்கள் அனைவருக்கும் பகிர்ந்தளிக்க அவர்கள் விரும்பினார்கள். ''அதனை நிறுத்துக் கொடுக்க ஒருவர் வேண்டும்'' என அவர்கள் கூறினார்கள். ''அதைக் கேட்டு அவர்களின் மனைவி, ''நான் நிறுத்துக் கொடுக்கிறேனே'' என்று சொன்னார். அதற்குக் கலீபா ஒரு பதிலும் பகரவில்லை. சற்று நேரம் சென்ற பின் அவர்கள், ''எவராவது இதனை நிறுத்துக் கொடுத்தால், நான் முஸ்லிம்களுக்குப் பங்கிட்டுக் கொடுத்து விடுவேன்'' என்று கூறினார்கள். அப்பொழுது அவர்களின் மனைவி, ''நான் நிறுத்துக் கொடுக்கிறேன்'' என்று கூறினார். அதற்கும் அவர்கள் யாதொரு பதிலும் பகரவில்லை. மூன்றாம் முறையும் அவர்கள் அதே விதம் கூறியபோது அவர்களின் மனைவி அதே சொற்களைச் சொன்னார்.

இப்பொழுது கலீபா தம் மனைவியைப் பார்த்து, ''நீ அதனை உன் கையால் எடுத்துத் தராசில் வைத்து விட்டு, அந்தக் கையை உன் உடம்பில் தடவுவாய். அந்த அளவு கூடக் கஸ்தூரி என் பங்கிற்கு அதிகமாக வர நான் விரும்பவில்லை'' என்று கூறினார்கள். அவர்களுக்குப் பின் தோன்றிய அவர்களின் பெயரையே கொண்ட கலீபா உமர் இப்னு அப்துல் அஸீஸ் (ரஹ்) அவர்கள் பொது நிதியைச் சேர்ந்த கஸ்தூரி நிறுக்கப்பட்டபோது, தம் நாசிகளை மூடிக் கொண்டனர். ''என் பங்கிற்கு அதிகமாக நான் அனுபவித்துவிடக் கூடாது'' என்று, அவர்கள் அதற்குக் காரணம் கூறினர். பொது நிதியைக் காப்பது பற்றிக் கலீபா உமர் (ரலி) அவர்களின் எண்ணம் இது: ''தாய் தந்தையற்ற அநாதைக் குழந்தைளுக்குச் சேர வேண்டிய பொருளைக் கட்டிக் காக்கும் ஒரு மனிதன் எப்படி எண்ணுவானோ அப்படி எண்ணுகிறேன்.''

ஒரு நாள் கலீபா பொது நிதியிலிருந்து பொருள் எடுத்து ஏழைகளுக்குக் கொடுத்துக் கொண்டிருந்தனர். அப்பொழுது அங்கு வந்த அவர்களின் பெண் குழந்தை வெள்ளிக்காசு ஒன்று கீழே கிடப்பது கண்டு அதை எடுத்துக் கொண்டு வீட்டிற்குள் ஓடியது. கலீபா அவர்களா விடுபவர்கள்? உடனே எழுந்து குழந்தையைத் துரத்திக் கொண்டு ஓடினார்கள். அது கெட்டிக்காரக் குழந்தை. உடனே அதனைத் தன் வாய்க்குள் போட்டுக் கொண்டது. அதன் வாய்க்குள் விரலைவிட்டு, அந்தக் காசை வெளியில் எடுத்துப் பொது நிதியில் சேர்த்த பிறகுதான் கலீபா அவர்களுக்கு அமைதி ஏற்பட்டது. அதைப் பார்த்து ஆச்சரியப்பட்ட மக்களைப் பார்த்து, ''மக்களே! சாதாரணமாக எல்லா முஸ்லிம்களுக்கும் இல்லாத ஓர் உரிமை, உமருக்கோ, உமரின் குடும்பத்தவருக்கோ கிடையாது'' என்று கூறினார்கள்.



இன்னொரு நாள் அபூ மூஸா அஷ்அரீ (ரலி) அவர்கள் பொதுநிதி இருந்த இடத்தைப் பெருக்கிச் சுத்தம் செய்து கொண்டிருந்தனர். அப்பொழுது அங்கு ஒரு மூலையில் வெள்ளிக்காசு ஒன்று கிடந்தது. அதை எடுத்து அபூமூஸா அஷ்அரீ (ரலி) அவர்கள் கலீபாவின் பெயரக் குழந்தையின் கையில் கொடுத்தனர். அதன் கையில் காசைக் கண்ட கலீபா அவர்கள், ''இது எங்கிருந்து கிடைத்தது?'' என்று கேட்டார்கள். ''அபூ மூஸா கொடுத்தார்'' என்று அது கூறியது. இதைக் கேட்டதும் கலீபா அவர்களின் கண்கள் கனன்றன. விருட்டென எழுந்து அவர்கள் அபூ மூஸா அஷ்அரீ (ரலி) அவர்களிடம் வந்தார்கள். 'அபூமூஸா! மதீன மாநகரில் உமரின் வீட்டைவிடக் கேவலமான வீடு வேறு எதுவும் கிடையாது என்னும் தீர்மானத்திற்கு நீர் வந்து விட்டீரா? அல்லாஹ் வின் தூதர் வழியைப் பின்பற்றுவர்களில் நல்லவர்களே இல்லாமல் போக வேண்டும் என்பதற்கு நீர் வழி வகுக்குகிறீரா?'' என்று கேட்டார்கள். அபூ மூஸா அஷ் அரீ (ரலி) அவர்கள் கலீபா அவர்களின் கடும் சினம் கண்டு அலறிப் போய்விட்டனர். தம் குழந்தையின் கையி லிருந்து காசைப்பற்றித்துப் பொதுநிதியில் சேர்த்த பிறகு தான் கலீபா அவர்களுக்கு ஆறுதல் ஏற்பட்டது.

ஒரு முறை கலீபா அவர்களின் மகள் ஹஃப்ஸா (ரலி) அவர்கள், கலீபா அவர்களைக் கண்டு, ''அமீருல் முஃமினீன் அவர்களே! அவற்றில் என் பங்கை எனக்கு அளியுங்கள்! ஏனெனில் நான் உங்களின் உறவினர் அல்லவா?'' என்று கூறினர். அப்பொழுது ஏராளமாகக் கொள்ளைப் பொருள்கள் மதீனாவில் வந்து குவிந்திருந்தன. மகளின் வேண்டுகோள் கேட்டுக் கலீபா அவர்கள் விளம்பினார்கள். ''என் அன்பே! உம் பங்கு என் உடைமைகளில் தாம் இருக்கிறது. போரி லிருந்து வருவது பொதுச் சொத்தாகும். நீர் உம் தந்தையை ஏமாற்ற முயல்கிறீர்.''

இன்னொரு முறை கலீபா அவர்களின் புதல்வர்களான அப்துல்லாஹ் (ரலி) அவர்களும், உபைதுல்லாஹ் (ரலி) அவர்களும் இராக் சென்று திரும்பும்போது, பஸ்ரா வந்தனர். அப்பொழுது அங்கு

அபூமூஸா அஷ்அரீ (ரலி) அவர்கள் ஆளுநராய் இருந்தார்கள். கலீபாவின் புதல்வர்களிடம் அவர்கள் இந்த ஆலோசனையை அளித்தார்கள்: ''பொது நிதியில் சேர்க்கப்பட வேண்டிய பணம் இங்கு இருக்கிறது. அதைக் கலீபாவிடம் சேர்க்க வேண்டும். அதை உங்களிடம் தருகிறேன். அதற்கு நீங்கள் ஏதாவது பொருள் வாங்கிக் கொண்டு மதீனா சென்று அதை விற்று அதில் கிடைக்கும் இலாபத்தை எடுத்துக் கொண்டு, பணத்தைக் கலீபாவிடம் சேர்த்து விடுங்கள்!''

அவ்விதமே அவர்கள் இருவரும் செய்யத் தீர்மானித்தனர். ஆளுநரும் இதைக் கலீபாவுக்கு முன்கூட்டியே அறிவித்தனர். புதல்வர் இருவரும் இலாபத்தை எடுத்துக் கொண்டு ஆளுநர் கொடுத்த பணத்தைக் கொடுக்க தந்தையாரிடம் வந்தனர். அவர்களைப் பார்த்த கலீபா ''என் புதல்வர்கள் என்பதாலேயே ஆளுநர் இந்தச் சலுகையை உங்களுக்கு அளித்திருக்கிறார். இது மக்களிடையே வேற்றுமை காட்டுவதாகும். எனவே இலாபத்தையும் தந்து விடுங்கள்!'' என்று கூறினார்கள். தந்தையார் கூறியபடியே புதல்வர்கள் செய்தனர்.

மற்றொருமுறை கலீபா அவர்களின் மனைவி உம்மு குல்தூம் அவர்கள், பேரரசர் ஒருவரின் மனைவிக்கு வாசனைப் பொருள்கள் அடங்கிய குப்பிகள் சிலவற்றை அன்பளிப்பாக அனுப்பி வைத்தனர். சிரியா வெற்றி கொள்ளப்பட்டபின் அரசர்களுடன் நட்புறவு கொண்டு கடிதங்கள் பரிமாறிக் கொள்ளப்பட்ட சமயம் அது. குப்பிகளைப் பெற்றுக் கொண்ட பேரரசி குப்பிகளிலிருந்த வாசனைப் பொருள் களை எடுத்துக் கொண்டு, அவற்றில் அரிய மணிகளை நிரப்பி அன்பளிப்பாகக் கலீபா அவர்களின் மனைவிக்கு அனுப்பி வைத்தார். அவற்றைப் பெற்ற கலீபா அவர்கள், குப்பிகளிலிருந்து அரியமணி களை எடுத்துப் பொதுநிதிக்கு அனுப்பி வைத்துவிட்டுத் தம் மனைவிக்கு வாசனைப் பொருள்களுக்குரிய விலையைக் கொடுத்தார்கள்.

இதை அறிந்த மக்கள், ''அது பேரரசியின் பொருள் ஆயிற்றே, அந்த அரசி இஸ்லாமிய ஆட்சிக்கு உட்பட்ட வரும் அல்லவே'' என்று கூறி, அவை அவர்களின் மனைவிக்குச் சேர வேண்டியவையே என்று வலியுறுத்தியபோது, ''வாசனைப் பொருள்கள் அவருடைய தாயினும், அவற்றை எடுத்துச் சென்றவர் அரசாங்க ஊழியர். அவர் செலவை அரசாங்கம் ஏற்கிறது'' என்று கூறி மக்களின் சொல்லை ஏற்க மறுத்து விட்டார்கள் கலீபா.





இப்படிக் கலீபா நேர்மையுடன் தாமும் இருந்தார்கள், பிறரும் இருக்க வேண்டும் என விரும்பினார்கள். அப்படி இருப்பவர்களை அதிகம் மதித்தார்கள். ஒரு சமயம் அவர்கள் மக்கா செல்லும் சாலையில் ஓர் இடத்தில் தங்க நேர்ந்தது. அப்பொழுது ஒருவன் ஆடுகளை ஓட்டிக்கொண்டு அங்கு வந்தான். அவனை அழைத்து அவர்கள், ''எனக்கு ஓர் ஆட்டை விலைக்குக் கொடுக்கிறாயா?'' என்று கேட்டார்கள். அவன், ''ஆடுகள் எனக்குச் சொந்தமானவை அல்ல. நான் ஒருவருக்கு அடிமையாய் இருக்கிறேன்'' என்று கூறினான். ''ஓர் ஆட்டை ஓநாய் கொண்டு போய்விட்டது என்று உன் எசமானிடம் சொல்லிவிட்டேன். அது அவருக்குத் தெரியவா போகிறது?'' என அவனைச் சோதிப்பதற்காகக் கலீபா கூறினார்கள். ''என் எசமானருக்குத் தெரியாமல் போனாலும், இறைவனுக்குமா தெரியாமல் போய் விடும்?'' என்று அவன் கேட்டான். அதைக் காதுற்றதும் கலீபா அவர்கள் அப்படியே அழுது விட்டார்கள். பிறகு அவனுடைய எசமானனை அழைத்து அவனை விலைக்கு வாங்கி, உடனே விடுதலை வழங்கி விட்டு உரைத்தார்கள்: ''நீ சொன்ன அந்தச் சொல் இவ்வுலகில் உனக்கு விடுதலை வழங்கியது. இதுபோல் அது உனக்கு அவ்வுலகிலும் விடுதலை பெற்றுத் தரும்.''

மற்றொரு சமயம் கலீபா நகர் வலம் வந்து கொண்டிருந்தார்கள். அப்பொழுது ஒரு வீட்டிலிருந்து ''மகளே! எழுந்து பாலில் கொஞ்சம் தண்ணீர் கலந்து வை!'' என ஒரு பெண் கூறும் சொல் அவர்களின் செவிகளில் விழுந்தது. ''முடியாது அம்மா! பாலில் தண்ணீர் கலக்கக் கூடாது என்று கலீபா கட்டளையிட்டுள்ளார்கள்'' என்று ஓர் இளம் பெண் பதில் கூறியது அவர்களின் காதில், விழுந்தது. உடனே கலீபா அங்கு நின்று கொண்டு, அடுத்து என்ன நடக்கிறது என்று கவனித்தார்கள். ''நீ பாலில் தண்ணீர் கலப்பதை இந்த நேரத்தில் கலீபா வந்து பார்த்து விடுவார் எனப் பயப்படுகிறாயா?'' என முதிய குரல் கேட்க, ''அப்படி இல்லை அம்மா! கலீபாவின் கட்டளைக்குப் பகலில் தான் கீழ்ப்படிய வேண்டும், இரவில் அதனை அலட்சியம் செய்ய வேண்டும் என்பது நல்லதில்லை அம்மா'' என்று இளம் குரல் பதில் கூறியது.

இந்த உரையாடலை உற்றுக் கேட்டுவிட்டு வீடு திரும்பிய கலீபா அவர்கள் அடுத்த நாளே அந்த இளம் பெண்ணை வரவழைத்து அவளைப் பாராட்டியதுடன், அவளைத் தம் மருமகளாகவும் ஆக்கி மனம் மகிழ்ந்தார்கள்.

## உழைப்பின் உயர்வு

உழைத்து உண்பதைக் கலீபா அவர்கள் அதிகம் உவந்தார்கள். உழைப்பின்றி வருவதை மக்கள் அதிருஷ்டம் என்று நம்பிக் கொண்டிருக்கின்றனர். ஆனால் கலீபா அவர்கள் ''உழைப்பு அதிருஷ்டத்தின் திறவுகோல்'' என்று உறுதியாக உரைத்தார்கள். அதனால் அவர்கள் தாம் உழைத்துக் கொண்டேயிருக்க வேண்டும் என விரும்பினார்கள். ''நான் என்னுடைய உழைப்பினாலும், முயற்சியினாலும் உணவைத் தேடிக் கொண்டிருக்கும் இடத்தில் எனக்கு இறப்பு வந்து விடுவது (அல்லாஹ்வுடைய பாதையில் போர் புரிவதைத் தவிர்த்து) மற்ற எல்லா இடங்களையும் விட எனக்கு மிகவும் விருப்பமானதாகும்'' என்று கூறிவிட்டு, ''இன்னும் எத்தனையோ பேர் பூமியில் அல்லாஹ் வின் அருளைத் தேடிச் சுற்றித் திரிகின்றனர்'' என்னும் இறை வசனத்தைச் சொல்லிக் காட்டினார்கள். உழைக்காமல் இருப்பதை அவர்கள் அதிகம் வெறுத்தார்கள். உங்களில் ஒருவர் ''அவருடைய உலக சம்பந்தமான அலுவலிலோ, மறுமை சம்பந்தமான அலுவலிலோ இல்லாமல், ஓய்ந்தவராக (வெறுமனே) இருப்பதைப் பார்க்க நான் வெறுக்கிறேன்'' என்றும் அவர்கள் தம் கொள்கையைக் கூறினார்கள்.

தமக்காகவும், தம் ஆதரவை எதிர்பார்த்திருப்பவர்களுக்காகவும், உழைக்காமல் வணக்கம் புரிவதாகப் பாசாங்கு செய்பவர்களையும் அவர்களுக்கு அறவே பிடிக்காது. அண்ணல் நபி (ஸல்) அவர்கள் உயிர் வாழும் போது நடந்த நிகழ்ச்சி இது: ஒருவர் மதீனா வந்து அண்ணல் நபி (ஸல்) அவர்களின் வீட்டு வாயிலில் அமர்ந்திருந்து கொண்டு திக்ரு செய்வதை வழக்கமாக்கிக் கொண்டார். அவரை உமர் (ரலி) அவர்கள் கவனித்தார்கள், அவரின் பக்தியில் அவர்களுக்கு சந்தேகம் ஏற்பட்டது. ''இவர் வெளிப்பகட்டுக்காரர் போன்றல்லவா, உரத்த குரலில் திக்ரு செய்து கொண்டிருக்கிறார்'' என்று கூறினார்கள். அருகிலிருந்த அண்ணல் நபி (ஸல்) அவர்கள், ''அப்படி அல்ல. அவர் அவ்வாஹீன்களைச் சேர்ந்தவர்'' என்று அறிவித்தனர்.

உண்மையில் இவர் அப்துல்லாஹ் துல்பஜாதீன் என்பவர் ஆவார். தந்தையை இழந்த இவரை அவரின் சிறிய தந்தை வளர்த்து வந்தார். இவர் இஸ்லாத்தைத் தழுவி விட்டார் என்பதை அறிந்ததும், அவரை, இவரின் சிறிய தந்தை ஆடைகளைக்கூடப் பறித்துக் கொண்டு விரட்டிவிட்டார். இவர் மதீனா வந்து அண்ணல் நபி (ஸல்)



அவர்களின் வீட்டு வாயிலில் அமர்ந்து திக்ரு செய்வதை வழக்க மாக்கிக் கொண்டார்.

''நாங்கள் அல்லாஹ்வை நம்பியிருக்கிறோம்'' என்று கூறி சிலர் உழைக்காமல் இருப்பதும் கலீபா அவர்களுக்குக் கட்டோடு பிடிக்காது. ஒரு சமயம் அவர்கள் யமன் வாசிகள் சிலரைச் சந்திக்க நேர்ந்தது. அவர்களைப் பார்த்து அவர்கள், ''நீங்கள் யார்?'' என்று கேட்டார்கள். ''நாங்கள் அல்லாஹ்மீது நம்பிக்கை வைக்கக் கூடிய முதவக்கிலூன்கள்'' என்று அந்த யமன் வாசிகள் பதில் கூறினர்.

அதைக் கேட்டுக் கலீபா அளித்த பதில் இது: ''நீங்கள் பொய் யுரைக்கிறீர்கள். நீங்கள் முதவக்கிலூன்கள் அல்லர். 'முதவக்கில்' என்பவர் தம் தானிய விதையை பூமியில் போட்டுவிட்டு, அல்லாஹ் மீது நம்பிக்கை வைப்பவர். நீங்கள் சோம்பேறிகளாகக் காலம் கழிக்கிறீர்கள். உங்களின் சுமையை மற்றவர்கள் சுமக்கச் செய் கிறீர்கள். மற்றவர்கள் சம்பாதிக்கிறார்கள், நீங்கள் சாப்பிடுகிறீர்கள். வேலை செய்யாத வீண் மனிதர்களாகிய நீங்கள், ''நாங்கள் இறைவனை நம்பியிருக்கிறோம்'' என்று கூறுவதைக் கேட்டு நான் வியப்படை கிறேன். நீங்கள் பெருமைக்குரியவர்கள் அல்லர். விவசாயம் செய்பவர்களிடம் செல்லுங்கள்! அவர்களிடம் பாடம் கற்றுக் கொள்ளுங்கள்! விவசாயிகள் உழுகிறார்கள், விதைக்கிறார்கள், நீர் பாய்ச்சுகிறார்கள், அதன்பின் ஆண்டவனை நம்பியிருக்கிறார்கள். வணிகர்களைப் பாருங்கள்! இலட்சக்கணக்கான திர்ஹங்கள் மதிப்புள்ள சாமான்களைக் கப்பலில் ஏற்றிக் கொண்டு, தொலை நாடுகளுக்குச் செல்கிறார்கள். கடலில் புயல் போன்ற எத்தனையோ ஆபத்துக்களைச் சந்தித்து, அந்நிய நாடுகளில் அந்தச் சாமான்களை விற்று இலாபம் சம்பாதிக்க எண்ணுகிறார்கள் கப்பல் கடலில் செல்லும் போது அல்லாஹ்வை நம்பியிருக்கிறார்கள்.''

இன்னொரு சமயம் அவர்கள் மக்களைப் பார்த்துக் கூறிய அறிவுரை இது: ''சம்பாத்திய முயற்சியில் ஈடுபடாமல் உங்களில் எவரும் முடங்கிக் கிடக்க வேண்டாம்! முயற்சி செய்யாமல் வீட்டிற் குள் உட்கார்ந்து கொண்டு, ''அல்லாஹ்! எனக்கு வருவாயைக் கொடுப்பாயாக! என்று இறைஞ்சுவதில் அர்த்தமே இல்லை. வானம் பொழிகிறது என்பது உங்களுக்குத் தெரியும். எதைப் பொழிகிறது, நீரைத்தான் பொழிகிறது, பொன்னையும் பொருளையும் பொழிய வில்லை. எனவே நீங்கள் ஒவ்வொருவரும் சம்பாதிக்க வேண்டும் வானத்தைப் பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருப்பதில் பயனில்லை.''

உழைக்கும்போது பிறர் உதவியை நாடவேண்டியதில்லை என்றும் கலீபா கருதினார்கள். ஒரு நாள் அவர்கள் ஜைத் பின் முஸ்லிமா தம் வயலில் நாற்று நடும் வேலையில் ஈடுபட்டிருப்பதைப் பார்த்தார்கள். ''ஜைதே! நீர் நல்லவிதமாக நீர் பாய்ச்சிப் பயிர் செய்ய வேண்டும்! அவ்விதம் நீர் செய்தால், மக்களிடமிருந்து எவ்வித உதவியையும் எதிர்பார்க்காமல் நீர் தனித்து நிற்க முடியும்'' எனப் பகர்ந்தார்கள்.

உழைத்து உண்பதைக் கலீபா புனிதப் போருக்கு நிகராகக்கூடக் கருதினார்கள். ஒரு நாள் ஆடு மேய்த்து உயிர் வாழ்ந்த ஒருவர் அவர்களிடம் வந்து, ''அமீருல் முஃமினீன் அவர்களே! நான் புனிதப் போரில் பங்கு கொள்ள விரும்புகிறேன். எனக்கு அனுமதி தாருங்கள்!'' என வேண்டினார். ''நீர் இப்பொழுது ஈடுபட்டிருப்பதும், நன்னெறியில் வாழ்கிற நற்பணியேயாகும். இது புனிதப் போரில் ஈடுபடுவதற்கு ஈடானது. இது நற்பேற்றையும், கூலியையும் நல்கக் கூடிய கண்ணியமான வேலையுமாகும். எனவே நீர் திரும்பிச் சென்று உம்முடைய பழைய பணியையே மேற்கொள்ளும்!'' என அவருக்குக் கலீபா ஆலோசனை கூறினார்கள்.

ஒரு நாள் ஜகாத் வரி வசூலிக்கும் பணிபுரிந்து வந்த சுப்யான் பின் மாலிக் கலீபா அவர்களிடம் வந்து, ''அமீருல் முஃமினீன் அவர்களே! என்னையும் புனிதப் போருக்கு அனுப்பி வையுங்கள் அதில் பங்கு கொள்ளும் வாய்ப்பை எனக்கு வழங்குங்கள்!'' என வேண்டினார். ''நீர் இப்பொழுது புனிதப் போரில் ஈடுபட்டிருக்க வில்லையா? ஜகாத் வசூலிப்பதும் புனிதப் போருக்கு இணையானது தான்'' என அவருக்கு அவர்கள் அறிவுரை பகர்ந்தார்கள்.

## இரப்பதன் இழிவு

இரந்து உண்பதைக் கலீபா இழிவாகக் கருதினார்கள். ''வேலை எவ்வளவு தாழ்ந்ததாயினும், அது பிறரிடம் இரப்பதைவிட மேலானது'' என்று அவர்கள் கூறுவது வழக்கம். ''இரந்து உண்பதை விட ஹலாலானதா, ஹராமானதா என்று சந்தேகிக்கும்படியான ஒரு பொருளை உண்பது மேல்'' என்றும் அவர்கள் கூறுவதுண்டு. ''ஒருவரைக் கண்டால், 'உம் ஜீவனாம்சத்திற்கு உழைக்கிறீரா?' என்று கேட்பேன். அவர் 'இல்லை' என்று கூறினால், அவர் என் மதிப்பில் குறைந்து விடுவார். அவரைப் பார்ப்பதை விட்டும் என் பார்வையைத் தாழ்த்திக் கொள்வேன்'' என்றும் அவர்கள் கூறுவார்கள். உழைக்க



இயன்றும், பிறரிடம் இரப்பவரைப் பார்த்தால் அவர்களுக்கு அறவே பிடிக்காது. ''முஸ்லிம்கள், மீது உங்களை ஒரு சுமையாக ஆக்கிக் கொள்ளாதீர்கள்!'' என்று அத்தகையவர்களிடம் அவர்கள் உரைப்பதுண்டு. உழைக்க உடலில் வலுவிருந்தும், உழைக்காமல் இரந்து உண்பவர்களைக் கண்காணிக்கும்படி அவர்கள் தம் அதிகாரிகளுக்குக் கட்டளையிட்டிருந்தார்கள். அத்தகையவர் தொகை வளர்வதோ, அத்தகைய மனநிலை வளர்வதோ, சமூக மேம்பாட்டிற்கு நல்லதல்ல என்று கருதித்தான் அவர்கள் இந்தக் கட்டளையை இட்டிருந்தார்கள்.

உணவு இல்லாதவர் யாசிப்பதை அவர்கள் அனுமதித்தார்கள், உணவு உள்ளவர் யாசிப்பதை அவமதித்தார்கள். ஒருநாள் அவர்களிடம் ஒருவர் வந்து உண்பதற்கு ஏதாவது தரும்படி இரந்தார். கலீபாவின் கண்கள் அவர் பைநிறைய மாவு வைத்திருப்பதைப் பார்த்து விட்டன. அதனால் அவர்கள், அவருக்கு எதுவும் கொடுக்காமல் தம் வேலையைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அவர் கலீபாவின் கவனத்தைத் திருப்பி, தமக்கு உண்பதற்கு ஏதாவது தரும்படி வேண்டினார். கலீபா எழுந்தார்கள், அவர் கையிலிருந்த பையைப் பறித்து, அதிலிருந்த மாவை ஒட்டகை முன் கொட்டி விட்டு, ''இப்பொழுது நீர் ஏழை. தாராளமாக யாசிக்கலம்'' என மொழிந்தார்கள்.

இன்னொருநாளும் இப்படித்தான் ஒருவர் வந்து அவர்களைப் பார்த்து, ''பசிக்கிறது'' என்றார். அவருக்கு அவர்கள் வயிறார உணவு கொடுக்கச் சொன்னார்கள். அதன்படி அவருக்கு உணவு கொடுக்கப் பட்டது. சற்றுநேரம் கழித்து அவர்கள் சதகா ஒட்டகைகள் அடைக்கப்பட்டிருந்த கொட்டிலுக்குச் சென்றபோது அங்கு அந்த யாசகர் நிற்பதைக் கண்டார்கள். அவர் போவோர், வருவோரிடமெல்லாம் ''பசிக்கிறது. உணவு தாருங்கள்!'' என்று கேட்டுக் கொண்டிருந்தார். அவரை அவர்கள் அழைத்து வரச் சொல்லி, அவர் வந்ததும் அவர் பையைச் சோதனையிட்டார்கள். பையில் ஏராளமான ரொட்டிகள் இருந்தன. ''இவர் யாசகர் அல்ல, ரொட்டி வியாபாரி'' எனக்கூறி, அவரிடமிருந்த ரொட்டிகளைப் பறித்து ஒட்டகைகள் முன் கொட்டும் படிக் கூறினார்கள்.

எவரும் பிறரிடம் இரக்கக் கூடாது என்பதில் கண்டிப்பாய் இருந்த கலீபா அவர்கள், தாமும் எவரிடமிருந்தும் எந்தப் பொருளையும் சிறு உதவியையும் கூடப் பெறலாகாது என்பதிலும் மிகவும் கண்டிப்பாய்

இருந்தார்கள். ஒருநாள் அவர்களிடம், அவர்களின் உறவினர் அனுப்பிய ஆள் ஒருவர் வந்தார். அவர் அவர்கள்முன் உயர்வகைப் பழங்கள் சிலவற்றை நீட்டி, அவற்றைக் கொடுத்தவரின் பெயரைச் சொல்லி, ''இவற்றைத் தங்களிடம் சேர்ப்பிக்க வந்திருக்கிறேன்'' என்றார். அந்தப் பழங்களில் ஒன்றை எடுத்து முகர்ந்து பார்த்து! ''இவை நல்லரகப் பழங்கள்'' எனப் பகர்ந்து, ''இவற்றை எனக்குக் கொடுத் தனுப்பியவரிடமே கொடுத்துவிடும், அவருக்கு என் நன்றியைத் தெரிவியும்!'' என்றார்கள் அவர்கள். அதைக் கேட்டு அந்த ஆள், ''அமீருல் முஃமினீன் அவர்களே! இவற்றை ஏன் திருப்பி அனுப்பு கிறீர்கள்? இவற்றைத் தந்தவர் உங்களின் உறவினர் ஆயிற்றே. அல்லாஹ்வின் தூதர் அவர்கள் கூட இவ்வித அன்பளிப்புகளை ஏற்றுக் கொண்டிருக்கின்றனரே. அதனால் நீங்களும் இவற்றை ஏற்றுக் கொள்ளலாமே'' என்று கூறியபோது, ''நீர் சொல்வதெல்லாம் சரிதான். அல்லாஹ்வின் தூதர் அவர்களுக்கு அளிக்கப்பட்டவை அன்பளிப் புகள். ஆனால், நம் போன்றவர்களுக்கு அளிக்கப்படும் இதைப் போன்றவை கையூட்டு ஆகிவிடுகின்றன'' என்று கூறினார்கள்.

உறவினர் கொடுத்ததை மறுத்த சம்பவம் இது. உறவினர் களுக்குக் கொடுக்க மறுத்த சம்பவங்கள் இவை: ஒரு சமயம் கலீபா அவர்கள் மதீனத்துப் பெண்களுக்குக் கம்பளிப் போர்வைகள் வினியோகித்தனர். அப்பொழுது எல்லோருக்கும் கொடுத்தது போக உயரிய போர்வை ஒன்று எஞ்சியது. அங்கிருந்தவர்களில் சிலர், ''அமீருல் முஃமினீன் அவர்களே! அல்லாஹ்வின் தூதர் பெயர்த்தியும், தங்களின் மனைவியாருமான உம்மு குர்தூம் அவர்களுக்கு அதனை வழங்கி விடுங்கள்!'' என்று கூறினர். ஆனால் கலீபா அதை ஏற்றுக் கொள்ளவில்லை. ''உம்மு சலீதே அதற்குத் தகுதியுடையவர். ஏனெனில் அவர் அல்லாஹ்வின் தூதர் அவர்களிடம் உறுதிப் பிரமாணம் செய்தவர்களில் ஒருவர். அத்துடன் உஹதுப் போரின் போது எங்களுக்குத் தண்ணீர்ப் பையைத் தைத்துத் தந்தவரும் ஆவார்,'' என்று கூறிக் கலீபா, அந்த உயரிய போர்வையை உம்மு சலீது அவர்களுக்கே அளித்தார்கள். மற்றொரு சமயம் இப்படி ஒரு துணி எஞ்சிய போது மக்கள், ''அமீருல் முஃமினீன் அவர்களே! அதனை உங்கள் மருமகள் சபிய்யாவுக்குக் கொடுங்கள்!'' என்று கூறிய போதும் கலீபா அதை ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டார்கள்.

ஒரு பொருளை ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும் என்னும் நிலை ஏற்பட்டால், கலீபா அதை ஏற்றுக் கொள்வது தமக்கு



உகந்ததுதானா எனப் பலமுறை பார்ப்பார்கள். பெரும்பாலும் அவர்கள் ஏற்றுக் கொள்ள மறுத்துத்தான் விடுவார்கள். ''நல்லவற்றில், பத்தில் ஒன்பது பகுதியை நான் விட்டுவிடுகிறேன், கெட்டதற்கு வழி ஏற்பட்டுவிடக்கூடாது என்பதற்காக'' என்று அவர்கள் கூறுவது வழக்கம். இப்படி எச்சரிக்கையுடன் இருந்தும் ஒரு முறை அவர்கள் தவறு செய்ய நேர்ந்து விட்டது. ஒருநாள் அவர்களுக்கு ஒருவர் கொஞ்சம் பால் அன்பளிப்பாகக் கொண்டு வந்து கொடுத்தார். அதைப் பெற்று அவர்கள் அருந்த ஆரம்பித் தார்கள். அது ஒருவிதச் சுவையுடன் இருப்பதை உணர்ந்து, ''இந்தப் பால் எத்தகையது? இது எங்கிருந்து வந்தது?'' என்று அவர்கள் பால் தந்தவரைப் பார்த்துக் கேட்டார்கள். அந்த மனிதர் ஒரு காட்டைக் குறிப்பிட்டு, அங்கு மேய்ந்து கொண் டிருந்த தர்மச் சொத்தைச் சேர்ந்த ஒட்டகைகளிலிருந்து அவற்றை மேய்ப்பவர்கள் கறந்து தமக்கும் கொஞ்சம் கொடுத்ததாயும், அதையே தாம் அவர்களுக்குத் தந்ததாயும் கூறினார். அது, தாம் அருந்தத் தகாத பால் என அறிந்து, அக்கணமே கலீபா தம் தொண்டைக்குள் கையை விட்டு அதைக் கஷ்டத்துடன் வாந்தி எடுத்தார்கள்.

ஒரு சபைக்குத் தாம் செல்லும் போது, அங்கிருக்கும் மக்கள் தமக்கு எழுந்து இடம் கொடுத்தால், அதை ஏற்கக் கலீபா கண்டிப்பாய் மறுத்து விடுவார்கள். அது கூடப் பிறரிடமிருந்து ஒன்றைப் பெறுவது தான் என்று அவர்கள் கருதினார்கள். தம் வேலையைத் தாமே செய்து கொள்வதில் தான் அவர்கள் அதிகம் மகிழ்ச்சியுடைவார்கள். தம் வேலையை எவராவது செய்ய முன் வந்தால், அதை மறுத்து விட்டு, ''எனக்குக் கூலியும் கிடைக்க வேண்டாம், குற்றமும் பிடிக்க வேண்டாம்! அதே நிலையில் நான் உலகை விட்டுச் சென்றால் போதும்'' என்று சொல்வார்கள்.

இப்படி இருந்தால் கலீபா பிறருக்கு எதையும் ஈய மாட்டார் களோ என்று எண்ணினால், அது தவறாகும். அவர்கள் ஈவதைப் புகழ்ந்தும் இருக்கிறார்கள், ஈந்தும் இருக்கிறார்கள். ''நீங்கள் நரகத்தை விட்டும் தப்புவதற்குப் பேரீத்தம் பழத்தில் ஒரு பாதியையாவது ஈயுங்கள்! அது கூட இல்லை என்றால் இனிமையான சொற் களையாவது பேசுங்கள்!'' என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

ஒருநாள் அவர்கள் பாலில் பேரீத்தம் பழங்களை ஊறவைத்து எடுத்து வைத்தார்கள். அப்பொழுது அங்கு யாசகர் ஒருவர் வந்து அவற்றை எடுத்தார். உடனே கலீபா அவற்றை அவருக்குக் கொடுத்து

விட்டார்கள். அதைப் பார்த்தவர்கள் அவ்வளவு உரிமையுடன் கலீபா அருந்தவிருந்த பழங்களை எடுத்த அவர் யார் என அறிய விரும்பி, ''அமீருல் முஃமினீன் அவர்களே! அவர் யார் என்று எங்களுக்குத் தெரியவில்லையே'' என்று கேட்டார்கள். அதற்குக் கலீபா, ''அவருக்கு இறைவனாய் இருப்பவனே அதனை அறிவான்'' என்று கூறினார்கள்.

## அற்புதச் செயல்கள்

இந்த அற்புத மனிதர் செய்த அற்புதங்கள் அனந்தம் அவற்றில் சில இவை :

ஒரு நாள் அவர்கள் மதீனாவின் பள்ளியில் வெள்ளிக் கிழமை குத்பாப் பேருரை நிகழ்த்திக் கொண்டிருக்கும்போது, 'மலைகளைக் கடந்து செல்பவர்களே!' ''யாசாரியா! அல்ஜபல்'' என எவரையோ கூவி அழைப்பது போல் கூறினார்கள். அங்கிருந்த மக்களுக்கு அதன் பொருள் விளங்கவில்லை. ஏனெனில் அது அவர்கள் ஆற்றிக் கொண்டிருந்த உரைக்குச் சம்பந்தமில்லாததாயிருந்தது. தொழுகை முடிந்ததும், அப்துர் ரஹ்மான் இப்னு அவ்ஃப் (ரலி), ''நீங்கள் உரை நிகழ்த்திக் கொண்டிருக்கும்போது, 'மலைகளைக் கடந்து செல்பவர்களே!' என்று ஏன் கூறினீர்கள்?'' என்று கேட்டனர். அதற்குக் கலீபா அவர்கள், ''நிவாஹந்தில் இஸ்லாமியப் படை போர் செய்து கொண்டிருப்பதைக் குறிப்பிட்டுவிட்டு, ''அவர்கள் மலைகளைக் கடந்து செல்கிறார்கள். அவர்களின் பின்புறம், அவர்களின் பகைவர்கள் வந்து கொண்டிருக்கின்றனர். ஆனால் அவர்களை, முஸ்லிம் வீரர்கள் பார்க்கவில்லை, அதைக்கண்டு 'அவர்களுக்கு எச்சரிக்கை விடுத்தேன்'' என்றார்கள். உண்மையில் கலீபா அவர்கள் மதீனாவிலிருந்து எழுப்பிய குரல், காதங்களைக் கடந்து முஸ்லிம் வீரர்களின் காதுகளைச் சென்றடைந்தது என்பது நிரூபணமாகியது. களத்திலிருந்து வந்த தூதன், தாங்கள் அத்தகைய குரலைக் கேட்டதாய்க் கூறிய போது, கலீபா அவர்கள் செய்த எச்சரிக்கையால் முஸ்லிம்கள் அப்போரில் வெற்றி பெற்றனர்.

ஒரு சமயம் மதீனாவில் நில நடுக்கம் ஏற்பட்டது. அப்பொழுது கலீபா அவர்கள், தம் சவுக்கால் தரையில் அடித்து, ''பூமியே ஆடாமல் இரு! நான் உனக்கு நியாயம் செய்யவில்லையா?'' என்று கேட்டார்கள். அக்கணமே நில நடுக்கம் நின்றது.



மற்றொரு சமயம் மதீனாவின் அருகிலிருந்த பொதும்பிலிருந்து நெருப்பு வெளி வந்தது. அதை தமீம் தாரீ (ரலி) அவர்கள் கலீபா அவர்கள் கொடுத்த போர்வையுடன் நெருங்கியபோது, அந்நெருப்பு பொதும்பிற்குள் போய் அவிந்து விட்டது.

சிரியாப் படையெடுப்புக்குப் பெரிய படை கலீபா திரட்டிக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது படையில் சேர சிலர் வந்தனர். அவர்களைக் கலீபா பார்க்கவும் விரும்பாமல் தம் தலையைத் திருப்பிக் கொண்டார்கள். அவர்களைப் படையில் சேர்க்கவும் மறுத்து விட்டார்கள். இது அங்கிருந்த மக்களுக்கு ஆச்சரியத்தை அளித்தது. அவர்கள் ஆச்சரியம் அடைந்திருக்க மாட்டார்கள். அந்த மனிதர்களில் இருந்த இருவர் சில ஆண்டுகளுக்குப்பின் செய்யப் போகும் பாதகச் செயலைக் கலீபாவைப் போல் முன்கூட்டியே அறிபவர்களாய் இருந்திருந்தால். அவர்களில் ஒருவன் இருபது ஆண்டுகளுக்கு பின் உதுமான் (ரலி) அவர்களைத் தன் வாளால் வெட்டிய அஸ்வத் தபீபி, மற்றொருவன் இருபத்து நான்கு ஆண்டுகளுக்குப்பின் அலீ (ரலி) அவர்களைத் தாக்கிய அப்துர் ரஹ்மான் முல்ஜிம் முராதி.

ஓர் இரவு அலீ (ரலி) அவர்களுக்குக் கனவில் தோன்றியதை உமர் (ரலி) அவர்களும் உணர்ந்து கொண்டதாய் ஒரு சம்பவம் கூறப் படுகிறது. அலீ (ரலி) அவர்கள் ஒரு கனவு கண்டனர். அவர்கள் அண்ணல் நபி (ஸல்) அவர்களுக்குப் பின் நின்று தொழுகின்றனர். தொழுகை முடிந்ததும், அண்ணல் மிஹ்ராபில் சாய்ந்து கொண்டிருக் கும்போது, அங்கு ஒரு சிறுமி வந்து, பேரீத்தம்பழத் தட்டு ஒன்றை அவர்கள் முன் வைக்கிறாள். ஒரு பழத்தை எடுத்து அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அலீ (ரலி) அவர்களின் வாயில் போடுகிறார்கள். அடுத்து இன்னொரு பழத்தையும் எடுத்து அலீ (ரலி) அவர்களின் வாயில் போடுகிறார்கள். அத்துடன் அலீ (ரலி) அவர்கள் விழித்துக் கொண்டனர். அப்பொழுது விடிந்தும் விட்டது. இளங்காலைத் தொழுகைக்காக அவர்கள் பள்ளி வந்தனர். உமர் (ரலி) அவர்கள் இமாமாக நின்று தொழுகை நடத்தினார்கள். அவர்களுக்குப் பின்னால் அலீ (ரலி) அவர்கள் நின்று தொழுதனர். தொழுகை முடிந்ததும், கனவில் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் செய்தது போல் உமர் (ரலி) அவர்கள் மிஹ்ராபில் சாய்ந்து உட்கார்ந்தார்கள். அப்பொழுது கனவில் போலவே, ஒரு சிறுமி வந்து, அவர்கள் முன் பேரீத்தம்பழத் தட்டு ஒன்றை வைக்கிறாள். அதிலிருந்து ஒரு பழத்தை எடுத்து உமர் (ரலி)

அவர்கள், அலீ (ரலி) அவர்களின் வாயில் வைத்தார்கள். அப்பொழுது அலீ (ரலி) அவர்கள் இன்னும் அதிகப் பழங்கள் தந்தால் நல்லது என விரும்பிய போது உமர் (ரலி) அவர்கள், ''சகோதரரே! அல்லாஹ்வின் தூதர் அவர்கள் இதற்கு அதிகமாய் உமக்குத் தந்திருந்தால் நானும் தந்திருப்பேன்'' என்றார்கள்.

அதைக் கேட்டு ஆச்சரியமடைந்த அலீ (ரலி) அவர்கள், தாம் கண்ட கனவு பற்றிக் கூறியபோது, உமர் (ரலி) அவர்கள் உரைத்தார்கள், ''அலீயே! மூஃமின், ஈமான் என்னும் ஒளியின் மூலம் பார்த்துக் கொள்கிறான்'' என்று. அதைக் கேட்டு அலீ (ரலி) அவர்கள், ''அமீருல் முஃமினீன் அவர்களே! நீங்கள் உரைப்பது உண்மை. அல்லாஹ்வின் தூதருடைய புனிதக் கைகளால் பெற்ற பேரீத்தம் பழத்தின் இன்சுவை, உங்களின் கைகளிலிருந்து பெற்ற பழங்களிலும் இருக்கக் கண்டேன்'' என்றனர்.

ஒரு நாள் ஹாபிஸ் பின் சஃத் தாயீ என்பவர் உமர் (ரலி) அவர்களிடம் வந்து தாம் சூரியனுக்கும், சந்திரனுக்குமிடையே சண்டை நடப்பதுபோலவும், இரண்டின் கட்சியிலும் நட்சத்திரங்கள் சேர்ந்து கொண்டது போலவும் கனவு கண்டதாய்க் கூறினார். அதைக் கேட்டு உமர் (ரலி) அவர்கள், ''நீர் எந்தக் கட்சியில் சேர்ந்திருந்தீர்?'' என்று வினவினார்கள். ''நான் சந்திரனுடைய கட்சியில் சேர்ந்திருந்தேன்'' என்று அவர் கூறினார். ''இனி உம்மை நான் எந்த வேலைக்கும் அனுப்பமாட்டேன். ஏனெனில் நீர் இருளின் அடையாளத்துடன் சேர்ந்துவிட்டீர்'' என்றார்கள். உண்மையில் அவர், அவர்கள் கூறியதுபோலவே அலீ (ரலி) அவர்களுக்கும் முஆவியா (ரலி) அவர்களுக்கும் நடந்த சிஃப்பீன் போரில் முஆவியா (ரலி) அவர்கள் பக்கம் நின்று போரிட்டு இறந்தார்.

உமர் (ரலி) அவர்கள் கலீபாவாக இருந்தபோது நடந்த உரையாடல் ஒன்றை ஒருவர் கீழ் வருமாறு கூறுகிறார்: ''உமர் (ரலி) அவர்களுடன் நாங்கள் அமர்ந்திருந்தோம். 'குழப்பத்தைக் குறித்து அல்லாஹ்வின் தூதர் அவர்கள் கூறியிருப்பதைப் பாடமிட்டிருப்பவர் உங்களில் எவர்?' என்று உமர் (ரலி) அவர்கள் வினவினார்கள். 'அல்லாஹ்வின் தூதர் அவர்கள் கூறியதுபோலவே நான் பாடமிட்டிருக்கிறேன்' என்று நான் கூறினேன், 'நிச்சயமாக நீர் அதில் துணிந்திருக்கிறீர்' என்று உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள், 'ஆடவனுக்கு பித்னா (குழப்பம்) அவன் மனைவியில், அவன் சொத்தில், அவன் மக்களில், அவன் அயலகத்தாரில் இருக்கிறது. தொழுகையும், நோன்பும், தானமும், ஏவல் விலக்கலும் அதனைப் பரிகரிக்கும்' என்று நான் கூறினேன். 'இதனை நான் நாடவில்லை. கடல் அலை மோதுவது போல் மோதுகிற பித்னாவைப் பற்றி நான் கேட்கிறேன்' என்று உமர் (ரலி) அவர்கள் உரைத்தார்கள். அமீருல் 'முஃமினீன் அவர்களே!, தங்களுக்கு அதைப் பற்றி அச்சமில்லை. நிச்சயமாகத் தங்களுக்கும் அதற்கும் இடையில் பூட்டப்பட்டுள்ள தலைவாயில் இருக்கிறது' என்று ஹீதைபா (ரலி) கூறினர். 'அது முறியடிக்கப்படும்' என்று ஹுதைபா (ரலி) அவர்கள், பதில் அளித்தனர். 'அவ்வாறாயின் அது ஒருபோதும் பூட்டப்படாது' என்று உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்.

தம் காலத்தில் குழப்பம் வராது என்பதையும், தமக்குப் பின் குழப்பம் வரும் என்பதையும், அது ஒருபோதும் முடிவுறாது என்பதையும் அவர்கள் அறிந்திருந்தார்கள்.

## மனைவி மக்கள்

உமர் (ரலி) அவர்கள் இஸ்லாத்தைத் தழுவுவதற்குமுன் மூன்று பெண்களை மணம் செய்திருந்தனர். அவர்களில் இருவர் இஸ்லாத்தைத் தழுவவில்லை. அதனால் மணவிலக்கு அளிக்கப்பட்டனர்.

ஜைனப் – இவர் இஸ்லாத்தைத் தழுவினார். இவர் பெற்ற பிள்ளைகள் அப்துல்லாஹ், ஹப்ஸா ஆகியோர்.

குரைபாஹ் பின்த் அபீ உமையா. இவர் இஸ்லாத்தைத் தழுவவில்லை.

ஆத்திக்கா – இவர் இஸ்லாத்தைத் தழுவவில்லை. அதனால் மணவிலக்கு அளிக்கப்பட்டார். இவர் பெற்றபிள்ளை உபைதுல்லாஹ்.

உமர் (ரலி) அவர்கள் இஸ்லாத்தை ஏற்ற பின் மூன்று பெண்களை மணந்தனர்.

உம்மு ஹக்கீம் பின்துல் ஹாரித் – இவர் பெற்ற பிள்ளை பாத்திமா.

ஜமீலா பின்த் ஆஸிம்–இவர் மணவிலக்கு அளிக்கப்பட்டார். இவர் பெற்ற பிள்ளை ஆஸிம்.

உம்மு குல்தூம் பின்த் அலீ – இவர் பெற்ற பிள்ளைகள் ருகையா, ஜைது.

அபூ ஷஹ்மா, முஜீர் என்னும் புதல்வர்களும் உமர் (ரலி) அவர்களுக்கு இருந்தனர். அவர்கள் எந்த மனைவிக்குப் பிறந்தவர்கள் என்பது தெரியவில்லை.